Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 வெள்ளி - 27 29 - 04 செப்ரெம்பர் 2003

## முஸ்லிம்களும்...





## பாடசாலை போகவேணும்

புதிய தொடர்...



## 'இடைவெளிகள்' ஆராய்வு

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 29.08.2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# சமாதானப் புறாவும் பேரினவாதக் கழுகும்

வடக்கு-கிழக்கு மாகாணங்களை தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களாக ஏற்றுக்கொள்வதில் பெரும்பாலான சிங்களத்தலைமை களுக்கும், பௌத்தமதபீடங்களுக்கும் எந்தக்காலத்திலும் மனப்பூர்வமான உடன்பாடோ, கருத்து நிலைப்பாடோ இருந்ததுகிடையாது.

தமிழ் மக்களுக்கென உரித்துடைய பாரம்பரிய வாழ்விடப்பிரதேசமென எந்தவொரு நிலத்துண்டையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் எக்காலத்திலும் தயாராக இருந்ததும் இல்லை.

சாதர்ரண மனித உரிமைகள், அரசியல் உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகளில் கூட, தமக்குக்கீழ்பட்டுவாழும் இரண்டாந்தர பிரசைகளாகத் கூட தமிழ்மக்களை அவர்கள் கருத்திலெடுக்க முயன்றதும் இல்லை.

சம அந்தஸ்து, பொதுவுடமை, சமதர்மம் என்றெல்லாம் வாய்கிழிய மேடைகளில் முழங்கி புரட்சிவாதம் பேசிய இடதுசாரித்தலைமைகள் கூட, பதவிக்கதிரைகளில் சொகுசு சுகம் அனுபவிக்கும் வாய்ப்புக்கிடைத்ததும் சாதாரண மூன்றாந்தரவகுப்புவாத அரசியல்வாதம் பேசும் இனவாதிகளாக தமது சுயரூபத்தை இனம்காட்டிக்கொண்ட பரிதாபமும் சிறிலங்காவில்தான் சிறப்புற அரங்கேறியது.

பண்டாரநாயக்க காலத்து 'மொழிவெறி'யீனத்தை கண்டித்து ஒரு மொழியெனில் இருநாடு, இருமொழியெனில் ஒருநாடு என்று தத்துவம் பேசிய ட்ரொஸ்கியவாதியான கொல்வின் ஆர்.டி சில்வா கூட, தனக்கு இந்த நாட்டின் குடியரசு அரசியல்யாப்பை உருவாக்குவதற்கான வாய்ப்புகிடைத்தபோது அவரால் சமதர்மம் குறித்து சிந்திக்கமுடியாமலேபோய்விட்டது.

பௌத்த சிங்கள நலன் காக்கும் அரசியல் யாப்பொன் றையே அவரால் எழுதக்கூடியதாயிற்று. அந்த அளவுக்கு கொள்கை மற்றும் இலட்சியங்களில் பலவீனர்களாகவும், போலிகளாகவுமே அவர்கள் விளங்கினர்.

இது வரலாறு நமக்கு உணர்த்தும் உண்மை. அதிகாரம் பலவீனமான நிலையில் இலட்சியம் பேசும் சிங்களத்தலைமைகள் அதிகார பலம் கொண்டவர் களாகும்போது இலட்சியத்தை அலட்சியம் செய்வதையே இலட்சியமாகக் கொண்டவர்களாகி விடுகின்றனர்.

இதுவே இன்றைய நெருக்கடிகளுக்கும், பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாகும்.


இப்போது வடக்கு கிழக்கை பிரிப்பதில் தீவிரம்காட்டும் சந்திரிகாவும், வடக்கும் கிழக்கும் இன்னமும் அரசமைப்பு ரீதியில் தனித்தனியாகவே உள்ளன என்று கூறும் அவரது பொ.ஐ.முன்னணியினரும் சமாதானம் குறித்துப்பேசுவது தான் கோமாளித்தனமானதாகும்.

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடத்தை ஏற்காத எந்தத்தீர்வும் சமாதானத்தை கொண்டுவராது என்பதை நன்கு உணர்ந்தும் அவர்கள் இப்படிக்கூறுவது அமைதித் தீர்வில்- அரசியல் தீர்வில் அவர்களுக்குள்ள நம்பிக்கையின்மையையே உறுதி செய்கிறது.

இந்த நிலையில் இரண்டு மூன்று மாதங்களில் நாட்டில் மீண்டும் பாரியயுத்தம் வெடிக்கும் என்று அநுரபண்டாரநாயக்க கூறியுள்ளமை குறித்து அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் போன்ற சமாதானத்தை வலியுறுத்தும் நாடுகள் கவனத்தில்கொள்ளவேண்டியது அவசியம்.

மீண்டும் தனது ஆட்சிக்கால 'சமாதானத்திற்கான போரை' ஆரம்பிக்க சந்திரிகா திட்டமிட்டுள்ளார் என்பதையே அவரது அருமைச்சகோதரரும் அடுத்த சனாதிபதியாக கனவுகண்டுகொண்டிருப்பவருமான அநுராவின் கூற்று உறுதிப்படுத்துகிறது என்றும் கருத்தில்கொள்ளலாமல்லவா?

ஆக சமாதானப்புறாவை இலக்கு வைத்துக்கொண்டு பேரினவாதக் கழுகு காலம்பார்த்து வட்டமிட்டவண்ணமேயுள்ளது.




## தூரனின் பார்வையில்

# தமிழ்மக்களின் அறிவையும் மனதையும் கொல்லும் கலாச்சார சீரழிவு ஊடுருவல்கள்

கலாச்சாரமற்ற இனம் ஒரு மந்த புத்தியுள்ள இனம். அதேபோன்று கலாச்சார மற்ற படை ஒருமந்தபுத்தியுள்ள படையே யாகும்.

ஒரு இனத்தின் தனித்துவம் அதன் கலாச்சாரத்தனித்தன்மையின் அடிப்படை யிலேயே தங்கியுள்ளது.

இதன் காரணமாகவே, ஒருஇனத்தை அழிக்க வேண்டுமாயின் அதன் கலாச்சாரத்தை அழித்துவிட்டாலே போதுமானது என்பதை ஆக்கிரமிப்பாளர்கள் தமது கோட்பாடாகவே கொண்டுள்ளனர்.

அந்நிய சக்தி களின் ஆக்கிரமிப்புக் குள்ளாகும் எந்த ஒரு இனமும் ஆக்கிரமிப் பாளர்களால் அறிவையும் மனதையும் வெல்லும் (Winning Hearts And Minds) நடவடிக்கை என்ற பெயரில் ஒருவிதமான உளவியல் நடவடிக்கைக்கு திட்டமிட்டவகையில் உள்ளாக்கப்படுவது வழக்கம்.

இது அந்த இனத்தின் இயல்பை, கலாச்சாரத்தனித்துவத்தை பண்பாட்டுச்சிறப்பை, பாரம்பரியச் செழுமையை மெல்லமெல்ல ஊடுருவி, அவற்றை நிர்மூலமாக்கும் ஒரு தொலைநோக்குச்செயற்பாட்டை கொண்டதாகும்.

ஆக்கிரமிப்புக்குள்ளாகும் மக்கள் அவலங்களுக்குள்ளாகி அந்தரப்பட்டு பீதியுடன் இருக்கும் நிலையில் அவர்களின் அந்த நேர பலவீனங்களைப்பயன்படுத்தி அவர்களுள் - அவர்களின் அன்றாட வாழ்வுள் ஊடுருவும் இந்த 'கலாச்சார' அழிப்பு நடவடிக்கையாளர்கள், அவர்களின் இனத்தனித்துவத்தை இலக்கு வைத்தே செயற்படுவார்கள்.

போர்த்துக்கேய காலம் முதல்கொண்டு ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எனத்தொடர்ந்து வந்த ஆக்கிரமிப்பாளர்கள் அனைவரும் இதே யுத்தியையே கையாண்டு எமது இனத்தனித்துவத்தை சிதைத்து எமக்குள் தமது இன-மத-கலாச்சார விதைகளை தூவிவிட்டே சென்றுள்ளனர். அவை எமக்குள் ஆழவேரூன்றி விருட்சமாக இல்லாவிட்டாலும், மரமாகவேனும் வளர்ந்தே உள்ளது.

மேற்கத்திய ஆதிக்கசக்திகளின் வெளியேற்றத்தின் பின், உள்ளூர் மேலாதிக்க பேரினவாதிகளும்,இந்திய வல்லாதிக்க சக்தியும் இதே யுத்திகளையே அவரவர் அபிலாசைகளின் நோக்க இலக்குக்களுக்கேற்ப கையாண்டனர்.

இந்தியப்படையின் வெளியேற்றத்தின் பின்னர் அதனால் ஏற்பட்ட கலாச்சார - பண்பாட்டு சீரழிவில் இருந்து நாம் மீண்டு நமது அடையாளங்களை உறுதிசெய்ய பலகாலம் எடுக்கவே செய்தது.

எனினும் அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்களாகவே இன்னமும், அவர்களின் எடுபிடிகளாகச்செயற்பட்ட சமூக - தேசவிரோத சக்திகள்- தமிழ்க்குழுக்கள் என்ற பெயரில் இந்திய, சிங்கள அரசுகளுக்கு முகவர்களாகவும், துணைப்படையாகவும் இயங்கி எமது இன கலாச்சார தனித்துவத்தை தொடர்ந்தும் சீரழித்து வருகின்றனர் என்பது தெரிந்த விடயமேயாகும்.

இந்த சமூக விரோத சக்திகளின் அனுசரணையுடன் தான் ஆக்கிரமிப்பாளர்கள் எமது கலாச்சார அடையாளங்களைச் சிதைப்பதற்கான ஊடுருவல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மதுபாவனை, போதைப்பொருள் பரம்பல், ஆபாசச்சினிமாப் படங்களின் வருகை போன்றவை யாழ்குடா ஆக்கிரமிப்பின் பின் இங்கு அதிகரிக்கத்தொடங்கின. இது ஒரு திட்டமிட்ட உளவியல் நடவடிக்கையாக மேற் கொள்ளப்பட்டது.

ஒரு ஏழாண்டு காலப்பகுதிக்குள் அது ஒரு கொடிய விஷக்காய்ச்சல் போன்றே நீக்க முடியாத அளவுக்கு பரவிவிட்டுள்ளமையின் பிரதிபலிப்பை நாம் தெளிவாகவே உணரக் கூடியதாக உள்ளது.

அன்றாடம் ஊடகங்களினூடாக வெளியாகும் செய்திகள் அனைத்தும் அதிர்ச்சி தருவனவாக மட்டுமல்ல அவமானம் தருவன வாகவும் உள்ளன.

இந்த கலாச்சார சீரழிவு ஊடுருவல் களின் பாதிப்புகள் மிக ஆழவேரூன்றி அகலக் கிளை பரப்பியுள்ளமையே அன்றாட நிகழ்வுகள் உணர்த்துவதாகவும் உள்ளன.

- போதைவஸ்த்துப்பாவனை இளம் சமூகத்தவரிடையே பெருமளவில் பரவி விட்டுள்ளது.

- பெண்கள் மத்தியிலும் மது பாவனை அதிகரித்துள்ளது.

- குடும்ப உறவுகள் சீர்கெட்டு விவாகரத்து போன்றவை தீவிரமாகியுள்ளது.

- பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள் வல்லுறவுகள் பரவலாக நடந்து வருகின்றன.

- குற்றச்செயல்கள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நடைபெற்று வருகின்றன....

- இளையோர் மூத்தோரை மதிக்கும் பண்பாடு அற்றுவிட்டது.

- சமூக விரோதிகளின் ஆக்கிரமிப்பு சக்திகளின் அனுசரணையுடனும் அங்கீகாரத்துடனும் குழுக்களாக ஆயுதங்களுடன் இயங்கி வருகின்றமையானது சாதாரணமக்களின் பொது வாழ்விற்கு அச்சுறுத்தலாகியுள்ளது.

- மது வியாபாரநிலையங்களும், மூன்றாம் தர திரைப்படங்களை திரையிடும், மினிசினிமாக்களும், சட்டவிரோத போதைப்பொருள் விற்பனையாளர்களும் பெருகிப்பரந்துள்ளார்கள். இது ஆபத்தான, ஆரோக்கியமற்ற ஒரு நிலையாகும். எமது இனத்தனித்துவம், கலாச்சாரச் சீரழிவின் அடிப்படையில் இழக்கப்பட்டுவருகிறது என்பது மறுக்கப்படமுடியாத ஒன்றாகவே உள்ளது.

-யாழ்குடாநிலைமைதான் ஆக்கிரமிப் பாளர்களால் இவ்வாறு சீரழிந்துள்ளது என் றால், சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் தமிழ் மக்களின் பண்பாட்டை சீரழிக்கும் வகையில் சிங்களப்பட முதலாளிகளும் தமிழ் மக்களை வக்கிரமனமுள்ளவர்களாக மாற்றியேனும் பணம் தேடநினைக்கும் தமிழ்த் திரையரங்கு முதலாளிகளும் இறக்குமதி செய்து திரையிடும் படங்கள் இந்திய - தமிழக நச்சுக் கலாச்சார ஆபாசக் கலை வளர்ச்சியின் - கீழ்த்தரமான சிந்தனையை இங்கு பரப்புபவையாகவேயுள்ளன. இங்கும் பாதிக்கப்படுபவர்கள் தமிழ்மக்களே.

இதனை சிங்கள அரசும் மௌனமாக அங்கீகரித்தேயுள்ளது. பத்திரிகைகளில் வெளியாகும் திரைப்பட வெளியீடுகள் பற்றிய விளம்பரங் களைப்பார்த்தால் நமது இனம் எதிர்கொண்டு வரும் சீரழிவைப்புரிந்து கொள்ளமுடியும். இத் தகைய திரைப்படங்கள் குறித்து கண்டித்து கட்டுரைகளை வெளியிடும் கொழும்பு தமிழ் பத்திரிகைகள் கூட, இப்படங்கள் குறித்த விளம்பரங்களை பெருமையுடன் பச்சை அசிங்கத்தனமான - ஆபாச வார்த்தைகளுடன் வெளியிடுவதைப் பார்க்கும் போதுதான் அந்தப் பத்திரிகைகளின் சமூகப் பொறுப்புக் குறித்த சந்தேகமே எழுகிறது.

இதனைவிடவும் இவர்கள் ஒரு விபச்சார விடுதியையே நடத்தலாம்.

அண்மையில் தமிழீழ திரைப்படப்பிரிவு விடுத்துள்ள வேண்டுகோளுடன்கூடிய அறிக்கையில் "தமிழ்ப் பண்பாட்டைத்திட்டமிட்டு சீரழிக்க முயலும் தீயசக்திகளுக்கு துணை போகாதீர்கள்" என்று கோரியுள்ளார்கள்.

தமிழினத்தின் தனித்துவ கலாச்சாரத்தை பேணிப்பாதுகாக்கும் வகையில் தமிழ்ப் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் பணியில் அனைவரும் ஒன்றிணைந்து அக்கறையுடன் பொறுப்பார்வத்துடன் செயற்படவேண்டிய காலகட்டமிதுவாகும்.

தமிழினம் கலாச்சாரமுள்ள ஒரு படையையும் தலைமைத்துவத்தையும் கொண்டுள்ளமையமானதுசர்வதேசம் அறிந்தஉண்மையாகும்.


இந்நிலையில் கலாச்சார சீரழிவுகளுக்கு நாம் ஆளாகி ஒரு மந்த புத்தியுள்ள இனமாக எம்மை இனம் காட்டிக்கொள்ளலாமா?

ஆக்கிரமிப்புச்சக்திக ளினதும் அதன் அடிவருடிகளான சமூக-தேச விரோத சக்திகளினதும் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு - அதாவது தமிழ்மக்களின் அறிவையும் மனதையும் கொல்லும் உளவியல் நடவடிக்கைகளுக்கு (Killing Hearts And Minds) நாம் துணை போகலாமா?

எமது கலாச்சார தனித்துவ அடையாளங்களை நாமிழப் போமேயானால் நம்மை நாமே இழந்தவர்களாகிவிடுவோம்.

# முஸ்லிம்களும் தமிழர்களும்

**நிலாந்தன்**







**"எனக்குத்தெரிந்தவைகளை எல்லாம் நான் உங்களுக்குச் சொன்னால் நீங்கள் அதிகம் அழுவீர்கள் மிகக்குறைந்தளவே சிரிப்பீர்கள்..." - முகமது நபிகள் சீடர்களிடம் கூறியது.**

1990களின் முன்கூறில் பிரேமதாசவுடனான சமாதான காலத்தில் கொழும்பில் ஒரு முஸ்லிம் ஆசிரியர் எனக்குச் சினேகிதமானார். வன்னியில் இருந்து வந்து கொழும்பில் குடியேறியவரான அவர் முஸ்லிம் கொங்கிரசின் ஆசிரியர் சங்கத்தில் ஒரு முக்கிய புள்ளி போலத் தோன்றினார்.

ஒரு நாள் அவருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது முஸ்லிம் மாநிலம் பற்றி விவாதிக்கத்தொடங்கினார். அப்பொழுது நான் கேட்டேன்.... "இலங்கைதீவு முழுவதிலும் உள்ள முஸ்லிம் சனத்தொகையில் 50விகிதத்துக்கும்மேலான தொகையினர் வடக்குக் கிழக்குக்கு வெளியே தீவின் தெற்கில் தான் வசிக்கிறார்கள். இது உங்களுக்குத்தெரியுமா? " என்று. இத்தகவல் அவருக்கு முற்றிலும் புதிதாக இருந்தது. தொடர்ந்து மேலும் கதைத்த போது நான் கேட்டேன்... "கிழக்கில் முஸ்லிம் கிராமங்களும் தமிழ்க்கிராமங்களும் ஒன்றின் அருகே மற்றொன்று அமைந்திருக்கும்விதம் குழல் புட்டும் தேங்காய்பூவும் போன்றது... இது உங்களுக்குத்தெரியுமா?... கிழக்கில் ஒரு முஸ்லிம் கிராமம் அனேகமாக இரண்டு தமிழ்க் கிராமங்களுக்கு இடையில் இருக்கிறது. அல்லது தமிழ் கிராமம் இரண்டு முஸ்லிம் கிராமங்களுக்கு இடையில் இருக்கிறது. இது ஒருவித சான்ட்விச் அமைப்பிலானது. இது உங்களுக்குத் தெரியுமா?" என்று. ஒரு வன்னி முஸ்லிம் ஆகிய அவர் இதையெல்லாம் வியப்புடன் கேட்டார். ஒரு கட்டத்தில் சொன்னார். "இல்லையே இதப்பத்தியெல்லாம் அஷ்ரப் நானா ஒண்டுஞ் சொல்லலியே." என்று.

இது நடந்தது 90களின் தொடக்கத்தில். ஆனால் இப்பொழுது நிலமை அவ்வாறில்லை. 70களில் இருந்த முஸ்லிம்கள் 80களில் இருக்கவில்லை. 80களில் இருந்த முஸ்லிம்கள் 90களில் இருக்கவில்லை. 90களில் இருந்த முஸ்லிம்கள் இப்பொழுது இல்லை. இப்பொழுது முஸ்லிம்கள் மத்தியில் படித்த விசயஞானம் உடைய, புள்ளிவிபரங்களை விரல் நுனியில் வைத்திருக்கின்ற மத்தியதரவர்க்கம் ஒன்று பலமானதாக எழுச்சிபெற்றுவருகிறது.

80 களின் பிற்கூறில் குறிப்பாக இந்திய-இலங்கை ஒப்பந்தகாலத்தில் இருந்து முஸ்லிம்களின் மத்தியில் தீவிரமான ஒரு அரசியல் விழிப்புணர்ச்சி படிப்படியாக அதிகரித்துவருகிறது.

தற்சமயம் தமிழில் வெளிவரும் ஒரு கனதியான சமூக இலக்கிய சஞ்சிகை என்று கூறத்தக்க மூன்றாவது மனிதன் முஸ்லிம்களால் வெளியிடப்படுகிறது.

ஒருகாலம் அதிகபட்சம் வியாபாரச்சமூகமாகவும் குறிப்பிடத்தக்களவு விவசாயச் சமூகமாகவும் காணப்பட்ட முஸ்லிம்களின் மத்தியில் இருந்து இப்பொழுது படித்த மத்தியதரவர்க்கம் ஒன்று மேலெழுந்து வரத்தொடங்கிவிட்டது.

இது இனப்பூசல்களுக்கு சமாந்தரமாக நிகழ்ந்த ஒரு வளர்ச்சி. இனப்பூசலின் பக்கவிளைவு என்றும் இதைச்சொல்லலாம். குறிப்பாக வடக்கிலிருந்து முஸ்லிம்கள் அகற்றப்பட்டதன் பின் அகதிகளாய் அலைந்த வடக்கு முஸ்லிம் மத்தியில் படித்தோர் தொகை ஒப்பீட்டளவில் அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டதால் வடக்கு முஸ்லிம்கள் தமது பாரம்பரிய தொழில்களில் இருந்து விடுபடவேண்டிய ஒரு வாழ்க்கை முறைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இது அவர்களை கல்வி கேள்விகளில் ஈடுபடவைத்தது. இதனால் அவர்கள்மத்தியில் இருந்து இப்பொழுது ஒப்பீட்டளவில் முன்னரைவிட அதிகரித்த அளவில் பட்டதாரிகளும் ஏனைய மூளை உழைப்பாளிகளும் உருவாகிவிட்டார்கள்.

இப்படி முஸ்லிம்களின் மத்தியில் இருந்து படித்த அரசியல் மயப்பட்ட ஒரு மத்திய தரவர்க்கம் எழுச்சிபெறுவது என்பது பாரம்பரிய முஸ்லிம் தலைமைகளுக்கு உவப்பானது அல்ல. இவர்கள் கேள்வி கேட்பவர்களாயும் தர்க்கபூர்வமாகக்கதைப்பவர்களாயும் வர்த்தக நலன்களுக்கும் அப்பால் தமது சமூகத்தின் நலன்களை வற்புறுத்துபவர்களாயும் எல்லாவற்றையும்விடமுக்கியமாக முஸ்லிம் சமூகத்தில் அபிப்பிராயங்களை உருவாக்க வல்லவர்களாயும் உருவாகிவருகிறார்கள்.

ஆனால் இந்த அபிப்பிராயங்களில் பெரும்பாலானவை தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் நிலவும் பதட்டத்தை தணிப்பவையாய் இல்லை என்பதே இங்கே முக்கியமாகக்கவனிக்கப்படவேண்டியது.

கொழும்பில் இருந்து வெளிவரும் வீரகேசரி வாரஇதழில் அண்மையில், கிழக்கைச்சேர்ந்த ஒரு பிரபல தமிழ் பத்திரிகையாளர் எழுதிய ஒரு பத்தி முஸ்லிம்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இப்பத்தியின் மீதான வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து நடந்தன. முஸ்லிம்களும் தமிழர்களும் பரஸ்பரம் புள்ளி விபரங்களை அடுக்குவதுமாக தமது தரப்பு நியாங்களை எடுத்துக்கூறுவதுமாக ஒரு சர்ச்சையே அங்கு உருவாகிவிட்டது.

குறிப்பாக, கிழக்கில் இருந்து தமிழ் அலை பத்திரிகை வெளிவரத்தொடங்கியபின் இந்தவகை வாதப்பிரதிவாதங்கள் சூடுபிடிக்கத்தொடங்கிவிட்டன. முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் ஒருவகை மீடியாப்போர் கொழும்பிலும் கிழக்கிலும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

முஸ்லிம்கள் மத்தியில் இருந்து பத்திரிகைகள் வெளிவருவதோடு தமிழ் விரோத சுவரொட்டிகள் கொழும்பில் ஒட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கைச்சேர்ந்த ஒரு பிரபல தமிழ் மீடியாக்காரரிடம் கேட்டேன்... "முஸ்லிம் தொடர்பாக ஒரு புதிய அணுகுமுறைக்கு போகமுடியாதா?" என்று. அதற்கு அவர் சொன்னார்... "வடக்கிலிருந்து கொண்டு கதைக்கிறீர்கள் கிழக்கிற்கு வந்து பாருங்கள்" என்று. கிழக்கில் இருந்து வரும் அனேகமான எல்லா தமிழ் மீடியாக்காரர்களும் கணிசமான தொகை தமிழ் புத்திஜீவிகளும் இப்படித்தான் கூறுகிறார்கள். முஸ்லிம்களைக்கேட்டாலோ அவர்கள் மத்தியில் இருக்கும் பத்திரிகையாளர்கள் புத்திஜீவிகள் போன்றோர் தமது சமூகத்தின் அபிலாசைகளையே அதிகம் பிரதிபலிப்பவர்களாகக் காணப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் உயர் கல்வி நிறுவனத்தில் முன்பு விரிவுரையாளராக இருந்த முஸ்லிம் இப்பொழுது பேராதனையில் இருக்கிறார். ஒரு இலக்கியகாரரான அவர் முன்பு யாழ்ப்பாணத்தில் இருந்தகாலத்தில் ஒரு மென்போக்காளராய் காணப்பட்டவர். ஆனால் தற்பொழுது பேராதனையில் அவர் முஸ்லிம்களின் விருப்பு வெறுப்புகளை மட்டும் பிரதிபலிப்பவராக மாறிவிட்டதாக கூறப்படுகிறது. குறிப்பாக, லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் ஒரு சர்வதேச ஒலிபரப்புச்சேவையின் செய்தி மடல்களில் அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் பெரும்பாலும் அவருடைய சமூகத்திற்கு சாய்வானதாகவே காணப்படுகின்றன.

இது குறித்து கருத்துக்கூறிய கொழும்பில் உள்ள ஒரு பிரபல தமிழ்ப்பேராசிரியர் "அவர்கள் தூயமுஸ்லிம்வாதம் கதைக்கலாம் என்றால் நாங்களும் தூயதமிழ் வாதம் கதைக்கலாம் தான்" என்ற தொனிப்படச்சொன்னதாக ஒரு தகவல்.

இப்படி முஸ்லிம்களும் தமிழர்களும் பரஸ்பரம் எதிர்நிலை எடுத்து ஒருவர் மீது ஒருவர் புள்ளிவிபரங்களையும் எதிர்வாதங்களையும் வைத்துகொண்டு இருப்பதும், பழைய காயங்களை புதுப்பிப்பதும் எங்கே கொண்டு போய் விடும்? இந்திய சுதந்திரப்போராட்டத்தில் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்தவை போன்ற கட்டுப்படுத்தவியலா இரத்தக்களறி ஒன்றை நோக்கியா நாடுபோய்க்கொண்டிருக்கிறது?

இந்த இடத்தில் முஸ்லிம்களும் தமிழர்களும் ஒரு விசயத்தை நினைவில் கொண்டு வரவேண்டும். கடந்த நூற்றாண்டின் முற்கூறில் நடந்த சம்பவம் அது.

இலங்கைதீவில் முதலில் இனப்பூசல் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் அல்ல. மாறாக முஸ்லிம்களுக்கும் சிங்களவருக்கும் இடையில்தான் நிகழ்ந்தது. கலவரம் செய்வதற்கான பயிற்சியை சிங்கள அரசியல் வாதிகள் முதலில் முஸ்லிம்களின் மீது தான் பெற்றார்கள். பின்னரே தமிழர்களைத்தாக்கினார்கள்.

-1915 இல் நிகழ்ந்த இத்தகைய ஒரு சிங்கள - முஸ்லிம் மோதலின் போது சிங்களவருக்குச்சார்பாக நீதி கேட்டு சேர்.பொன் இராமநாதன் லண்டனுக்குப்போனார். அதில் அவர் முஸ்லிம்களைக்காட்டிக்கொடுத்ததாகவும் ஒரு குற்றச்சாட்டு உண்டு.

அதில் சிங்கள அரசியல் வாதிகள் ஒரு படித்த தமிழரை தமக்குச்சாதகமாக ஆங்கிலேயரிடம் நீதிகேட்க அனுப்பியதன் மூலம் ஒரேகல்லில் இரண்டு கனிகளை வீழ்த்தினர். முதலாவது சிங்களவரைப்பாதுக்காத்தது. மற்றது தமிழர்களை முஸ்லிம்களுக்கு எதிராக்கியது. இதற்குப்பரிசாக இராமநாதனை தேரில் வைத்து இழுத்த சிங்கள அரசியல் வாதிகள் பிறகொரு சந்தர்ப்பத்தில் அவரையும் கைவிட்டார்கள்.

கொழும்புமைய அரசியலின் நோய்க்கூறான அம்சம் இது. வசதிக்ககேற்ப சிறுபான்மைகளை கையாள்வதும் ஒருவரை மற்றவரோடு மோத விடுவதும் சிறுபான்மைகளுக்கிடையில் எப்பொழுதும் சுமுக உறவு உருவாகிவிடாதபடி தடுப்பதும்.

முன்பு இராமநாதனை தேரில் வைத்து இழுத்த அதேவகை சிங்கள அரசியல்வாதிகள் தான் பின்னாளில் அஷ்ரப்பை அரவணைத்தார்கள். இப்பொழுது ஹக்கீமையும் பேரியல் அஷ்ரப்பையும் அரவணைக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஹக்கீமும் பேரியல் அஷ்ரப்பும் ஒற்றுமைப்படக்கூடாது என்பதிலும் கவனமாகவும் நீண்டகால நோக்குடனும் இருக்கிறார்கள்.

தன்னுள்கரைய மறுக்கும் சிங்கள பௌத்தர்கள் அல்லாத யாரையும் நம்ப மறுப்பதில் இருந்தே கொழும்பு மைய சிங்கள அரசியல் தொடங்குகிறது. இதில் உதிரிகளாய் தம்முடன் கரைந்து விடத்தயாரான எந்வொரு சிறுபான்மையையும் அரவணைக்க அவர்கள் தயார். மாறாக தம்முடன் கரைய மறுத்து ஒரு தனித்துவம் மிக்க அரசியல் சக்தியாக திரண்டு எழும் எந்தவொரு சிறுபான்மையையும் சகித்துக் கொள்ள அவர்கள் தயாரில்லை.

மலையகத்தமிழர்களுக்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் படித்த கொழும்பு மையத்தமிழ்த்தலைமைகளைப்பாவித்த சிங்களத்தலைவர்கள் மேற்படி தமிழ்த்தலைவர்கள் தனியாக தமது பேரம்பேசும் சக்தியை வளர்த்துக்கொள்ளமுயன்ற போதெல்லாம் அவர்களின் காலை வாரியிருக்கிறார்கள். கடந்த நூற்றாண்டில் இராமநாதன்கள், அருணாச்சலங்கள், பொன்னம்பலங்களுக்கு இதுதான் நடந்தது.

ஒரு வெல்லப்படவியலாதனிப்பெரும் அரசியல் சக்தியாக தமிழர்கள் எழுச்சிபெறும் போது அவர்களின் பேரம்பேசும் சக்தியை உடைப்பதென்றால் ராணுவத்தீர்வைத்தவிர சிங்களத் தலைவர்களிடம் உள்ள ஒரே பிரகாசமான தெரிவு முஸ்லிம்களை தமிழர்களுடன் மோதவிடுவதுதான். ஆனால் இதன் அர்த்தம் முஸ்லிம்கள் ஒருதனிச்சக்தியாகமாறி கொழும்பு மைய அரசியலைத்தீர்மானிக்கும் ஒரு வளர்ச்சிக்குப்போவதை சிங்களத்தலைவர்கள் சகித்துக்கொள்வார்கள் என்பதல்ல.

அஷ்ரப் கொல்லப்பட்ட ஹெலிகொப்ரர் விபத்தின் பின்னால் இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படும் சதியில் தமிழர்களை சம்பந்தப்படுத்தும் ஊகங்கள் ஒப்பீட்டளவில் குறைவு என்பதை இங்கே சுட்டிக்காட்டவேண்டும்.

கடந்த பொதுத்தேர்தலில் மாவனல்லவில், ரத்வத்தையும் மகன்களும் சுட்டுக்கொன்றது முஸ்லிம்களை என்பதையும் இங்கே சுட்டிக் காட்டவேண்டும்.

அதேசமயம் அண்மைத்தசாப்தங்களில் முஸ்லிம்களை தமிழர்களுக்கு எதிராகத்திருப்புவதில் கொழும்பில் இருந்த அரசாங்கங்கள் பெருமளவு வெற்றிபெற்றுவிட்டன. இதில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பரஸ்பரம் பங்குண்டு.

யுத்தகாலங்களில் ஊர்காவல் படையென்றும் துணைப்படை என்றும் முஸ்லிம்களின் ஒரு பகுதியினரை தம்வசப்படுத்தி தமிழர்களுடன் மோதவிடும் சிங்களத்தலைவர்கள் சமாதான காலத்தில் தமிழர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய உரிய பங்கை கொடுக்கத்தயாரில்லாத போது முஸ்லிம்களைத்தூண்டி நிலமைகளைக்குழப்பிவிடுகிறார்கள்.

யுத்தகாலங்களில் சிறுபான்மைகளை தமக்கிடையே மோதவிடுவதில் அரசாங்கங்கள் எவ்வளவு பயங்கரமாகச்செயற்படமுடியும் என்பதற்கு ஒரு உதாரணம் கூறப்படுகிறது.

90களின் முற்கூறில் பிரேமதாசவுடனான சமாதானம் முறிக்கப்பட்டபோது கிழக்கில் தமிழர்கள் வேட்டையாடப்பட்டார்கள். இதில் ஒரு முஸ்லிம் கப்டனே-கப்டன் முனாஸ் -அதிகம் அட்டூழியங்கள் செய்ததாகக்கூறப்பட்டது. ஆனால் கப்டன் முனாஸ் ஒரு முஸ்லிம் அல்லவென்றும் கப்டன் ரிச்சட் பீரிஸ் என்ற ஒரு சிங்கள அதிகாரியே தனது பெயரைமுனாஸ் என்று மாற்றிக்கொண்டு அட்டூழியங்களைச் செய்ததாகவும் ஒரு தகவல் கூறுகின்றது.

இப்பொழுது முஸ்லிம் பொலிஸ் படையொன்று உருவாக்குவது பற்றி கூறப்படுவதும் இத்தகைய ஒரு பிரித்தாழும் உத்தியே. சிங்கள இளைஞர்கள் படைகளில் வந்து சேரத்தயங்கும் ஒரு காலகட்டத்தில் அந்த வெற்றிடத்தை முஸ்லிம்களால் நிரப்புவதோடு இது தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோதவிட்டதாகவும் இருக்கும்.

இப்பொழுது இலங்கைத்தீவில் தமிழ் முஸ்லிம் உறவுகளைப்பொறுத்தவரை செய்திகளைவிட வதந்திகளே அதிகம் பலமானவைகளாய் காணப்படுகின்றன. உண்மைகளைவிடவும் கற்பனைகளே அதிகம் விசயங்களை தீமானிக்கின்றன. தர்க்கங்களை விடவும் முற்கற்பிதங்களே முடிவுகளை எடுக்கும் போது முன்னால் வருகின்றன. இந்நிலையில் முஸ்லிம்களின் மத்தியில் இருந்து ஒருபடித்த மூன்றாம் தரப்பு எழுச்சி பெற்றுவரும் இச்சூழலில் தமிழர்கள் அவர்களோடு ஒருவிஞ்ஞான பூர்வமான உரையாடலை வைத்துக்கொள்வது தீர்க்கதரிசனமுடையதாய் இருக்கும்.

தமிழர்களின் அரசியலைப்பொறுத்தவரை இராமநாதன்களின் காலம் எப்பொழுதோ முடிந்துவிட்டது. இந்நிலையில் முஸ்லிம்களின் மத்தியில் இருந்து இராமநாதன்களை உருவாக்க முயலும் சிங்களத்தலைவர்களை முஸ்லிம்களும் தமிழர்களும் சேர்ந்தால்தான் தோற்கடிக்கமுடியும்.

தமிழர்களின் வெற்றி முஸ்லிம்களின் தோல்வியாகவோ அல்லது முஸ்லிம்களின் வெற்றி தமிழர்களின் தோல்வியாகவோ கருதப்படும் ஒருநிலை எனப்படுவது கொழும்பு மைய அரசியலுக்கே அதிகம் வாய்ப்பானது. நிச்சயமாக அது வடக்குக்கிழக்குமைய அரசியலுக்கு வாய்ப்பானது அல்ல.

முஸ்லிம்களின் மத்தியில் இருந்து படித்த மத்தியதரவர்க்கம் ஒன்று மேலெழுந்து வரும் இக்காலகட்டத்தில் இது குறித்து விஞ் ஞான பூர்வமாகச் சிந்திப்பதற்கும் உரையாடுவதற்கும் உரிய தருணம் வந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். இதுதான் பிரபா-ஹக்கீம் உடன்படிக்கையை பலப்படுத்தவும், அதை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு எடுத்துச்செல்லவும் உதவும்.

பரிசுப்பொருளை விட அதை நாம் எப்படிக்கொடுக்கின்றோம் என்பது மிகவும் மதிப்பு வாய்ந்தது. -பியரிகார்னீஸ்

# வெறியாட்டுப் படலம்



(1998 கிளிநகர் மீட்கப்பட்டபோது அங்கிருந்து எடுக்கப்பட்ட புகைப்படம்)

***ஸ்கந்தபுரம்*** கரும்புத்தோட்டப்பகுதி. வாய்க்கால்கரையோரத்தில் பச்சையாய மண்டிய பற்றைக்கருகில் - ஒரு குடும்பம்வாழ்தல் சாத்தியமா? என்ற பரிதாபக்கேள்வி எழுப்பும் ஒரு அகதிக்குடிசை. அதைக்குடிசை என்பதே அதிகம். உண்மையில், நாங்கள் சின்னஞ்சிறு வயதில் அம்மா-அப்பா விளையாடுவ தற்குக்கட்டுகின்ற கொட்டிலைப்போல அது மோசமாக இருக்கிறது. ஆனால் அதற்குள்ளும் ஒரு வாழ்வு நடக்கிறது.

ஒவ்வொரு நாளும் அந்தக்கொட்டிலில் உலை கொதிப்பதில்லை. ஆனால் நாள் தவறாமல் அங்கு வாழும் ஐந்து சீவன்களின் வயிறுகளும் கொதிக்கும். பகலெல்லாம் கபகபவென்று குடலைப்பற்றி எரியும் பசித்தீயை, இரவு காச்சுகின்ற கஞ்சியும் - நித்திரையும் தணித்து விடும். பகலெல்லாம் பற்றி எரியும் கனவுகளோடு பசித்தீக்கங்குகள் நீறு பூக்கும். "இந்த இரவு விடியாமலே இருந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்" அந்தக்குடும்பம் நினைத்துக்கொள்ளும். ஆனால் பகல், இரவையும் - இரவு, பகலையும் தின்னுவதை நிறுத்துவதில்லையே!

இலட்சுமி அம்மா ஒரு தொய்வு நோயாளி. தொய்வு கண்டு விட்டால் அம்மாவிற்கு மரண அவஸ்தை தான். கண்முளி பிதுங்கி, தொண்டை நரம்புகள் புடைத்து, வயிறு முதுகோடு ஒட்டுமளவிற்கு, இழுப்பு அம்மாவைப் பாடாய்ப்படுத்தும். நாளாந்த நிகழ்வானாலும் பிள்ளையள் பரிதவித்துப்போவார்கள். அவர்களால் என்னதான் செய்ய முடியும்? அத்தனையும் பிஞ்சுகள்!

இலட்சுமிஅம்மாவிற்கு கரும்புத்தோட்டத்தில் கூலி வேலை. தினக்கூலி அறுபது ரூபா. எல்லா நாட்களிலும் வேலை இருப்பதில்லை. வேலையுள்ள நாட்களில் கஞ்சியும், வேலையில்லாத நாட்களில் வெறும் வயிறுமாய் அம்மாவின் உழைப்பை மட்டுமே நம்பிய பட்டினிச்சீவியம் அவர்களுடையது.

இலட்சுமி அம்மாவின் குடும்பம் வறுமைக்கு உதாரணமாய் வாழ்ந்ததல்ல. ஜெகநாதன் இலட்சுமியை கைப்பிடித்த மறுவருடத்தில் அவர்களின் முதல் இடப்பெயர்வு நிகழ்ந்தது. அது 1973ஆம் வருடம் கண்டியிலிருந்து வன்னிக்கு. இங்கு வந்து குழந்தை குட்டிகள் என்று குடும்பம் பெருகி, கமம் செய்து கூலித்தொழில் பார்த்து அவர்கள் நன்றாகத்தான் வாழ்ந்தார்கள்.

அந்தக்குடும்பத்தின் ஆர்ப்பாட்டமற்ற அமைதியான வாழ்வை நிலைகுலைத்துச்சரித்தது ஒரு இடப்பெயர்வு. சத்ஜய இடப்பெயர்வும் அதனைத்தொடர்ந்த குடும்பத்தின் மூத்த உயிர்களின் இழப்புகளுமே இலட்சுமி அம்மாவையும் சின்னஞ்சிறுசுகளான நான்கு பிள்ளைகளையும் யாருமேயற்ற நிற்கதி நிலைக்குத்தள்ளின.

ஜெகநாதன் - இலட்சுமி தம்பதியினருக்கு ஒன்பது பிள்ளைகள். இலட்சுமி அம்மாவின் இரண்டு பெண்களும், ஒரு மகனும் திருமணம் முடித்து விட்டிருந்தார்கள். அம்மாவின் தாய்மைப்பாத்திரத்தில் இரண்டு வகை. ஒன்று பிள்ளைகளின் தாய், இன்னொன்று போராளியின் தாய். அம்மாவிற்கு போராளித்தாய் என்ற பெருமையைக்கொடுத்தவன் மகேந்திரன் - கடற்புலி சிறையஞ்சன். யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருந்த போது (1995) மகேந்திரன் இயக்கத்திற்கு நடந்தான்.

ஆனையிறவு படைத்தளத் திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பரவிய சிங்கள இராணுவ இயந்திரத்தின் சத்ஜய படைச்சக்தி. வன்னிப் பெருநிலத்தின் ஒரு பெரு நகரையும் நகர் சார்ந்த கிராமங் களையும் விழுங்கியது.

பாரதிபுரத்திலிருந்து - அவர்கள் வாழ்ந்த, அவர்களோடு வாழ்ந்த எல்லாவற்றையும் இழந்து -இலட்சுமி அம்மாவின் குடும்பம் பொன்னகருக்கு இடம் பெயர்ந்தது. சத்ஜய படைச்சக்தியின் திரண்ட மையமாகிய கிளிநொச்சிப் படைத்தளம் தன்னைச்சுற்றிலும் தூரத்தே ஒடுங்கியிருந்த குடியிருப்புகளை எல்லாம் அச்சுறுத்தியபடி திமிர் பூத்துக்கிடந்தது.

படைத்தளத்திற்கும் படைத்தளத்தைக்கண்காணிக்கும் விடுதலைப்புலிகளின் காவலரண் வரிசைக்கும் இடைப்பட்ட மனித சூனியப்பிரதேசத்துக்குள் இருக்கும் கிராமங்களைச்சேர்ந்த இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குச்சென்று பொருட்கள் எடுத்து வருவதை வழக்கமாக்கிக்கொண்டிருந்தார்கள். கிளிநொச்சிப்பகுதியில் வீடு பார்க்கச்சென்றவர்கள் வெட்டுண்ட பிணங்களாக கண்டெடுக்கப்படும் நிகழ்வுகள் மலிந்திருந்த போதும், தங்கள் வயிற்றுத்தேவைகளின் போதாமையைச்சமாளிக்க அவர்களுக்கு அதைத்தவிர வேறு வழியிருக்கவில்லை.

செத்துப்போகும் கணம் வரைக்கும் நான் சாகமாட்டேன் எண்டு நினைத்திருப்பது தானே மனித இய்ல்பு. தங்களுக்கு எதுவும் நடக்காது. இராணுவத்தின் கொலைக்கரங்களில் சிக்காமல் நாங்கள் தப்பி விடுவோம் என்ற நம்பிக்கையோடு எல்லோரும் வீடு பார்க்கச் சென்று வந்தார்கள். நம்பிக்கை தானேவாழ்க்கை. அதை அவர்கள் கடைப்பிடித்தார்கள். ஆனால், இந்த விடயத்தில் சில நம்பிக்கைகள் வீண்போகவில்லையாயினும் பல நம்பிக்கைகள் பிணமாய்த்தான் போயின.

வீடு பார்க்கச்சென்று வரும் இந்த வழக்கமான நிகழ்வொன்றின் போது தான் தனக்கு மூன்று பேரப்பிள்ளைகளைத்தந்த தனது மூத்த மகன் இராஜேந்திரனை இலட்சுமி அம்மா இழந்தாள்.

சம்பவ தினம், இராஜேந்திரனும் இலட்சுமி அம்மாவின் இளைய மகன் சசிக்குமாரும் வீட்டுக்குச்சென்றிருந்தார்கள். காடு மண்டி மயான வெறுமை சூழ அநாதையாய் நின்றிருந்த தங்கள் வீட்டில், இருவரும் காரியங்களில் ஆழ்ந்திருந்தார்கள்.

பற்றைக்குள்ளிருந்து சந்தடியற்று வெயியேறிய சிங்களப்படையாட்கள் சகோதரர்கள் இருவரையும் சூழ்ந்தனர். திகைத்து நாக்கு மேலண்ணத்தில் ஒட்டி ஒரு பேச்சும் வராது சகோதரர்கள் இருவரும் கையெடுத்து கும்பிட்டார்கள். சிங்களப்படைக்கு தமிழர்கள் எல்லோருமே புலிகள் தானே! புலி புலியென்று கத்தியபடி காடைக்கும்பல் இருவரையும் நயப்புடைத்தது.

சசிக்குமாரை ஒரு மரத்தோடு சேர்த்துக்கட்டி விட்டு இராஜேந்திரனை கதறக் கதறக்கொண்டு போனார்கள். உச்ச ஸ்த்தாயில் உருவெடுத்த அவனது அவலக்குரல் தேய்ந்து, தேய்ந்து சற்றைக்கெல்லாம் அடங்கிப்போனது. கட்டோடு போராடி - தன்னை விடுவித்துக்கொண்டு இரத்தமும் கண்ணீருமாய் அம்மாவிடம் வந்து சேர்ந்தான் சசிக்குமார்.

கயிறு சிராய்த்து, மரம் சிராய்த்து இராணுவச்சப்பாத்து மிதித்து, இரத்தவிளாறாகி வந்து நின்ற பிள்ளையைப் பார்த்து விக்கித்து நின்றாள் அம்மா.

"என்னையா கோலமிது, என்ர குஞ்ச ஆரய்யர இந்தப்பாடு படுத்தினது" பிள்ளையின் கண்டல் காயங்களையும் சிராய்ப்புக் காயங்களையும் தடவியவாறு அம்மா பதறினாள்.

இதற்குப்பதில் சொல்லி விடலாம் ஆனால் "அண்ணா எங்கையப்பு" என்று அம்மா கேட்கும் போது அடுத்த கேள்விக்கு என்ன பதிலைச்சொல்வது? சசி திணறிக்கொண்டிருந்த போது அம்மா அதைக்கேட்டாள். "அண்ணா எங்கையப்பு"சசி மௌனமாய் அழுதான். அம்மாவிற்கு அபத்தமாய் ஒரு சந்தேகம் பொறி தட்டியது. முகத்தில் கலவரம் படர, பதிலொன்றும் கூறாமல் கண்ணீர் வழிய வழிய பேயறைந்தவன் போல் நின்ற பிள்ளையின் தோள்களைப்பற்றி உலுக்கி அம்மா கத்தினாள். "அண்ணா எங்யைடா"அதற்கு மேலும் தாயின் தவித்த நிலையைத் தாங்க முடியாமல் "அண்ணனைக்கொண்டு போயிற்றாங்கள் அம்மா" என்றபடி தாயின் மடியைக்கட்டிக்கொண்டு கதறினான் சசி. அம்மா இடி விழுந்தவள் போலானாள்.

இராஜேந்திரனைக் கட்டியவள் மனஞ்சுருண்டு நொருங்கிப்போனாள். பொட்டழியும் வயதா அவளுக்கு! பட்டப்பகலிலும் காலம் இருண்டதாய் உணர்ந்தாள். செத்துப்போனதை சுவாமியிடம் போய்விட்டதாகச்சொன்னால் நம்புகின்ற வயதுப்பிள்ளைகள், அப்பா சுவாமியிடம் போய்விட்டதாக நம்பினார்கள்.

அவர்கள் இழவு செய்யவில்லை. ஆனால் ஒரு இளவு வீட்டுக்கும் அவர்களின் வீட்டுக்கும் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை.

இது நடந்த பிற்பாடு வீட்டுப்பக்கம் செல்வதை அவர்கள் அறவே தவிர்த்து விட்டார்கள். ஆனால் நாட்கள் செல்ல, அயலவர்கள் போய் வருகிற தைரியத்தில் மீண்டும் வீட்டுக்குச் சென்று வர ஆரம்பித்தார்கள்.

இராணுவ அர்த்தத்தில் மனித சூனியப்பிரதேசம் என்பதற்கு மரணப்பொறி என்ற பொருள் விரிவும் உண்டு. வெறும் தேங்காய்க்கும், முருக்கங்காய்க்கும், பாத்திரம் பண்டத்திற்குமா மக்கள் தங்கள் உயிர்களை அந்த மரணப்பொறிக்குள் நுழைக்கிறார்கள்? இல்லை! வீடு பார்க்கவென்று அவர்கள் புறப்படும் போது ஒரு ஆதியந்த உறவைப் பார்க்கப்போகும் ஆவலும் சுறுசுறுப்பும் அவர்களைத் தொற்றிக்கொள்கின்றது.- ஒரு குடும்பத்தின் இன்பம் - துன்பம் என்ற இரண்டு முதன்மை உணர்வுகளிலும் முதலில் பங்கெடுத்துக்கொள்வது வீடு தானே! அதுதானே அவர்களின் முதல் உறவு, அந்த உறவு அவர்களுக்கு எல்லாமுமாக இருக்கிறது. வீட்டுக்குச்சென்று- முற்றத்தில் நடந்து, திண்ணையில் சரிந்து, கிணற்றில் குளித்து, இடம் பெயர்ந்த வாழ்வின் அவலச் சுமைகளை இறக்கி வைத்து விட்டு - அந்த உறவோடு வாழ்ந்த இன்பமான பொழுதுகளை நெஞ்சில் கிளர்த்தி மனதை இலேசாக்கி மீள்கிறார்கள். இங்கே உயிரை விடவும் அந்த உறவு தரும் ஆறுதல் பெரிதாய் இருப்பது ஆச்சரியமல்ல. உயிரையும் பொருட்படுத்தாமல் ஆறுதலைத்தேடுமளவிற்கு மனங்களைச்சிதைக்கும் இடப்பெயர்வு வாழ்வின் அவலங்கள் தான் ஆச்சரியமானவை.

**எஸ்.உமாஜிப்ரான்**

அன்றும் (03.05.1996) அப்படித்தான; அப்பாவுடன் சசிக்குமாரும் புவனேஸ்வரியும் பாரதிபுரத்துக்குச்சென்றார்கள். வீட்டு வளவிற்குள் அவர்கள் நுழைந்தவுடன் எங்கிருந்து முழைத்தார்களோ தெரியாது. முப்பதுக்கும் மேற்பட்ட சிங்களப் படையாட்கள் அவர்களை மொய்த்துக்கொண்டார்கள்.

பத்து வயதுச்சிறுமியான புவனேஸ்வரியையும், அவளை விட நான்கு வயதுகள் அதிகமான சசிக்குமாரையும் அவர்களின் முதிய தந்தையையும் இராணுவத்தினர் புலியென்று சொல்லி வதைத்தார்கள் . கைகளை முதுகுப்புறமாகச் சேர்த்துக்கட்டி ஒரு பற்றை மண்டிய பகுதிக்கு அழைத்துப்போனார்கள். அங்கே பாரதிபுரத்தில் புவனேஸ்வரியின் வீட்டிற்கருகில் வசித்தவரான கணேஸ் என்பவரை (மூன்று பிள்ளைகளின் தந்தை) குரூரமனப்பட்டாளம் அடித்து நொருக்கிப்போட்டிருந்தது. எல்லோரையும் ஒன்றாக இருத்தி விட்டு இராணுவக்கும்பல் தனது வழமையான வெறியாட்டத்திற்கு தயாரானது.

இனவெறியேறி முகங்கள் விளங்காத பாசையின் இடையிடையே விளங்கும் கொச்சைத்தமிழ் முரட்டுக்கத்திகள் -இவையெல்லாம் பருந்தின் கூர் நக விரல்களில் சிக்கியிருக்கும் கோழிக்குஞ்சுகளாய் வதங்கியிருந்த நான்கு கையறுநிலை உயிர்களுக்கும் அவர்களின் அவல முடிவைத் தெரிவித்துவிட்டன. உடல் கசிந்த குருதியுலர்ந்து விகாரமாய்த்தெரிந்த முகங்களை ஒருவரையொருவர் பாவமாய்ப் பார்த்தார்கள்.

ஒரு இராணுவத்தினன் அப்பாவின் கைக்கட்டவிழ்த்து பற்றை மறைவுக்கு கூட்டிப்போனான். புவனேஸ்வரியின் மிரண்ட விழிகள் அப்பா சென்று மறைந்த பற்றையை ஏக்கமும்

(18 ம் பக்கம் பார்க்க...)

# நறுக்கென...

## சந்திரிகாவின் வடக்கு கிழக்கு பிரிப்பு முயற்சியும் புதிய தேசமொன்றின் விடியலும்



இப்போது சிறிலங்காவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரிப்பது தொடர்பாக சனாதிபதி அதிக கவனம் செலுத்தி வருகிறார் என்று அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளமையானது 'சமாதானம்' தொடர்பாக எந்தவிதத்திலும் - எக்காலத்திலும் சந்திரிகா ஒரு முடிவுக்கு வரமாட்டார் என்பதையும், அவரால் வடக்கு கிழக்கு தமிழ்மக்களின் அபிலாசைகளுக்கேற்ப தீர்வெதனையும் முன்வைக்கமுடியாதென்பதையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதை இலக்காகக்கொண்ட ஒருவர், சிறிலங்கா இரண்டு நாடுகளாக பிரிந்துபோவதற்கான மூலகாரணமாக இருப்பார் என்பதில் இருவேறுகருத்துக்கிடையாது.

மொழியையும், மதத்தையும் முன்வைத்து சிங்களமொழிக்கும், பௌத்தமதத்திற்கும் முதன்மைஸ்தானம் வழங்க ஒரு அரசியல் சுயநல அபிலாசையுடன் கூடிய முடிவை எடுத்து, 24 மணி நேரத்தில் தனிச்சிங்களத்தைச் சட்டமாக்குவேன் என்று தீர்க்கதரிசனமற்ற முட்டாள்தனமான பிரகடனத்தைசெய்தவர் சந்திரிகாவின் 'அப்பனான' பண்டாரநாயக்கா தான்.

அவர் ஆழமாக விதைத்த பேரினவாதவிதை இப்போது சிறிலங்காவையே நிர்மூலமாக்கி நிற்கும் இனவிவகார விஷவிருட்சமாகிநிற்கிறது.

அந்த விஷவிருட்சம் கிளைவிட்டுப்பரவ சந்திரிகாவின் 'அம்மா' சிறிமா இனவாத நீரூற்றிப்பராமரித்தார்.

இப்போது சந்திரிகா அதற்கு விழுதுகளை விட்டுபரவ உரமிடத்தீவிரம் காட்டி வருகிறார்.

அவரையடுத்து 'வாரிசு' அரசியல் வாய்ப்பைபெற வாய்பிழந்து காத்து நிற்கும், அநுராவும் அதனை மேலும் தொடர்பவராக இருப்பார். அவரின் நீலம்பாரித்துப்போயுள்ள ஜே.வி.பி சிவப்புத்தோழர்களின் இலக்கும் இப்போது 'பச்சை இனவாதமாக' மாறிவிட்ட நிலையில் அநுராவின் தேர்வுவேறெதுவாகவும் இருக்கப்போவதில்லை.


ஆக சந்திரிகா வடக்கு - கிழக்கை பிரிப்பதன் மூலம் நாடு இரண்டாக பிளவுற சுலபமாக வழிவகுத்துத்தருகின்றார் என்றேகூறவேண்டும்.

எல்லாவகையிலும் சிங்களத்தலைமைகள், தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை தீவிரப்படுத்த, தம்மாலான சகல முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டே வருகிறார்கள்.

வடக்கு - கிழக்கு பிரிப்பு முயற்சி அதன் உச்ச நடவடிக்கையாகவே இருக்கும்.

இது; சமாதானத்தை புதியதேசமொன்றின் உதயத்திலேயே தோற்றுவிக்க வழிவகுப்பதாகவே அமையும்.

## கிழக்கு முஸ்லிம்களை இராணுவம் பாதுகாக்குமா?



முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதில் இராணுவம் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூக்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நல்லது முஸ்லிம்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் ஹக்கீமுக்குள்ள அக்கறை வரவேற்கப்படவேண்டியதே...

ஆனால் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு இராணுவத்தையும் விசேட அதிரடிப்படையையும் ஓய்வுபெற்ற பொலிசாரையும் அதிகளவில் பணியில் ஈடுபடுத்தப்போவதாக அவர் தெரிவித்துள்ளமை தான் அவரது அக்கறையின் மீது சந்தேகம் கொள்ளவைத்துள்ளது.

கடந்த காலங்களில் வடக்கிலும் சரி கிழக்கிலும் சரி முஸ்லிம் மக்கள் உட்பட சிறுபான்மை இன மக்கள் அனைவருமே இந்த பாதுகாப்புப்படையினரால் எவ்வாறெல்லாம் அல்லல்களுக்குள்ளானார்கள் என்பதை ஹக்கீம் மிக சுலபமாக மறந்துவிட்டு, பேரின அரசியலையும் அரசியல்வாதிகளையும் பாதுகாப்பதற்கென்றே உருவாக்கப்பட்டுள்ள, பாதுகாப்புப்படையினரையும், விசேட அதிரடிப்படையினரையும் அமைச்சர் நம்புவதும், முஸ்லிம்களை இராணுவம் பாதுகாக்கும் என்று அந்த மக்களுக்கு உறுதிவழங்க முற்படுவதும் பச்சை அரசியல் தனமான ஒரு நடவடிக்கையேயாகும்.

தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நல்லுறவையும் தன்னம்பிக்கையையும் கட்டியெழுப்புதவற்கு இந்த நடவடிக்கை எந்தவகையிலாவது உதவுமென ஹக்கீம் நம்புவாரேயானால் அது அவரது அரசியல் சுயநலத்தையும் அரசியல் அறியாமையையுமே வெளிப்படுத்தும்.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிரித்தாளும் கோட்பாட்டை தீவிரமாக செயற்படுத்திவரும் சிங்களப்பேரினவாத அரசுகள், முஸ்லிம் தலைமைகளுக்கிடையே ஊடுருவி முஸ்லிம் மக்களிடையே அரசியல் ரீதியிலான ஒருமைப்பாடு ஏற்படாது மிகவும் தந்திரோபாயமாக செயற்பட்டுவருகின்றன என்பது வெளிப்படையான விடயமேயாகும்.

இப்போதும் கூட கிழக்கில் முஸ்லிம்களைப் பாதுகாக்கவென இராணுவத்தையும், விசேட அதிரடிப்படையையும் அதிகரிக்கப்படும் என அமைச்சர் கூறுவது, தமிழ்-முஸ்லிம் சமூகத்தவரிடையே மேலும் சந்தேகங்களையும் குழப்பங்களையும், இன்னும் கூறப்போனால் நிரந்தரமான பகைமையையும் அதிகரிக்க நடவடிக்கை எனப்பிரகடனம் செய்வதுபோன்றே உள்ளது.

பெரும்பான்மை சமூகத்தவரின் அரசு இராணுவமோ ஏனைய படைகளோ சிறுபான்மை சமூகத்தவரை எந்தவகையிலும் பாதுகாக்கும் என நம்புவதும், அதை ஏனைய மக்களை நம்பவைக்க முயல்வதும் ஆபத்தான விளைவுகளுக்கே வழிவகுக்கும் என ஹக்கீம் இன்னமும் புரியாமல் இருப்பதுதான் வேதனையான விடயம்.

ஏற்கனவே முஸ்லிம் தலைமைகளிடையே 'மித்திரபேத'த் தந்திரோபாயத்தை கையாண்டு அவர்களிடையே பிளவுகளையும் மோதல்களையும் உருவாக்கியுள்ள சிங்கள அரசுகள், தமிழ், முஸ்லிம் மக்களிடையே மேலும் பகைமையை வளர்க்க 'பாதுகாப்பு' என்ற பெயரில் கிழக்கில் இராணுவப் பிரசன்ன அதிகரிப்பைப் பயன்படுத்தவே செய்யும்.

-ஹக்கீமுக்கு இது புரியாத ஒன்றல்ல... ஆனால் அவரது அரசியலுக்கு இவையெல்லாம் தேவைப்படுகிறது அவ்வளவுதான்.

**செங்குட்டுவன்**

## சந்திரிகாவின் புதிய புலம்பல் ஒரு ஒப்புதல் வாக்கு மூலமேயாகும்



என்னவென்று உறுதியாகக்கூறமுடியாவிட்டாலும் சந்திரிகா ஒரு திட்டத்துடன் தான் 'காய்களை' அரசியல் சதுரங்கப் போட்டியில் நகர்த்திவருகிறார்.

சிங்கள மக்களிடையே தனக்கான ஆதரவை அவர்களின் அனுதாபத்திற்குரிய ஒருவராக தன்னை வளர்த்தெடுப்பதன் மூலம் அதிகரிப்பதற்கு அம்மணி பலவகையிலும் தீவிரமாக முயன்று வருவதாகத்தெரிகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டணியமைப்பு முயற்சிகள் 'அப்படியும் இப்படியுமாக இழுபறியில்இருக்க, பொ.ஐ.முன்னணிக்குள், இப்புதிய கூட்டமைப்பு குறித்த நகர்வுகள் காரணமாக ஏற்பட்டுள்ள அதிருப்தி நிலைமக்கு தீர்வு காண இயலாத நிலைதொடர்ந்து கொண்டே இருக்க, ஜே.வி.பியுடனான உறவுகளை நிராகரிக்கும் அல்லது வெறுக்கும் சி.ல.சு கட்சியின் மூத்த தலைவர்களின் அதிருப்தி நிலையை சமாளிக்க முடியாத நிலையில் திணறும் சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரவலுவை மட்டும் நம்பி அதன் பிடிமானத்திலேயே தன்மானத்தைக் காப்பாற்ற முயன்று கொண்டிருக்கிறார் என்பது தெளிவான விடயமாகும்.

பலவீனமான தனது நிலையை மறைத்து, தான் பலமாக இருக்கிறேன் என்பதை அன்றாடம் விடும் அதிகார கர்வமிக்க அறிக்கைகள் மூலமே நிரூபிக்க முயன்றுவரும் சந்திரிகா அண்மைக்காலத்தில் அடிக்கடி தனது உயிருக்கு ஆபத்து என்றும், பாதுகாப்பற்ற சூழலிலே தான் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் புலம்பி வருவதன் மூலம் மக்களின் அனுதாபத்தை பெறுவதற்கு தீவிரம் காட்டி வருகிறார்.

விடுதலைப்புலிகள் தன்னை இலக்கு வைத்து கரும்புலிகளை கொழும்புக்கு பெருமளவில் அனுப்பி வைத்திருப்பதாகக்கூறினார்....

அரசாங்கம் தனது பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களில் குற்றங்களைச் சுமத்தி அவர்களை கைது செய்வதன் மூலம் தனது பாதுகாப்பை கேள்விக்குரியதாக்கி வருவதாகப் புலம்பினார்...

இப்போது தனது உயிருக்கு ஆபத்தை விளைவிக்க அரசுக்குள் சிலர் சதி செய்கிறார்கள் என்று பொலிஸ் மா அதிபருக்கு அவரே கடிதமூலம் தெரிவித்துமுள்ளாராம்!

'மிரண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்' என்பார்கள். சந்திரிகாவின் நிலை இப்போது அப்படித்தான் போலிருக்கிறது என சிலர் எண்ணவும் கூடும்.

ஆனால் உண்மையில் இதெல்லாம் சந்திகாவின் தந்திரங்கள் மட்டுமேயாகும்.

தனது தாயாருக்கும், அவரது ஆட்சிக்கும் குறிவைத்து 1971 இல் கிளர்ச்சியை மேற்கொண்ட, தனது கணவனை இலக்கு வைத்துக்கொன்ற, ஜே.வி.பி யுடன் துணிந்து உறகளை வைக்க முயன்றுவரும் சந்திரிகாவும் உயிரச்சம் இருப்பதாகக் கூறுவது வெறும் பிரச்சார நோக்கிலான பம்மாத்தேயாகும்!

உண்மையில் அவரது உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கப் போகிறவர்கள், அவரது அதிகாரத்தைப்பயன்படுத்தி அரசியல் அநுகூலங்களை பெற இலக்கு வைத்து செயற்படுபவர்களாகத்தான் இருக்க முடியும்.

எதுவானாலும் :-

இப்போது தனது உயிருக்கு தன்னினத்தவர்களால் தான் அச்சுறுத்தலும் ஆபத்தும் இருப்பதாக எழுத்து மூலமே பொலிஸ்மாஅதிபருக்கு தெரிவித்திருப்பது ஒரு ஒப்புதல் வாக்கு மூலமேயாகும்.

## மதவடி மயிலர்



**செய்தி :** *கண்ணி வெடிகளை அகற்றும் பயிற்சி; படையினருக்கு அமெரிக்கா வழங்கும்.*
**மயிலர்:** முந்தி கண்ணி வெடிகளைப்புதைக்கும் பயிற்சியை படையினருக்கு வழங்கியவர்கள் தான் அகற்றும் பயிற்சியையும் வழங்கினம் பாருங்கோ... கண்ணிவெடிகளை வித்தவையும் இவையளாத்தான் இருக்கும்.... அல்லது இவையிடை ஆட்களாத்தான் இருக்கும்.... உது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடுகின்ற வேலையெல்லே....

**செய்தி :** *ஈராக்கைப்பாதுகாப்பது அமெரிக்காவின் கடமை.... கோபிஅனான் தெரிவிப்பு.*
**மயிலர் :** ஈராக்கே தனது உடமை என அமெரிக்கா நினைக்கையில் கடமை பற்றி கதை விடுகிறார் கோபிஅனான் ஐயா அவர்கள். ஈராக்கை அழிக்கேக்கை ஐயாவுக்கு இந்த யோசனை வரல்லை... இப்ப அழியுண்ட ஈராக்கை பாதுகாக்க அமெரிக்காவை அழைக்கிறார்... ஆரிட்டைச்சொலலி அழு[illegible]...?


**செய்தி :** *கிழக்கில நடக்கிற அசம்பாவிதங்களை வைத்து தமிழ் - முஸ்லிம் மக்களை சனாதிபதி பிரிக்க முயல்கிறார்....! செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு.*
**மயிலர்:** எரிகிற வீட்டிலை பிடிங்கினது லாபம் எண்டு நினைக்கிறார் போலும்.... பிரித்தாளும் தந்திரத்தை அமையார் விரும்புறதிலை ஆச்சரியமில்லை பாருங்கோ... அது அவவிடை பரம்பரைக்குணம் எல்லே.....!

**செய்தி :** *ஈ.பி.டி.பிக்கு பாதுகாப்பு வழங்க சனாதிபதி சந்திரிகா உத்தரவு.*
**மயிலர் :** சந்திரிகா தன்ரை ஆக்கள் யார்யாரென்று இனங்கண்டு பாதுகாப்பு வழங்குகிறார் பாருங்கோ..... சனங்கள்.... அது தான் எங்கடை தமிழ்ச்சனங்கள் இவையளை நல்ல இனங்கண்டு கொள்ளவேணும் பாருங்கோ... இனம் இனத்தைப் பாதுகாக்கும்... நான் சொல்லுறது விளங்குது தானே பாருங்கோ...!

**செய்தி :** *காலாவதியான திகதியை மாற்றி மருந்துப்பொருட்கள் விற்பனை..... யாழ்நகரப்பகுதியில் மோசடி.*
**மயிலர் :** காலன் இப்ப மருந்து வியாபாரிகள் வடிவிலும் வரத்தொடங்கி விட்டான் போலை கிடக்குப்பாருங்கோ.... காலாவதியான மருந்துகளை வித்து சனங்களை காலமாக்க வெல்லே நினைக்கினம்.....!


**செய்தி :** *சிறிலங்காவின் அடுத்த இராணுவத்தலைவர் பதவிக்கு மேஜர் ஜெனரல்களிடையே போட்டி....! சிங்களப்பத்திரிகை தகவல்.*
**மயிலர்:** இதிலென்ன போட்டியிருக்கு.... ஆர் அம்மணிக்கு பிடிச்சவரோ... ஆர் சமாதானத்திற்கு எதிராக.... சமாதானம் பற்றி பேசிக்கொண்டே செயற்பட வல்லவரோ..... அவர்தானே இப்போதைக்கு தளபதியாக வரமுடியும்...! என்ன நான் சொல்லுறது பிழையே பாருங்கோ....!

ஒரு மனிதனை அவன் சொல்லும் பதில்களினால் அல்ல, கேட்கும் கேள்விகளினால் எடை போடு. -வால்டேஸ்




தன்னை மறந்து தூக்கும் மி சியங் எனும் இராட்சத பெண் பண்டா இனக்கரடி அமெரிக்காவின் வாஷிங்டனில் அமைந்த சிமித்ஓனியன்ஸ் தேசிய உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்படுகிறது. உலகில் இன்று அருகி வரும் இவ்வின பண்டா கரடிகளை பாதுகாப்பதில் சூழலியல் ஆர்வலர்கள் ஆர்வமாக உள்ளனர். தெரிந்துதான் இந்தத்தூக்கமோ!

குட்டைப்பாவாடைகள் அல்ல இவை. குடைப்பாவாடைகள் இவை. பிரான்சின் பரிஸ் நகரில் 9வது உலக மெய்வல்லுநர் போட்டியில் ஆரம்பத்தின் பொழுது நடக்கவிருந்த வரவேற்பு நிகழ்விற்காக ஒத்திகையில் ஈடுபடுவோரே இவர்கள். இதில் நடனமாடுவோர்கள் பெண்கள் அல்ல ஆண்களே.







மரம் ஒன்றில வேரா இது!
இல்லை கண்ணைப்பறிக்கும் ஒளிவெள்ளம் பாய்ச்சும் மின்னலின் கோலமே இது அண்மையில் நிவேடாவில் ஏற்பட்ட கடும் மழையின் போது நகர் ஒன்றின் மீது தாக்கும் மின்னலின் காட்சியே இது.




குதிரையை ஓட விட்டு வேடிக்கை பார்ப்பது போதுமென்று நினைத்தார்களோ. இங்கே நத்தைகளை ஓடவிட்டு உற்சாக மூட்டுகிறார்கள். இந்தச்சிறார்கள்.

தாங்கள் செல்லமாக வளர்க்கும் நத்தை களை போட்டிக்கு கொண்டு வந்திருக்கும் இவர்கள் ஸ்பெயினில் வார இறுதியில் இடம் பெற்ற இளையவர் களுக்கான நிகழ்வில் பிரதான நிகழ்வாக இந்த நத்தை ஓட்டப் போட்டியை நிகழ்த்திக் காட்டினர்.




ஆமைக்கே குளிக்க பழக்குகிறார்கள் இந்த பாகிஸ்தானிய நகரசபை ஊழியர்கள். அண்மையில் பாகிஸ்தானிய கடற்பகுதியில் விபத்திலே சேதமாகிய எண்ணெய்க்கப்பல் ஒன்றில் இருந்து வெளியேறிய மசகு எண்ணெயினால் மாசடைந்த கடற்பகுதி யில் மீட்கப்பட்ட ஆமை ஒன்றை சுத்திகரிக்கும் ஊழியர்களே இவர்கள். கராச்சி நகரில் அமைந்த கிளிப்ரொன் உல்லாசக்கடற்கரை யிலேயே இவ்வாமை கரை ஒதுங்கியது.




யார்யார் எல்லாம்கண்ணாடியை அணிவதென்ற விவஸ்தையே இப்பொழுது இல்லாமல் போய்விட்டதா? திறந்த கார் ஒன்றின் உல்லாசமாக காட்சி கொடுத்த படி தன் எஜமானுடன் பயணம் செய்யும் இந்த எஜமான் அணிந்திருப்பது தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய வகை கண்ணாடி ஒன்றே. சூரிய ஒளியில் இருந்தும் கடும் காற்றில் இருந்தும் நாய்களின் கண்களை பாதுகாப்பதற்காக மூன்று வெவ்வேறு அளவுகளில் தயாரிக்கப்பட்டுள்ளது இக்கண்ணாடிகள்.




அமெரிக்காவிலே கறுப்பினத்தவருக் காக குரல் கொடுத்து அவர்களுக்காகவே ஒரு பெரிய ஜனத்திரளை ஒன்று சேர்த்த மாட்டின் லூதர் கிங் அவர்கள் ஆற்றிய வரலாற்றுப் பெருமைமிகு உரையின் போது கூடியிருக்கும் மக்கள் கூட்டம் படத்தில்.

1963 ஓகஸ்ட் 28 சுமார் 2 இலட்சம் மக்களுக்கு மத்தியில் சுதந்திரத்திற்கான மாபெரும் ஒன்று கூடல் ஒன்றை நிகழ்த்துமாறு அழைப்பு விடுத்து அவர் ஆற்றிய உரையின் சில உணர்ச்சிவசப்பட்ட கட்டங்கள் கீழே.










உண்மை புறப்பட ஆரம்பிக்கும் முன், பொய் பாதி உலகத்தை வலம் வந்து விடும். - சர்ஜேம்ஸ் காலாகன்.

# மகாவம்ச சிறையிலிருந்து சிங்களவர்கள் விடுபட்டாலென்ன

இன்று சர்வதேச அரங்குகளில் ஆடப்படும் சிறிலங்காவிற்கான சமாதான சதுரங்கத்தின் செக்மேற் (Check-Mate) ஒன்று பாரிசில் உருவாகிறது. இதுவரைகாலை இன முரண்பாடு மீதான அரசியலில் தமிழ்ழர்கள் தமக்கான அரசியல் தீர்வுக்கு முன்மாதிரித் திட்டமொன்றை தயாரிக்கின்றார்கள். விரைவில் ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் கையளிக்கப் போகிறார்கள்.

வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்கும், அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் இனவாத சக்திகளுக்கு மத்தியில் எவ்வாறு தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழ்மக்களுக்கான சுயநிர்ணய உரிமை என்பவற்றின் மீது உருவாக்கப்படும் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை ஐக்கிய தேசிய முன்னணியரசு ஒற்றையாட்சி அமைப்பு முறையிலான அரசியலமைப்புக்கு வெளியே சென்று தீர்க்கப்போகிறது என்பதே இவர்களுக்கான செக்மேற் ஆக அமையப்போகிறது.

22.02.02 இல் எட்டப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தமிழர்களுக்கான நியாயமான அரசியல் உரிமைகளை வழங்குவதிலும் பார்க்க சிறிலங்காவின் பலம் மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலேயே அதிக கவனத்துடன் இருக்கிறது என்பதையே கடந்த பதினாறு மாத நடைமுறைகளும் விளக்கி நிற்கின்றன. இன்றைய உலக வரலாற்றில் எந்த ஒரு நாட்டின் அரசும் உள்நாட்டு யுத்தமொன்றுக்காக தனது மொத்த வருமானத்தில் இருபது வீதத்தை செலவிட்டது கிடையாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு யுத்தச் செயற்பாட்டை தீவிரமாக்கியதன் மூலம் விடுதலைப் புலிகளை அழிப்பதில் அல்லது பலவீனப்படுத்துவதில வெற்றியடையலாம் என எதிர்பார்த்தது. இந்த எதிர்பார்ப்பு நிறைவேறாதது மட்டுமல்ல, நாட்டின் பொருண்மியமும் எதிர்மறை நிலைகளையே பதில்வினையாய் (Response) அடைந்து கொண்டது. அத்தோடு 1996 ஆம் ஆண்டிற்கு பின் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்துக்கு வெளியே திறக்கப்பட்ட யுத்த அரங்குகளால் சிறிலங்கா 2700 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பொருண்மிய அழிவுகளைச் சந்தித்தது எனவும் சிறிலங்காவின் சமாதானத்துக்கான அமைப்புகளின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (தேசிய சமாதான தினம் - 2003.02.22 பேராசிரியர் எக்.ஒ.எ.டி சொய்சா) இவற்றிற்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் சமாதானத்துக்கான கதவு களை தட்ட வேண்டிய அவசியம் சிறிலங்கா அரசுக்கும், திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் உச்ச பயனாளிகளான வணிகர்களுக்கும் ஏற்பட்டது என்பதையே இவை உணர்த்தி நிற்கின்றன.

அண்மையில் தன்னார்வ நிறுவனம் ஒன்றின் கருத்துக் கணிப்பின்படி எண்பது வீதமான சிங்கள மக்கள் சமஷ்டி முறையிலான அரசியல்தீர்வு ஒன்றிற்கு எதிராக கருத்துத்தெரிவித்திருந்தனர். சிங்கள மக்களைப்பொறுத்தவரை யுத்தத்தின் பாதிப்புகள் அற்ற சூழ்நிலையே அவர்களுக்குத் தேவையான ஒன்றாக இருந்தது. இப்போது அவர்களுக்கு அது கிடைத்துவிட்டது. தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி அவர்கள் எது விதத்திலும் அக்கறையற்றிருக்கிறார்கள். அவர்கள் ஏறக்குறைய 80 வருடங்களுக்கு முன்பே சிங்களத்தேசிய உருவாக்கத்தின் போதே ஊட்டப்பட்ட மகாவம்ச உளவியல் எண்ணக்கருவிலிருந்து (Mahavamsa Pschy cological Concept) இன்னும் விடுபடவுமில்லை விடுவிக்கப்படவுமில்லை. இப்போது இனப்பிரச்சினை தொடர்பாக, பெரும்பாலான அச்சு, மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலான விவாதங்களில் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச முதல் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பல அமைச்சர்கள் வரை இதனையே பிரதிபலிக்கின்றார்கள். தமிழர் பிரச்சினைகளின் நியாயமான தீர்வுக்கான குரல் எழுப்பும் விக்கிரமபாகு, கருணாரத்தின போன்றவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய சிறு தொகையினராகவே சிங்கள அரசியல் களத்தில் உள்ளனர். தமிழ் மக்களின் சுய கௌரவத்துடன் கூடிய அரசியல் தீர்விற்கான விழிப்புணர்வு ஒன்று சிங்கள மக்களிடையே ஏற்படுவதற்கான சாத்தியமற்ற இன்றைய சூழ்நிலையில், புதியதொரு அரசியலமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் ஏற்பட வேண்டிய சமஷ்டி முறை

**அன்ரன் அன்பழகன்**

யிலான அரசியல் தீர்வு என்பது கேள்விக் குறியாகவேயுள்ளது.

நிரந்தரமான அரசியல் தீர்வொன்று எட்டப்படுவதற்கான நிலை ஏற்படுமுன் அடைவதற்குதிட்டமிடப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மக்களுக்கான இயல்பு நிலையை தோற்றுவித்தல் எனும் பணி பதினாறு மாத காலக்கெடுவின் பின்னும் இயல்பு நிலையை அடையாது தடைப்பட்டு நிற்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர முடியாத உயர்பாதுகாப்பு வலயம். இவர்கள் தற்போது வாழும் நலன்புரிநிலையங்கள், உறவினர் வீடுகளில் காணப்படும் அடிப்படை வசதியின்மை, கடல்தொழிலாளர்களிற்கான பல்வேறு நெருக்கடிகள், அவமதிப்புக்கள், காணாமற் போனோர் பற்றிய அசுமந்த போக்கு, பாடசாலைகள் கல்விநிலையங்கள் மீதான இராணுவக்கெடுபிடி, மருத்துவ வசதிகள் பற்றாக்குறை இவ்வாறு சமூக பொருளாதார வசதியின்மையும் பயமும், பாதுகாப்பின்மையுணர்வும் விலகா நிலையிலேயே தமிழர்களுக்கான இயல்பு நிலையைத் தோற்றுவித்த செயற்பாடு இன்னும் இருக்கிறது. அமைச்சர்களின் வருகைக்கு எதிராக புறக்கணிப்பு மற்றும் எதிப்புப் போராட்டங்களின் அடித்தளத்தில் மேற்குறித்த விடயங்களினால் எழுந்த வெறுப்பே காரணமாக இருக்கிறது.

சிங்கள மக்களிடையே உருவாக்கப்படும் பெரும்பாலான சமாதானத்துக்கான அமைப்புகளின் மகுட வாக்கியமாக "பொருளாதார வளம் மிகுந்த இலங்கையைக் கட்டியெழுப்புவோம்" என்பதாக அமைகிறதேயன்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளுவோம் என்பதாகவோ தமிழருக்கு சுய கௌரவமும், சமத்துவமும் உள்ள வாழ்வுரிமையை வழங்குவோம் என்பதாகவோ அமைவதில்லை, என்பதிலிருந்தே இன்றைய சமாதானத்தின் நடைமுறைச் சாத்தியத்தின் பலவீனத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

வரலாற்றில் 1911 ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தத்தில் மேல் மாகாணத்தில் தமிழர்கள் தமக்கான தனித்துவப் பிரதிநிதித்துவத்தைக்கோரிய போது அதனை சிங்களத்தலைமைகள் எதிர்த்தன. அன்றே சிங்களப்பேரினவாதம் இலங்கைத்தீவில் எரிந்து கொண்டிருந்ததை உணர முடிகிறது. 1926 இல் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் படித்த ஒரு சிங்கள இளைஞன் யாழ்ப்பாணம் சென்று ஒரு வாரம் தங்கியிருந்தான். யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பியபின் அவன் ஆங்கிலப்பத்திரிகை ஒன்றிற்கு எழுதிய கட்டுரையில் பிரித்தானியர் நாட்டைவிட்டு வெளியேறியதும் எமக்கு யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை எனும் பிரிவுகளாக சமஷ்டி அமைப்பு ஒன்றே ஏற்படுத்தப்பட வேண்டும் எனக்குறிப்பிட்டார். அவர் வேறுயாருமல்ல, பண்டாரநாயக்காவே தான். அப்போது அவருக்கு வயது 27. அந்தக்காலங்களில் தமிழர் எவருமே சமஷ்டி பற்றிப்பேச வில்லை. 1925 இலிருந்து 1951 வரை தமிழும் சிங்களமும் இந்த நாட்டின் தேசியமொழிகளாகவும் அரச கரும மொழிகளாகவும் ஆக்க வேண்டும் என இவர் கருதியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இதே பண்டாரநாயக்கா 1954இல் தனிச்சிங்கள நிலைப்பாட்டிற்கு வந்துவிட்டதுமல்லாமல் இன வன்முறை கலவரங்களையும் ஏற்படுத்திய பெருமையையும் தேடிக்கொண்டார்.

தனிச்சிங்கள அரச கரும மொழி அமுலாக்கத்திலான பாராளுமன்ற விவாதத்தின்போது ஒரு மொழியெனில் இருநாடு, இரு மொழிஎனில் ஒருநாடு என தீர்க்கதரிசனம் உரைத்த இடது சாரித்தலைவர்களில் ஒருவரான கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வாவே பின்னாளில் மிக மோசமான, தமிழ் மக்களுக்கு எதிரான 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பை உருவாக்கும் சிற்பியானார்.

சமஷ்டிபற்றி தமிழ்த் தலைவர்கள் பேசுமுன்பே சிங்களத் தலைவர்களால் பேசப்பட்டது எனினும் மகாவம்ச கருத்துக்களால் வளர்க்கப்பட்டு வந்த சிங்கள பேரினவாதமோ, காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டங்களை முறியடித்தது மட்டுமல்ல, தமிழ் மக்கள் மீதான வன்முறைக் கலவரங்களையும் நிகழ்த்தியது. 1947இல் சோல்பரி அரசியல் யாப்பில் இருந்த சிறுபான்மையினர் காப்பீடுகள் (Minority Safe Guards) எனும் குறைந்தபட்ச நடைமுறைக்கு கொண்டுவரப்படாத சலுகைகளையும், இரத்துச் செய்தே 1972 சிங்கள மொழி அரசகரும மொழியாகவும், பௌத்த மதம் முதன்மை மதமாகவும் மாற்றம் பெற்ற புதியஅரசியல் யாப்பு உருவாகியது. இதன் பின்பே தமிழ் மக்கள் ஒற்றையாட்சி அமைப்பினுள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனும் எண்ணத்தைக் கைவிட்டு தமிழீழம் கோரும் நிலையை அடைந்தனர்.

1978 செப்டெம்பர் 7ஆம் திகதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் இரண்டாவது குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டது. பேரின வாத விடயங்களை மேலும் வலு வாக்குவதற்காக, அரசியல் யாப்பில் மாற்றங்கள் கொண்டு வருவதற்கான நடைமுறைகள் மிக இறுக்க மாக்கப்பட்டன. பாராளு மன்றின் 2/3 பெரும்பான்மை மக்கள் கருத்துக்கணிப்பு என இறுக்க மாக்கப்பட்ட அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கான வாய்ப்புகளும் இறுக்கி வரிந்து கட்டப்பட்டுவிட்டது. இதன் கட்டுக ளைத் தளர்த்தும் வலிமையும், துணிச்சலும் இன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் அதன் தலைவர் திரு.ரணில் விக்கிரம சிங்கவிற்கும் உண்டா என்பதே இனி வரும் காலங்கள் சொல்லும் பதிலாக அமையும்.

1943ஆம் ஆண்டிலேயே சிங்கள மொழிமட்டும் அரசகரும மொழியாகும் சட்டவாக்க பிரேரணையை ஜே.ஆர். ஜெயவர்த்தன அன்றைய சட்ட சபையில் முன் வைத்தார். 1977இல் ஜே.ஆர் பிரதமரானபோது "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என பாராளுமன்றில் பேசி இனவன் முறையைத் தூண்டிவிட்டார். 1978இல் பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டுவந்து பிரிகேடியர் சிறில் ரணதுங்க தலைமையில் ராணுவ-பொலிஸ் கூட்டுப்படைகளால் யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் வேட்டை தொடங்கியது. இப்போதோ "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்'' என்ற ஜே.ஆரின் கோட்பாட்டையே தமிழர்கள் அவரின் தலைமுறையினரிடம் திருப்பி கையளிக்கும் நிலையினை வரலாற்றுச் சக்கரம் தமிழர்களுக்கு ஏற்படுத்திவிட்டது.

மகாவம்சக்கருத்துருவாக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சிங்கள மக்களை யதார்த்தமான வரலாற்றில் இருந்து பெற்றுக் கொண்ட ஸ்தூலமான ஆய்வுகள் மூலம் (Concrete Analysise on concrete Conditions) சரியான தீர்மானத்தை நோக்கி நகர்வதற்கு யார் வழி காட்டுவார்கள் என்பதே இன்றைய கேள்வியாகும். 1948 டிசம்பர் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் மன்றில் எட்டப்பட்ட மனித உரிமைகள் சாசனத்தின் (Human right Chrarters) அடிப்படையில் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு எட்ட தமது பொருண்மிய நலன் களைக் கடந்து தயாராக இருக்க வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்திடமிருந்து எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ●



நன்றி-ஐலண்ட்

# சொல்லியே தீரவேண்டும்

சென்ற வாரம் மண்ணெய் மீதான தீர்வையை விலக்குவதாக "தமிழீழ ஆயப்பகுதி" அறிவித்திருந்தது வரவேற்புக்கும், பாராட்டுதற்கும் உரிய செயலிது.

விடுதலைப்புலிகள் தீர்வை விதிப்பது பற்றி தமிழ் மக்களிடம் அநேகமாக வாதப்பிரதிவாதங்கள் இல்லை. ஆனால் தீர்வையிடும் விதிமுறைகள், நடைமுறைகள் பற்றிய தீர்மானங்களில் அப்படி இல்லை எனச்சொல்லமுடியாது.

இது ஆயப்பகுதி யினருக்கும் தெரியும் என்றே கொள்ளலாம். ஏனெனில், இது பற்றிய விமர்சனங்களை ஆயப்பகுதியின ரும், அரசியல் பிரிவினரும் சில தடவைகள் வர்த்தகர்களை அழைத்து விமர்சனங்களை கேட்டறிந்து கலந்துரையாடியுள்ளனர். அதன் விளைவாக தீர்வையில் பல திருத்தங்களைச் செய்தும் இருந்தனர்.

உற்பத்திச் சக்திமீதான தீர்வை என்பது உற்பத்தியை நேரடியாக பாதிக்கவல்லது. உற்பத்திச் சக்தியை நுகரும் உற்பத்தியாளன் குறைந்த விலையில் அதைப் பெற முடியும் போதே உற்பத்தியில் ஈடுபட ஊக்கமடைவான்.

உற்பத்தியாளனை ஊக்குவிப்பதற்காக உற்பத்திச் சக்திகளுக்கு மானியம் வழங்கும் கொள்கைத் திட்டம் பல நாடுகளிலும் நடைமுறைப் படுத்தப்படுவது தான்.

வடக்கில் மண்ணெய் பிரதானமான உற்பத்திச் சக்தியாகவே உள்ளது. அதிலும் அதிகமாக வன்னிப்பெருநிலப்பரப்பு மின்சாரமற்ற நிலையில் மண்ணெய்யே உற்பத்திச் சக்தியின் பிரதான பாத்திரத்தை எடுத்து வைத்திருக்கின்றது.

விஸ்தீரணமான நிலப்பரப்பு செறிவற்ற குடிப்பரம்பலை கொண்டிருப்பதால் விவசாயப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தடையாகவோ, பலவீனமாகவோ உள்ளது. அதிக வாய்ப்பையோ, உரியவிலையையோ உற்பத்தியாளன் பெறமுடியாத பிற காரணிகளும் இங்குண்டு.

இங்கு நீர் இறைக்கும் பம்பிகள், உழவு இயந்திரங்கள், 'லான்மாஸ்ரர்கள்', பொருட்கள் ஏற்றியிறக்கும் சிறியரக பாரஊர்திகள் என அதிகம் மண் ணெயில் ஓடுவதை யாவரும் அறிவர். எனவே மண்ணெயின்விலை இங்கு உற் பத்திச் செலவை அதிகம் நிர்ணயிக்கும் காரணி.

எனவே உற்பத்தியை பாதிக்காத வகையில் தீர்வைக் கொள்கைத் திட்டத்தை வகுப்பது அவசியமானது.

தவிரவும் வன்னிப் பெருநிலப்பரப்பில் மின்சார சக்தியை பெற முடியாத சூழ்நிலையில் மண்ணெய் என்பது சாதாரண மக்களினதும் கூட அத்தியாவசியப் பொருளாகிவிட்டது. அத்தியாவசியப் பொருள் என்ற அர்த்தத்திலும் அது தீர்வை விலக்கைக் கோரி நின்றது.

இது இன்று உரிய கவனத்தில் எடுக்கப்பட்டு மக்களின் கருத்திற்கு செவிசாய்த்து விலக்களிக்கப்பட்டிருப்பது மகிழ்விற்குரியது.

சிங்கள அரசியல் கட்சிகளோ அல்லது புலிகளை பலவீனப்படுத்த எண்ணும் பிற சக்திகளோ செய்து வரும் பிரச்சாரத்தை விழுங்கிவிட்டு நிற்க தமிழ் மக்கள் முட்டாள்களாக இல்லை. பட்டறிவே இது தொடர்பில் அவர்களைப்பட்டதாரிகள் ஆக்கி வைத்துள்ளது.

ஆனால், அவர்கள் விரும்புவது பொருளாதாரக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் இத்தகைய சில தீர்வைத்திருத்தங்களையே.

அந்த கண்ணோட்டத்தினான விதிமுறைகளையும், நடைமுறைகளையும் மட்டுமே.

**கார்த்திகேசு**

சொல்வன்மை அனைத்துக்கும் பின்னால், ஒரு மனிதன் இருக்க வேண்டும். -எமெர்சன்

# மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள்

குவியத்தில் இருந்து
சு.சிறீஸ்கந்தராசா

**கணவன்** மனைவி, காதலன் காதலி என்பவர்கள் ஏதேதோ காரணத்தால் சில வேளைகளில் பிரிந்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அந்த நேரங்களில் தங்கள் பிரிவுத் துயரங்களை அவர்கள் வெளியிட்டபோது எழுந்த பாடல்கள் மிகவும் அருமையானவை. கவிநயம் மிக்கவை. இலக்கியச் செறிவு நிறைந்தவை. இத்தகைய பாடல்கள் சிலவற்றை கீழேதரப்பட்டுள்ளது. காதலருக்கிடையே ஏற்படும் பிரிவு இரண்டு வகையானது. கருத்தொருமித்த காதலர்கள் புறக்காரணிகளால் பிரிந்திருக்க் நேரிடுவது ஒரு வகை. இது துன்பத்திலும் இன்பத்தைத் தருவது. பழைய நினைவுகளை நினைப்பதிலும், புதிய கனவுகளில். மிதப்பதிலும் அந்தப் பிரிவுக் காலத்தில் ஒருவகை இன்ப வேதனை இதயத்தினுள் பரவிக்கொண்டிருக்கும். அடுத்தவகையான பிரிவு, காதல் முறிந்துவிட்ட, அல்லது கருத்து வேறுபட்ட காதலர்களுக்கிடையானது. நிரந்தரமாகக் கூடியது. வேதனை கொடுப்பதும் வெறுப்பினை வளர்ப்பதும். இவற்றில் முதலாவது வகை நெஞ்சில் நீங்காத நினைவுகளோடு வாழ்வதும். ஒருவர் மற்றவருக்காகவே வாழ்வதான உணர்வுகளோடு வாழ்வது. மட்டக்களப்பு பாடல்களில் இத்தகைய சம்பவங்களைச் சித்திரிக்கும் பாடல்கள் பல உண்டு.

**"கடலே இரையாதே**
**கற்கிணறே பொங்காதே**
**நிலவே எறியாதே – என்ர**
**நீலவண்டார்**
**வருமளவும"**

இந்தப் பாடல் ஒரு பெண் தனது கணவன் வீடு வந்து சேரும் வரை இயற்கையின் இன்பம் தரக்கூடிய நிகழ்வுகள் கூட நடைபெறுவதை விரும்பாதவளாய் இயற்கையிடம் வேண்டுகோள் விடுப்பது போல் உள்ளது. தெளிந்த நிலவு ஒளிரும் சாமத்தில், தென்றல் வீசுகின்ற நேரத்தில், இரைகின்ற கடலின் ஓரத்தில், அவர்களது வீட்டு முற்றத்தில் இருவரும் அனுபவித்த இன்பம் அவளது இதயத்தில் இனிக்கும் நினைவுகளை எழுப்புகின்றன. அதனால்தான் அவன் வீடு வந்து சேரும் வரை, வாடுகின்ற அவள் மனதில் இன்பத்தை நாடுகின்ற அந்த நினைவுகளை வெறுக்கின்றாள். அவற்றைத் தூண்டுகின்ற நிகழ்வுகளை நிறுத்தும்படி இயற்கையிடம் வேண்டுகின்றாள். அத்தோடு மட்டும் நின்றாளா?. ஏன் என்ற காரணத்தை விளக்கி இப்படிப் பாடுகின்றாள்.

**"இரவிலே வீசும்**
**இளங்காற்றும் சந்திரனும்**
**அரவாத வாள்போல– இப்போ**
**அறுக்குதே என் மனம்"**

தனது கணவன் தன் அருகே இருக்கும் போது எல்லையில்லா இன்பத்தைத் தந்த அந்த தென்றலும், நிலவும், இப்போது வாளினாலே அறுப்பது போலத் தன் மனதை அறுக்கின்றனவே. அதுவும் தீட்டப்படாத வாள் என்பதிலேயுள்ள கருத்துச் சுவை எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. கூரிய வாள் என்றால் ஒரே தடவையில் அறுத்து விடும். வலி குறைவாக இருக்கும். கூர்மையற்ற தீட்டப்படாத வாள் என்றால் சித்திரவதை அல்லவா செய்யும்? அது போலத்தான் இப்போது அந்தத் தென்றலும், நிலவும் அவளைச் சித்திரவதை செய்கின்றன எனக் கூறுகிறாள்.

வெளியூர் சென்றவன் வருவதற்கு தாமதமாவதால் அவளால் தாங்க முடியவில்லை. வருடத்தில் ஒரு முறைதான் நெற்பயிர் செய்யப்படுகின்ற பூமியிலே மழையை நம்பி வேளாண்மை செய்யும் விவசாயி. எப்போது மழை வருமோ என்று எண்ணி வானம் பார்த்து காத்திருப்பதைப் போல, தனது இரண்டு கண்களும் சோர்ந்து விடுமளவுக்கு கணவனின் வரவிற்காக காத்திருக்கும் அவள் தன் உள்ளக்கிடக்கையைத் தோழியிடம் பாடலாக வெளிப்படுத்துகின்றாள்.

**"ஒரு போக வேளாண்மைக்கு**
**உயர்வானைப் பார்ப்பது போல்**
**இரு கண்ணும் சோர எந்தன்**
**இராசாவைப் பார்த்திருக்கேன்"**

நீரின்றிக் காய்ந்து கிடக்கும் நிலம். மழை வந்தால் நனைத்து வளம் பெற்றுப் பயிர் செழிக்கும். அது போ்ல அவன் வந்தால் அவள் மனம் குளிர்ந்து, இன்பம் கொழிக்கும். எவ்வளவு உவமானத்துடன் இப்பாடல் அமைந்திருக்கிறது. மேலும் சொல்லுகிறாள்.

**"வருவார் வருவாரென்று**
**வழிபார்த்து**
**குறிபார்த்த நெல்லுக்**
**குடமும் பயிராச்சே"**

குறிபார்ப்பதற்கு வீட்டினுள்ளே வைத்திருந்த தண்ணீர் நிரம்பிய குடத்தின் அடியிலே ஆதாரமாகப் பரப்பிப் போடப்பட்டிருந்த நெல்மணிகள் முளைத்துப் பயிராக வளர்ந்து விட்டன. ஆனால் அவனோ இன்னும் வரவில்லை. அவளாலை இன்னும் தாங்க முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைக்க இப்படிப் பாடுகிறாள்.

**"வெள்ளி விடிவெள்ளி**
**வெள்ளாப்பில் மறையும் மட்டும்**
**சொன்ன கதையெல்லாம்**
**சொர்ப்பனமாய் மறந்தாரோ"**

வானத்திலே நட்சத்திரங்கள் தோன்றும் மாலை நேரத்திலே இருந்து மறுநாள் அவை மறைகின்ற நேரம் வரை விடிய விடியத் தன்னை இன்பத்தில் ஆழ்த்திப் பேசிய வார்த்தைகளை எல்லாம் வெறும் கனவு போல் மறந்து விட்டாரா தன் கணவர் என்ற அவளது பரிதவிப்பை எவ்வளவு எளிதாக உணர்த்துகிறது இப்பாடல்.

இவ்வாறு அவள் கவலையோடு இருக்கும் போது வீட்டுக் கொல்லைப் பக்கத்தில் காகம் ஒன்று கரைகிறது. காகம் அப்படி எத்திக் கரைந்தால் வீட்டுக்கு யாரோ வரப்போகிறார்கள் என்று சொல்லுவார்கள். அவள் காகத்தைப் பார்த்துக் கேட்கிறாள்.

**"காகம் இருந்து நீ**
**கால் கடுக்க ஏனழுதாய்**
**மன்னன் சேதியை**
**மனங்குளிரச் சொல்லாமல்?**

நேற்று இந்தக் காகம் இப்படித்தான் கரைந்தது. யார் யாரோ வந்தார்கள் என் கணவன் மட்டும் வரவில்லை. காகத்தின் மீது கோபம் வருகிறது அவளுக்கு. காகத்தை துரத்துகிறாள்.

**"கத்தாதே காகம்**
**கரையாதே புன்காகம்**
**எத்தாதே காகம்**
**எறிஞ்சிடுவேன் கல்லாலே"**

காகத்தின் மீது அவளுக்கு இப்படி கோபம் வருவதற்கு வேறொரு காரணமும் இருக்கிறது. நேற்று காகம் கரைந்தவுடன் கணவன் வரப்போகிறான் என்று அவள் எவ்வளவோ ஆயத்தங்கள் செய்திருந்தாள். கோழியொன்று பிடித்து அடைத்து வைத்திருந்தாள். அவன் வந்து அதை உரித்து தருவான். பின். அவன் குளிப்பதற்காக தண்ணீர் நிறைத்து வைத்திருந்தாள். அவன் குளித்து விட்டு வருவதற்கிடையில் சமைத்து முடிக்க வேண்டுமே என்பதற்காக சமையலுக்கான இதர வேலைகளையெல்லாம் செய்து வைத்திருந்தாள். எல்லமே வீணாகிவிட்டது. அவன் வரவேயில்லை. அந்த ஆத்திரத்தை காக்கையைத் தவிர வேறுயாரிடம் அவள் காட்டமுடியும்?. காகத்தை துரத்திவிட்டு தன்னந்தனியாக புலம்புகின்றாள்.

**"கோழி அடைச்சு வைச்சேன்**
**கொழியரிசி குத்தி வைச்சேன்**
**தாழத் துலா தாழ்த்தி**
**தண்ணீர் நிறைச்சு வைச்சேன்**
**தேங்காய் துருவி வைச்சேன்**
**தேவைக்கு அரைச்சு வைச்சேன்**
**பாங்காய் சமைப்பதற்குப்**
**பட்ட கஷ்டம் எவ்வளவோ"**

இவ்வாறு கணவன் மனைவியருக்கிடையிலான பிரிவுத் துயர்களை எடுத்தியம்பும் பாடல் ஏராளமாக உ்ள்ளன.



---


# சுயநலம்



**சுயநலம்** ஒரு தனிப்பட்ட மனிதனில் மட்டும காணப்படும் குணமல்ல. அரசியல் கட்சிகள் , ஒரு நாட்டினை ஆளும் அரசின் போக்கு , ஒரு தொழில் ஸ்தாபனம் , ஏன் குடும்பத்தில் மனைவி , குழந்தைகள் , பெற்றோர்கள், சகோதரங்கள், இனத்தவர்கள் போன்றோரிடமும் இக்குணம் காணப்படுகிறது. சுயநலக் குணம் வளரும் சூழ்நிலையைப் பொறுத்தது. போட்டி என்று வந்தவுடன் தோல்வியை சந்திக்கத் திறனில்லாததால் சுயநலப் போக்கினை கடைப்பிடித்து வெற்றி பெற நினைப்பது சகஜம். தனது நலத்தை மட்டும் கருத்தில்கொண்டு செயல்படுபவர்கள் மற்றவர்களை பற்றிச்சிந்திப்பது குறைவு. தமக்கென்ற ஒரு வட்டத்துக்குள் வாழ்பவர்கள். அதனால் அவர்கள் அறிவு விரிவடைவதில்லை. காரணம் தம் அறிவை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளத் தயங்குவார்கள். ஒரு பெரிய தொழில் ஸ்தாபனத்துக்கு நேர்முகப் பரீட்சைக்கு ஒருவர் போன போது அவரிடம் கேட்ட முதல் கேள்வி "உம்மால் எமது ஸ்தாபனத்துக்கு என்ன செய்ய முடியும் ?" என்பதே. ஸ்தாபனம் தனது வருமானத்தை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ளது என்பதை அக்கேள்வி குறிக்கிறது. அந்த தொழில் ஸ்தாபனம் சமூகத்தில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்களை தயாரிப்பதினால், அக்கேள்வியை சுயநலப் போக்கின்றி, "நீர் சமுதாயத்துக்கு எமது ஸ்தாபனத்தின் மூலம் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டிருந்தால் சுயநலம் அங்கு தொனித்திருக்காது.

**சூழ்நிலை சுயநலத்துக்கு வித்திடுகிறது**


பேராசை, அந்தஸ்தை உயர்த்த வேண்டும், குறுக்கு வழியில் முன்னேற வேண்டும் போன்ற போக்குள்ளவர்கள் பெரும்பாலும் சுயநலவாதிகள்.. ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் சுயநலப் போக்குள்ளவர்களாக மற்றவர்களைப் பற்றி சிந்தியாது வாழ்ந்தால் அவர்களைப் பார்த்து பிள்ளைகளும் அப்போக்கினை பின்பற்றத் தொடங்கிவிடுவார்கள். தம் உறவினர்கள் தம்மை விட அந்தஸ்தில் ஒரு படி உயர்ந்தவர்கள் என அறிந்தால் அவர்களை விட அந்தஸ்தில் உயர வேண்டும் என்ற எண்ணம் சுயநலப் போக்கிற்கு வித்திடுகிறது.



காரணம் தமது திட்டங்களையும் தமது நிதி நிலமைபற்றியும் பிறர் அறியக்கூடாது என்ற எண்ணம் தோன்றுகிறது. சுயநலப் போக்கினால் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்கிறோம் என்ற உணர்வு. ஆனால் உண்மையில் அப்போக்கினால் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை பலருடன் கலந்து ஆலோசித்த அவர்கள் அனுபவங்களை அறிந்து தங்கள் பிரச்சினைகளை தீர்க்கும் சந்தர்ப்பத்தை இழக்கிறார்கள். உதாரணத்துக்கு வேலையில் இருந்து நிற்பாட்டப்பட்ட ஒருவர் தனது பிரச்சினையை தன் நண்பர்களோடு பகிராமல் இருப்பதினால் தான் செய்த வேலை போன்று ஒரு வேலை நண்பர் ஒருவர் வேலைசெய்யும் ஸ்தாபனத்தில இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை இழக்கிறார். போட்டியும் பொறாமையும் சுயநலத்திற்கு உரமாகின்றன. தோல்வியை ஏற்றுக் கொள்ளும் சக்தி அற்றவர்கள் சுயநலப்போக்கினை கடைப்பிடிப்பார்கள்.

**விஸ்வா**

☞ நமக்கு பணம் தேவையில்லை என்பதை நாம் நிரூபித்தால் நமக்கு கடன் கொடுக்க தயாராயிருக்கும் வங்கிகள் –பாப்ஹாப்



## தொடர்கதை

## அத்தியாயம் - 11

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

பரந்தனுக்கும் கிளிநொச்சிக்கும் நடுவே கண்டிவீதியின் அருகே வேலாயுதத்திற்கு குடியிருக்க அரைஏக்கர் காணி கிடைத்துவிட்டது. மூன்று வருடங்கள் காத்திருந்த பின்னர் தான் இந்தக்காணி கிடைத்திருந்தது. இன்ன இலக்க காணி உனக்கு என்று கூட்டிப் போய்க் காட்டினார்கள். இந்த மூன்று வருடங்களிலும் மேலும் குத்தகைக்கு வயல் எடுத்து செய்திருந்தார்கள்.

இப்போது சிவத்திற்கும் வயல் செய்வதில் ஈடுபாடு வந்துவிட்டது. நெல்லுக்கும் புல்லுக்கும் வித்தியாசம் தெரிந்தது. ஏர் பிடித்து உழும் லாவகம் படிந்தது. வரம்பு கட்டவும் கதிர் அறுக்கவும் சூடு மிதிக்கவும் இயல்பாய் முடிந்தது. மண்வெட்டி பிடித்ததில் தோள்களில் உரம் ஏறிற்று.

வேலாயுதத்திற்கு காணி கொடுத்த பிறகு குமரபுரம் கிராமவிஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கர் வீட்டுக்காணியும் மூன்று ஏக்கர் வயல்காணியும் கொடுக்கப்படும் என்று அறிவித்தபோது சிவம் தனக்கு அதில் வேண்டும் என்று பதிந்து கொண்டான்.

“நீயும் வயல்காணி எடுக்கலாம் அண்ணை வீட்டுக்காணி மட்டும் எடுத்து என்ன செய்யப்போகிறாய்” என்று கேட்டான் சிவம்.

“இல்லையடா எப்பவும் தெருக் கரைக்காணிக்கு மதிப்புக் கூடத்தானே. இந்தக்காணி தான் எனக்கு நல்லது. ஒரு பக்கம் கல்வீடு கட்டி இருக்கலாம். கொஞ்சக்காலம் பொறுத்து மற்றப்பக்கத்தில ஒரு மில் போடப் போறன்”

“மில்லோ”

“இங்கயிருந்து நெல்லுக் குத்த சனங்கள் ஆனையிறவுக்கு போகவேண்டியிருக்கு. இங்க மில் போட்டால் நல்ல உழைப்பு இருக்கும். வயல்மட்டும் செய்யிறதோட நிற்கக்கூடாது. வயல் செய்து உழைக்கிற காசை மில், கட்டடம், காணி எண்டு சொத்துக்களாய் மாத்த வேணும். மண் எங்களுக்கு விளைஞ்சு தந்தால் எல்லாச்செல்வமும் எங்களிட்ட வந்தது மாதிரித்தான். இங்க றங்கூன் மணியத்தார், பிளாக்கர் பொன்னம்பலம், மாணிக்க வாத்தியார் எண்டு இருக்கினம். அவையள் மாதிரி பெரியஆட்களாய் வரவேணும்” வேலாயுதம் சொல்வதை சிவம் பிரமிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

“பூநகரி ரோட்டில பரந்தன் சந்திக்குக்கிட்டவாய் கொஞ்ச வயல்காணி வாங்க வேணும்.”

அவன் நினைத்தால் அதை செய்து முடிப்பான் என்று சிவத்துக்குத்தெரியும்.

வேலாயுதத்திற்குக் கிடைத்த அரை ஏக்கர் காணியையும் காடு வெட்டி எரித்து துப்புரவு செய்தார்கள். மரியக்கண்டுவும் அவர்களுடன் நிண்டு முழுநாளும் உழைத்தான். காணிக்கு முன்புறம் பிரதான வீதி. பின்புறம் ரயில் ஓடும் தண்டவாளப்பாதை. பரந்தன் சந்தியிலிருந்து நடந்து போகின்ற அளவு தூரத்தில்தான் காணி இருந்தது. காணி துப்புரவாக்கி முடிந்ததும் இரண்டு அறை ஒருவிறாந்தை என்று வீடு எழும்பியது. அந்த வருடம் சூடடித்து முடிய முதல்தடவையாய் சங்கங்கள் லொறிகளில் நெல்ஏற்றிச் சென்றன. தெருக்களில் இப்போது மனித நடமாட்டமும் அதிகரித்தது. வேலாயுதம் அந்தத்தடவை ‘போர்ட்பிறிவெற்’ கார் வாங்கினான். கார் ஓடுவதற்குத்தான் பழகும் போதே சிவத்தையும் பழகவைத்தான். இருவருமாய்காரில் போய் கனகம்மச்சாளையும் இரண்டு வயது பாலச்சந்திரனையும் கூட்டி வந்தார்கள்.

மழை லேசாய் தூறிக்கொண்டிருந்த ஆவணி மாதக்கடைசியில் புதுவீட்டுக்கு குடி வந்தார்கள். சிவம் வயல் வீட்டிலேயே இருந்து கொண்டான். நேரம் கிடைக்கும் போது அங்கு போனால் நல்ல சாப்பாடு கிடைக்கும். ஒடியல்புட்டும் குரக்கன் புட்டும் சாப்பிடமுடிந்தது. வேலாயுதம் வேறு காணிகள் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு இந்தக் காணியை சிவத்தையே செய்யச்சொல்லிக் கொடுத்தான். வயல்ச்செலவுக்கு காசும் கொடுத்தான். அடுத்த வருடம் வேலாயுதம் உழவு இயந்திரம் வாங்கினான்.

தனக்குத்தருவதாகச் சொல்லப்பட்ட குமரபுரக்காணி இன்னும் கொடுக்கப்படாதது பற்றி சிவத்துக்கு மிகவும்கவலையாக இருந்தது. டி.ஆர்.ஓ வைப்பார்த்துக் கேட்கலாம் என்றாலும் அவர் எப்போது கிளிநொச்சி வருகிறார், போகிறார் என்று தெரியாமல் இருந்தது. யாழ்ப்பாணத்திலோ பளையிலோ இருப்பதாக சொன்னார்கள். விதானைமார்களுக்கும் விபரம் தெரியவில்லை.

சிவலிங்கம் விதானையை ஒரு தடவை பரந்தன் சந்தியில் சந்தித்தபோது “குமரபுரத்திட்டத்தில தரப்போற வயல் காணியள் நெல் செய்கைக்கு நல்லதோ எண்டு ஆராயிறதுக்கு மண்எடுத்து கொழும்புக்கு அனுப்பியிருக்கினமாம். வாறமாதம் கொழும்பிலயிருந்து ஆட்கள் பார்க்க வருவினமாம். நல்ல மண் எண்டு அவை தீர்மானிச்சால் கெதியில காணியளைக் குடுப்பினம்” என்று விபரம் சொன்னார்.

இம்முறை உழவியந்திரத்தால் சூடடித்தார்கள். மிக வேகமாயும் இலகுவாயும் வேலைகள் நடந்தன. உழவும் அப்படியே. கிடாமாடுகளுடன் இந்த நாலைந்து வருடங்களாக பட்டபாடு நினைவுக்குவந்தது.

அந்தத்தடவை நெல்விற்ற கையுடன் ஊருக்குப் போய்வரவேணும் என்று நினைத்துக்கொண்டான். தலை மூட்டையாய் உடுப்புக்கள் கொண்டு வந்து விற்கும் வியாபாரி முகமது காக்கா அன்று அவர்கள் காணிக்கும் வந்திருந்தார். முதன்முதல் தான் சொந்தமாய் வயல் செய்ததை நினைத்து எல்லோருக்கும் உடுப்பு வாங்கினான. குடிசை



வாசலில் மூட்டையைப்பிரித்துக்காட்ட அதிலிருந்து ஆச்சிக்கு ஒரு சீலை, அப்புவுக்கும் சின்னையனுக்கும் கரை போட்ட நாலுமுழ வேட்டி, அன்னத்துக்கு சரிகை போட்ட பட்டுச் சீலை, அன்னத்தின் குழந்தைக்கு பஞ்சுச் சட்டை எல்லாம் எடுத்தான். முகமது காக்கா சொன்ன அளவு நெல்லை அளந்து கொடுத்தான்.

அண்ணனிடம் சொல்லிக் கொண்டு வண்டில்கட்டிக்கொண்டு ஊருக்குப்போனான். அப்பு காலில் வாதம் ஏற்பட்டு இப்போது தோட்டத்தரைக்கு போவதில்லை. வேலாயுதம் அவர்களுக்கு குறைவைக்காமல் நெல்லும் காசும் அனுப்பிவைப்பதால் அவர்களின் சீவியம் நடந்து கொண்டிருந்தது. சின்னையன் வண்டில் ஓடி உழைப்பது போதாமலே இருந்தது.

அவனைக்கண்டதும் அன்னத்தின் மூன்று வயதுக் குழந்தை கணேசு ஓடி வந்து மாமா என்று கட்டிக்கொண்டான். வாரித்தூக்கிக்கொண்டான். அப்பு நன்றாய்தளர்ந்து விட்டார். தலைவாசலில் பாய்விரித்துப்படுத்திருந்தார். ஆச்சி அவனைப்பார்த்து

“என்ன மோனை மெலிஞ்சு கறுத்துப் போனாய்” என்றாள் கவலையாக

“சும்மாயிரணை. சொக்கு வைச்சிருக்கு. மீசை தடிச்சிருக்கு. வண்டி வைச்சிருக்கு. நீ மெலிஞ்சு போனான் எண்டுசொல்லுறாய்.” அன்னம் சிரிப்போடு சொன்னாள். தான் கொண்டு வந்த உடுப்புக்களை எடுத்து எல்லோருக்கும் கொடுத்தான்.

“சிவலையும் வெள்ளையும் மேய்ச்சலுக்கு தரவைக்குப் போட்டுதுகள் இவர் பொழுது பட சாய்ச்சுக்கொண்டு வருவார்.” என்றாள் அன்னம்.

“நான் போய்பாத்துக்கொண்டுவாறன்”

“சரி நீ போ. நான் தண்ணி அள்ள புளி வெட்டைக்கு வரவேணும்” சிவம் வேட்டியை மடிச்சுக்கட்டிக்கொண்டு தரவைக்குப் போனான்

வெயிலின் சூடு இறங்கிவிட்ட நேரம் மஞ்சள் வெயில் எங்கும் பரவியிருந்தது. தரவைவெளியில் பல மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சிவலையையும் வெள்ளையையும் பார்த்து தடவிவிட்டான்.

மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த நடராசுவை பாத்துவிட்டு

“பள்ளிக்கூடம் போறியோ இல்லை மாடு தான் மேய்ச்சுக்கொண்டிருக்கிறியோ எண்டு கோட்டான்.

“ பள்ளிக்கூடம் போக வேண்டாம் எண்டு அப்பு சொல்லிப்போட்டுது. போனமாரிக்கு கறவை மாடு வேண்டினாங்கள். இப்ப பால் கறந்து குடுக்கிறனாங்கள். நான் தான் பால் குடுக்கப்போறது.”

நடராசு இப்போது காற்சட்டை போட்டிருந்தான். இடுப்பில் நாடா கட்டியிருந்தான். பதின் மூன்றுவயதுக்கு இன்னமும் மெலிந்த தோற்றத்தில் இருந்தான்.

“அண்ணை!” கிழித்தட்டு மறிக்கப்போகேலையே”

“மாடுகளைப்பாத்திட்டு போகப்போறன்.”

“உங்கடவிளையாட்டுத்தான் திறம் அண்ணை”

சிவம் அவனைப் பார்த்துச்சிரித்தான்.

“இண்டைக்கு விளையாடுவம் என்ன.”

தரவைக்கரையோடு நாலைந்து பெண்கள் இடுப்பில் குடங்களுடன் நல்ல தண்ணீர் அள்ள புளிவெட்டைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

“ என்ன சிவத்தான்.... எப்ப வந்தது....”

பார்வதி அக்காள் அவனைப் பார்த்துவிட்டு கேட்டாள்.

“இண்டைக்குத்தான்”

அந்தப்பெண்களுக்குள் ஒரு பெண் மட்டும் புதியவளாக இருந்தாள். மஞ்சள் நிறத்தில் கறுப்புக்கரை போட்ட நெசவு சீலை கட்டியிருந்தாள். தலையை இழுத்து இறுக்கிப் பின்னியிருந்தாள்.

இதுவரை பார்த்திராத பெண். அவன் யோசித்துக் கொண்டிருந்தபோதே அவர்கள் நடந்து போய்விட்டார்கள். அந்தப் பெண் யார் என்று நடராசுவைக் கேட்கலாமா என்று முதலில்யோசித்தான். வேண்டாம். உவன்போய் சிவம் அண்ணை விசாரிச்சவர் என்று யாரிடமாவது சொல்லிவிடக்கூடும்.

அவன் புளிவெட்டைக்குப்போன போது நடராசுவும் கூடவே வந்தான். சண்முகமும் தியாகனும் தங்கள் தங்கள் மச்சாள்மாரைத்திருமணம் செய்திருந்தார்கள். ஆனாலும் விளையாடுவதை விடவில்லை. புளிவெட்டையில் புழுதிபறந்தது. அவனைக் கண்டதும் ஆரவாரமாக வரவேற்றார்கள்.

“ வாடாப்பா நீயும் வந்து விளையாடு.”

அவனும் விளையாட கோட்டில் கால் வைத்தபோது சற்றுத்தூரத்தில் நல்ல தண்ணீர் கிணற்றினருகே அன்னம் நின்று அந்தப்பெண்ணுடன் கதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. இறங்கடா சிவம்.... நீயும் அந்தக்கோட்டில நில்லு”

விளையாட்டுத்தொடங்கியது....

அடிக்கடி பார்வை கிணற்றடிப்பக்கம் பாய்ந் தது. அன்னம் ஏதோ சொல்ல அந்தப்பெண் வாய் பொத்திச்சிரித்துக்கொண்டிருந்தாள். என்ன மலர்ச்சியான முகம்.....

அன்னம் தண்ணீர்க்குடத்துடன் இந்தப்பக்கம் வர அந்தப்பெண் மற்றப்பெண்களுடன் மறு பக்கமாய் போனாள்.

இவள் ஆராய் இருக்கும்.... இந்தப் பக்கம் முந்தி ஒரு நாளும் பாக்கேலையே.... யோசித்துப் பார்த்தான்.

“சிவம் விட்டிடாதையடா. ஐயோ என்னடா பழத்தை விட்டுட்டாய் எங்கையடா வாய் பாத்துக்கொண்டு நிக்கிறாய்.”

சண்முகம் பெரிதாய்கத்தினான். அவன் தன்னை உலுக்கிக்கொண்டான். மனதுக்குள் வெட்கமாய்இருந்தது.

“இனி வா பாப்பம்”

முழுக்கவனத்தையும் விளையாட்டில் பதித்தான். விளையாடி முடிந்து தரவைக்குப்போய் சின்னையனுடன் சேர்ந்து மாடுகளை சாய்த்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

இரவு எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் அன்னத்திடம் மெதுவாய்க்கேட்டான்.

“கிணத்தடியில கதைச்சுக்கொண்டிருந்தாய் ஆரடிஅது”

அன்னம் சட்டென்று திரும்பி அவனைப்பார்த்தாள்.

“இல்ல ஒருநாளும் பாக்காதஆளாக் கிடக்கு. அது தான்.”

“அது பாருவதி அக்காளின்ர சொந்தக் காரப்பெட்டை. வந்து நிக்குதாம். ஏன் கேட்கிறாய்.”

“சும்மா தான்.”

சிறிது நேரம் பொறுத்துக்கேட்டான்.

“மெய்யேடி. என்ன பேராம்”

“ஆருக்கு?”

“அது தான் நீ கதைச்சியே அந்தப்பெட்டைக்கு”

“பேரை ஏன் கேட்கிறாய்”

“எனக்கென்னத்துக்கு பேர் சும்மா கேட்டனான்.”

அன்னம் அவன் முகத்தை ஒரு தடவை பார்த்து விட்டு “பராசக்தி” என்றாள் மெதுவாய். அவன் எழும்பி வந்து பாய் விரித்து படுத்துக்கொண்டான்.

இடுப்பில் குடத்துடன் அந்தப் பெண் நடந்து போனதுதான் கண்ணுக்குள் நின்றது.

மறுநாள் மாலை தரவைவெளியிலேயே போய்நின்றான். மற்றைய பெண்களோடு அவள் போகும்போதும் வரும் போதும் பார்த்துக்கொண்டு நின்றான். சின்ன முகத்தில் மூக்குத்தி மின்ன மெல்லிய தோற்றத்தில் இருந்தாள். காற்றில் பறக்கும் சேலைத்தலைப்பை இழுத்து இடுப்பில் சொருகிக்கொண்டே நடந்தாள். அவன் மனதுக்குள் ஒருவித பரபரப்பு ஏற்பட்டது. அன்னத்துடனும் எதுவும் கதைக்கமுடியவில்லை. நாலாம் நாள் மனமில்லாமல் கிளிநொச்சிக்குக் கிளம்பினான்.

அடுத்த விதைப்பு நேரத்தில் சிவத்துக்கு குமரபுரத்தில் காணி கிடைத்தது. கிளிநொச்சியில் நடந்த காணிக்கச்சேரியில் யாழ்ப்பாணத்திலிருந்து டி.ஆர்.ஓ முருகேசம் பிள்ளை வந்து இந்தக்காணிகளை பகிர்ந்து கொடுத்தார். காணி உத்தியோகத்தர்கள், சுற்று வட்டார விதானைமார் எல்லோரும் நின்றிருந்தார்கள். அவர்களுக்கு காணிகாட்டுவதற்காக அந்தப்பகுதி விதானையாரும் காணி உத்தியோகத்தரும் வந்திருந்தார்கள்.

பரந்தன் சந்தியிலிருந்து மேற்காகப் போகும் பூநகரி வீதியில் வலதுகைபக்கம் திரும்பும் வீதியில் குமரபுரம் அமைந்திருந்தது. ஒவ்வொரு ஏக்கர் வீட்டுக்காணிக்கும் மூன்று ஏக்கர் வயல்காணியும் கொடுக்கப்பட்டது. வீட்டுக்காணிகளுக்குரிய ஒவ்வொரு ஏக்கர் முடிந்ததும் தொடர்ந்து வயல்காணிகள் கிராமத்தைச்சுற்றியிருந்தன. குமரபுரத்தின் நடுப் பகுதியில் அவனுக்குரியது என்று வீட்டுக் காணி இலக்கம் எழுதி பதிந்துதந்தார்கள். கிராம எல்லையில் மூன்றுஏக்கர் வயல் காணியும் பதிந்துதந்தார்கள். அன்றும் மழை மெலிதாய் தூறிக்கொண்டிருந்தது.

சிவம் தனக்குக்கிடைத்த வீட்டுக் காணியை ஒற்றையடிப் பாதையில் நின்றபடி பார்த்தான்.

பாலை, முதுரை, விண்ணாங்கு, விளாத்தி போன்ற மரங்களுடனும் அடத்தியான பற்றைகளுடனும் பெரியகாடு போலஇருந்தது எனக்குச் சொந்தமான மண்இது.

இனிமேல் எனது இருப்பிடம் இது தான். மனம்சிலிர்த்துக்கொண்டது. அந்தக்காடு அவனைப்பயமுறுத்தவில்லை. காடு இப்போது வசீகரமாகத் தெரிந்தது.

(பகுதி-01 நிறைவுற்றது)

வெற்றிக்கு நூறு தந்தைகள் உண்டு. ஆனால் தோல்வியொரு அனாதைக்குழந்தை. -கலியாஜோசியானோ




# எங்களையும் வாழ விடுங்களேன்...

தமிழ் நிலா

பிறந்து,தவழ்ந்து,(அ) எழுதிப்பழகிய மண்ணைப்பாடும் பறவைகளாய் சிறகடித்துத் திரிந்த ஊர் வயல்வெளிகளை, தோழிகளோடு நீராடி மகிழ்ந்த நீரோடைகளை, எந்த ஏகாதிபத்தியத்திற்கும் அடிபணியா மண்ணை எப்போது பார்ப்பேன் என்று அவள் மனம் ஏங்கிக்கொண்டிருந்தது. அவள் அவசரத்திற்கு தடை போடுவது போல கொழும்பு மாநகரின் பெருந்தெருக்களில் அடிக்கடி தோன்றிய சிவப்பு சிக்னல் எரிச்சலை ஊட்டியது. பல திசைகளிலிருந்தும் கேட்கும் வாகன சமிஞ்ஞை ஒலிகள் போல காதுகளைச் செவிடாக்கின. எல்லோருக்கும் அவசரம்.

பச்சை சிக்னலுக்குக்காய் காத்திருந்த போது அவள் பார்வை முன்னால் சென்று கொண்டிருந்த கார் மீதுபதிகிறது. அதற்குள் இருந்த கணவனும் மனைவியும் கிடைத்த இடைவெளியை வீணாக்காமல் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். இயந்திரமயமான வாழ்க்கையில் குடும்பவிவகாரங்கள் பற்றிப் பேசநேரமில்லை. இப்படியான நேரங்களைப்பயன்படுத்திகொள்கின்றார்கள் போலும். சில வருடங்களாய் அவளும் இந்த வாழ்க்கைதான் வாழ்ந்துகொண்டிருக்கின்றாள். புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் அவள் சமாதான காலத்தில் தாயகத்தைப் பார்த்து விடுவோம் என்ற ஆவலில் போய்க்கொண்டிருக்கிறாள். அவள் ஆவல் டிறபிக் லைற்றிற்குத் தெரியாவா போகிறது?

பாடசாலை முடிவடையும் நேரமாகையால்,வழக்கமாகவே போக்குவரத்து அதிகமாய் இருக்கும். அந்த வீதியில் வாகனங்கள் நெருக்கியடித்துக்கொண்டிருந்தன. இந்த வாகனங்களின் சாரதிகள் போற்றப்படவேண்டிய பொறுமைசாலிகள் தான். இவர்களின் வாகனத்துக்கருகே நின்ற டொல்பின்னுக்குள்ளிருந்து சிரிப்பொலி எழவே திரும்பிப்பார்க்கிறாள். துன்பம் என்றால் என்னவென்றுதெரியாத அந்த மாணவர்கள் உல்லாசமாய்ச்சிரித்துக் கதைத்துக்கொண்டிருந்தனர். காலில் செருப்பில்லாமல் பிஞ்சுப் பாதங்களில் கிரவற்கற்கள் குத்த பாடசாலை செல்லும் தமிழ் மாணவர்கள், காலையில் சாப்பிடாமல் கல்வி கற்கச்சென்ற பிள்ளை கிபிர்த்தாக்குதலில் கொல்லப்பட்டதால் விரக்தியடைந்த அம்மாக்கள், செந்திறமாகிய வெள்ளைச்சீருடைகள் அனைத்தும் அவள் கண் முன்னால் தோன்றின. “எங்கள் மாணவர்களையும் உங்கள் மாணவர்கள் போல் நிம்மதியாய் படிக்கவிடுங்களேன். அதிகமாய் உங்களிடம் நாம் கேட்கவில்லை.

எங்களின் பூக்களை கருகவிடாதீர்கள் என்றுதான் கேட்கின்றோம்.”

அவள் மனம் யாரிடமோ கேட்டது. இந்த “றோட்டிலடிறபிக் கூடவா இருக்கு உள்றோட்டால போவம்.”

அவர்களிடமிருந்து பதில் வருமுன்னே ஓட்டுநர் வாகனத்தை திருப்பினார்.

“இந்த நகரத்தில உள்ள பணக்காரரின்ர வீடுகள் எல்லாம் இந்த இடத்திலதான் இருக்கு”

ஓட்டுநரின் குரலைக்கேட்டவள் வீதியின் இருபக்கமும் இருந்த வீடுகளின் மீது பார்வையைச்செலுத்தினாள்.

அந்த ஆடம்பரமாளிகைகள் தங்கள் உரிமையாளரின் பொருளாதார நிலையைப்படம் பிடித்துக்காட்டிக் கொண்டிருந்தன. நெற்றிவியர்வை சிந்தி உழைத்து வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி, மிச்சம் பிடித்து தமிழன் கட்டிய வீடுகள் கற்குவியலாய் கிடக்கும் கோலம் மனக்கண்ணில் விரிந்தது. அப்பாவின் இரத்தமும் வியர்வையும் கலந்துகட்டியவீட்டை விட்டு வந்து அம்மாவின் புடவைகளால் மறைப்புக்கட்டி வாழ்ந்த வாழ்க்கையை ஒரு கணம் நினைத்துப்பார்த்தாள். அந்தக்குடிசைகளிலாவது நிம்மதியாகவாழவிட்டார்களா பாவிகள். அடுத்தடுத்து எத்தனை இடப்பெயர்வுகள் அவள் மனம் கனத்தது.

“இந்த சமாதானக்காலமும் சிங்களவருக்குத்தான் நன்மையாக இருக்கும். எங்கடசனம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் வாடுதுகள். உயர்பாதுகாப்பு வலயமோ என்னவோ எண்டு சொல்லிக்கொண்டு எங்கட சனத்த அதுகளின்ர வீடுகளில குடியிருக்க விடுறாங்களில்ல. எல்லாச்செய்தியளும் அதத்தானே சொல்லிக்கொண்டு இருக்கு.”

அவளின் மனநிலையைப் புரிந்துகொண்டது போல அவள் கணவனின் கூற்றும் அமைகிறது.


வாகன நெருக்கடிகளைத் தாண்டி போக்குவரத்து ஓரளவு குறைந்தது. வீதிக்கு வாகனம் வந்ததும் அதன் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. மழைமேகம் சூழ்ந்திருந்தது. சில்லென்று குளிர் காற்று முகத்தில் அறைந்தது. இது அவளுக்கு மிகவும் பிடித்த ஒன்று இருமருங்கும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் பச்சைப்பசேலென்று அழகாய் காட்சியளித்தன. கண்களுக்கு குளிர்ச்சியைக்கொடுத்த அக்காட்சி அவள் மனதைக் கொள்ளை கொண்டது.

வாகனம் அதிவேகமாய் விரைந்துகொண்டிருந்தது. ஐந்தரை மணிக்குபின் தடைமுகாமைத்தாண்ட முடியாதல்லவா? முட்கம்பித்தடைகளும், காவலரண்களும் இது தமிழர்களின் பிரதேசம் என்று பறைசாற்றின. ஆங்காங்கே மரங்களிற்கும் கீழ் இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

“உங்கட ஆக்கள் அங்க உல்லாசமாய் வாழ்ந்துகெண்டிருக்கினம். ஆனா நீங்கள் அதையெல்லாம் விட்டுட்டு எங்கட நிம்மதியைக்கெடுக்கவந்திருக்கிறீங்கள். ஆற்றையோ சுயநலத்திற்காக நீங்கள் அநியாயமாச் சாகிறீங்கள்” சிப்பாய்களைப்பார்த்து அவள் முணுமுணுத்துக்கொள்கிறாள்.

எரிபொருள் நிரப்புவதற்காய் வாகனம் தரித்துநின்றது. “அக்கா அப்பிள் வாங்குங்கோ பன்னிரெண்டு பழம் நூறுரூபா” “அண்ணா ஒரேஞ் வாங்குங்கோ” நாலைந்து சிறுவர்கள் வாகனத்தைச்சுற்றி வளைத்துக்கொள்கிறார்கள். அவர்களின் பிஞ்சு முகங்களையும், கொஞ்சும் விழிகளையும் பார்த்தால் அப்பிள் சாப்பிட விரும்பாதவர்களையும் வாங்கத் தூண்டும். அந்தச்சிறுவர்களுக்காகவாவது பழம் வாங்கவேண்டுமென நினைத்தாள்.

“அம்மா அப்பிள் வேணும்” மகள் கேட்டபோது “என்னிடம் வாங்குங்கள், என்னிடம் வாங்குங்கள், என்று அவர்கள் விழிகள் கெஞ்சின. முண்டியடித்து கண்ணாடியை உடைத்து விடுவார்கள் போல இருந்தது. முந்திக்கொண்டவனிடம் பழத்தை வாங்கினாள். விற்றுவிட்ட சந்தோசத்தில் அவன் முகம் மலர்ந்தது. மற்றயவர்கள் ஏமாற்றத்துடன் அடுத்த வாகனத்தை நோக்கி ஓடினர். புத்தகம் சுமந்து பள்ளிசெல்லவேண்டிய வயதில் பழம் விற்று குடும்பத்தைக்காக்கும் அவர்களுக்காய் அவள் நெஞ்சம் அழுதது.



“இந்தப்பிள்ளையின்ர அப்பா சிறையில இருக்கிறாரோ அல்லது புதைகுழிக்கே அனுப்பீட்டாங்களோ! படிக்கவேண்டிய வயசில குடும்பத்தை சுமக்குதுகள். இதுகளின்ரகையை எதிர்பார்த்து எத்தனை உயிர்கள் காத்திருக்கின்றதோ!

எரிபொருள் நிரப்பியதும் வாகனம் தடைமுகாம் நோக்கி விரைகிறது. சிறிது தூரம் கழிந்ததும் எங்கும் இராணுவத்தலைகளே தெரிகின்றன. விளையாடுபவர்களும், காவல் நிற்பவர்களும், வேலைசெய்பவர்களும், காவலரண் அமைப்பவர்களுமாய்க்காட்சியளித்தனர்.

“பொங்கு தமிழில சொன்னது போல நாங்கள் எங்கட வீடுகளுக்குப் போறதுக்கு நீங்கள் உங்கடவீடுகளுக்குப்போகவேணும். அப்பதான் நீங்களும் சந்தோசமா இருப்பீர்கள் நாங்களும் நிம்மதியாய் இருப்பம்.”

இராணுவத்தினரைப் பார்த்து அவள் எண்ணிக்கொண்டாள். தடைமுகாம் வந்துவிட்டது. இராணுவீரன் ஒருவன் யாரிடமோ எரிச்சலாய்க்கத்தினான். அவன் பேச்சில் எல்.ரீ.ரீ என்று அடிபடவே காதைக்கூர்மையாக்கினாள்.

“போ போ தமிழங்க எல்லாம் எல்.ரீ.ரீ தானே” “ஐ.சி. யைக் காட்டுவீங்களா” வேறொருவன் இவளிடம்கேட்டான். இவள் திகைத்துவிட்டாள்.

“அட சிறிலங்கா ஆமிக்காரன் இப்படிக்கதைக்க எப்ப பழகினவன். “இது சமாதான காலம் தானே. அதுதான். கொஞ்சம் மாறி இருக்கிறாங்கள். முன்னமெண்டா எங்கள மனிசராய்க்கூட மதிக்கமாட்டாங்கள். எல்லாத்துக்கும் காரணம் எங்கட சகோதரர்கள் குடுத்த அடிதான்.

“ஏன் நீங்க எல்லாம் இயக்கத்தில சேந்தீங்க? நேற்று ஒரு பொண்ணு வந்தது. அது காலைக் குடுத்துட்டு இருக்கு. உங்களை எல்லாம் பார்த்து நம்மட ஆக்கள் மிச்சம் கவலைப்படுறாங்க.”

தடைமுகாம் தாண்டிச்செல்ல வந்த பெண்போராளிகளிடம் இராணுவவீரன் ஒருவன் கூறினான். “ஆகா! ஆடு நனையுது எண்டு ஓநாய் அழுதிச்சாம்.”

அவள் மனதுக்குள் சிரித்தாள்.

தடைமுகாம் தாண்டி வன்னி மண்ணுக்குள் நுழைகின்றார்கள். சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் உற்சாகத்தில் அவள் மனம் துள்ளிக்குதிக்கிறது. ஜேர்மனிக்குப் போகும் போது இருந்த கட்டடங்கள் எதையும் காணவில்லை. எது எந்த ஊர் என்று அடையாளம் காண கடினமாய் இருந்தது. இருமருங்கும் நின்ற மரங்களும் போரின் வடுக்களைத் தாங்கிநின்றன. ஓங்கி வளர்ந்துநிற்கும் தென்பகுதி தென்னந்தோப்புகளும் மரங்களும், இங்கே ரவைகளாலும், குண்டுகளாலும் உருக்குலைக்கப்பட்ட மரங்களும், மாறி மாறி கண்ணில் தோன்றின.

“இந்த மரங்களெல்லாம் சாதாரண மரங்களில்ல. இரத்தம் பாய்ச்சி வளர்க்கப்பட்ட மரங்கள். சிக்குறு சண்டையில் ஒவ்வொரு மாவீரனின்ர சாதனைகளையும் சாவுகளையும், நேரில பார்த்தமரங்கள். போராளிகளைக்காத்த மரங்கள். அந்த மிடுக்கோடு நிமிர்ந்து நிக்குதுகள்.

மண் அரண்களையும், இடிந்த காவலரண்களையும்,பார்த்த போது அவளுக்கு அவள் தம்பியின் ஞாபகம் வந்தது. அவள் தம்பி புளியங்குளச்சண்டையில் வீரச்சாவடைந்ததாய் அம்மா கடிதம் அனுப்பியிருந்தார்.

புல் விளைந்திருந்த நெல் வயல்களைப்பார்த்தபோது, தென் பகுதியில் பச்சைப்பசேலென காட்சியளித்த வயல்வெளிகள் அவள் நினைவுக்கு வந்தன. அந்த வயல்கள் மூன்று போகங்களும் விதைக்கப்படுகின்றன. ஆனால் இந்த வயல்கள் பலவருடங்களாய் விதைக்கப்படாதிருக்கவேணும்.

“நெல் விதைக்கும் எங்கள் வயல்களில் கண்ணிவெடி விதைத்தவர்களே! ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? மனிதர்களின் அவலங்களைக் கண்டு சுகபோகம் துறந்த சித்தார்த்தனை வழிபடும் நீங்கள் உங்கள் இன் பத்திற்காய் எங்கள் வாழ்வை அழிக்கிறீர்கள். பௌத்தர்கள் எல்லாஉயிர்களையும் தம் உயிர்போல் கருதி கருணையுடன் நடந்து கொள்வார்கள். என்று படித்திருக்கின்றேன். ஆனால் நீங்கள் முற்றிலும் மாறுபட்டவராய் இருக்கின்றீர்கள். எங்களையும் வாழவிடுங்கள். இல்லாவிட்டால் நீங்களும் வாழ மாட்டீர்கள்.

மாடிக்கட்டடங்களுடன் நிமிர்ந்து நின்ற பாடசாலை தலை கீழாய்க் கிடந்தது. மாணவர்கள் மரங்களின் கீழ்படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மேசை கதிரைகளைப் பார்த்தாள். இராணுவத்தினரின் எறிகணைப்பெட்டிகளும் வெற்றுக்கோதுகளும் கதிரை மேசையாய் பயன்பட்டுக்கொண்டிருந்தன.

“சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவையைப் போல் எங்கடபிள்ளையள் தங்களை அளிக்கப்பயன்படுத்தப்பட்ட பொருட்களையே தங்களுக்கு உபயோகமானதாக மாற்றிக்கொண்டு உயர்ந்து நிற்கிறார்கள்.

அந்தப் பிஞ்சு முகங்களில் நம்பிக்கை ஒளிவீசிக் கொண்டிருந்தது. அவலத்தின் வரிசைப்படுத்தல்களைக்கண்டு சுகபோகம் துறந்தவர்கள் இருக்கிறார்கள். அவலத்தை தந்தவர்களுக்கே அதை திருப்பிக்கொடுப்பார்கள் என்று அவர்கள் கூறுவதுபோல இருந்தது.

அவர்களின் வாகனம் ஊர்நோக்கி விரைந்துகொண்டிருந்தது. அவள் மனம் அதற்கு முன்பு ஊர் போய்ச்சேர்ந்துவிட்டது.



# காத்திருப்பு

அவலங்கள் எமக்கு
அண்டிய சொந்தமில்லைத்தான்
என்று ஆறிவிடும் என நினைக்கும்
ஆறாக் காயங்களிலெல்லாம்
மீண்டும் மிருகத்தனங் கொண்டு
இனவெறி எனும் குத்தீட்டியால்
இரக்கமின்றிப் பாச்சும் போது
வெந்தபுண் மீண்டும்
வேதனையைத் தந்திடுமோ?என்று
நொந்து போனவர் நாம்
வந்து போகும்
சமாதானக் காற்றைக் கேட்டால்,
வாய் திறந்து அவர்கள்
“வாழுங்கள் தமிழீழத் தாய்நாட்டில்''
என்று வாழ்த்துரைக்கும் வரை
காத்திருங்கள் என்கிறது.
ஆனால்....
காத்திருந்து வேர்க்கிறது நமக்கு
இருந்தும் ஒத்தி எடுத்துக் கொள்கிறோம்
“உங்களுக்கும் மண்ணில்
உரிமைகள் உண்டென்று''
அவர்கள் ஒத்துக் கொள்ளும் வரை...

மா. இளந்தென்றல்



# நினைவுகள்

அகதியான என் வாழ்வின்
உறக்கமில்லா நீண்ட....
இரவுகளில்.... நான்
குடியிருந்த குடிசை
பசிய எங்கள் வயல்வெளிகள்
செம்மண் புழுதி படர்ந்த
தெருக்கள்...
வேலியோரத்துப் புளியமரம்
விளையாடி மகிழ்ந்த முற்றம்
ஆசையாய் நட்ட பூமரங்கள்....
எல்லாம் நினைவுகளில்
நிழலாடும்

அழிக்க முடியாத கிராமத்தின் நினைவுகள்
உயிருக்குள் ஊடுருவி
உணர்வைத் தட்டும்.

இயற்கை வனப்பிழந்து
போரின் வடுச்சுமந்து நிற்கும்
என்னினிய கிராமம்- இன்று
படையின் பாதுகாப்பு வலயமாகும்
பொலிவிழந்து கிடக்கிறது
புரிந்துணர்வு என்று கூறி
கையொப்பம் இட்டபின்னும்
நான் நேசிக்கும்
கிராமத்தின் வாசல்கள் இன்னும்
திறக்கப்படவில்லை.

ஆளுக்கொரு திக்காக
உயிரிருப்பைக் காக்க
ஓடிய உறவுகளை மீண்டும் என்
சொந்தஊரில்காண்பேன்
என்ற கனவுகளைச் சுமந்து
அவ்வினிய பொழுதுக்காய்
காத்திருக்கின்றேன்.

தி.கலைவாணி

## குட்டிக்கதை



# மண் பற்று

சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு,அன்றைய தினசரி இதழை புரட்டிக் கொண்டிருந்த மகேஸ்வரி அக்கா ஏதோ நினைவுக்கு வந்தவளாய் பத்திரிகையை பக்கத்தில் இருந்த புட்டுவத்தில் வைத்துவிட்டு நிமிர்ந்து அமர்ந்து மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டாள்.

கூனிக்குறுகிக்கொண்டு வந்த முருகேசு அவளது காலடியில் வந்து அமர்ந்து கொண்டே அவளை நிமிர்ந்து பார்த்தான்.

போர் தொடங்கிய காலத்திலேயே இந்த மண்ணிலிருந்து கனடாவுக்குப்போய் விட்ட மகேஸ்வரி பல ஆண்டுகள் கழித்து இப்போது தான் தன் பிறந்த பூமிக்கு வந்திருக்கிறாள். இராணுவத்தால் அழிக்கப்பட்ட பரவிப்பாஞ்சான் பிரதேசம் பல உயிர்களை பலிகொடுத்து மீட்கப்பட்டுள்ளதை அவள் அறிந்திருந்தாள்.

அமைதிச்சூழலிலாவது தனது நிலத்தையும் வீடுகளையும் விற்றுப்பணமாக்கி விடுவதில் அவளது கவனம் திரும்பியிருந்தது.

கனடாவில் மகேசக்கா இருந்த காலத்தில் அவளுக்குச் சொந்தமான வீடுகளையும் நிலங்களையும் பராமரிப்பதில் பொறுப்பாக இருந்து வந்தவன் முருகேசுதான். வருகின்ற வருமானத்தையெல்லாம் ஒன்று சேர்த்து கொழும்பில் இருக்கும் மகேஸ் அக்காவின் சகோதரிக்கு அனுப்பி வந்தான். அவன் அவர்களின் நம்பிக்கைக்குரிய ஊழியன்.

“ முருகேசு நீ பெரியபிழை விட்டிட்டாய்''

“ அம்மா''

முருகேசு பேந்தப் பேந்த விழித்தான். அவள் என்ன குறைசொல்லப்போகிறாளோ என்ற அச்சத்தில் அவன் நெஞ்சம் படபடத்தது. அவன் தலைசாய்த்து விழிகள் நிலத்தில் பதிந்தது.

“எல்லாம் நடந்து முடிஞ்சு போச்சுது. உனக்குத்தான் தெரியும் என்ர கஸ்டத்தை. நான் கனடாவுக்குப் போறதுக்கிடையிலை வீடுகளுக்கு நட்டஈடு பதிய வேணும். எல்லா நிலத்தையும் வித்துக்காசை வாங்கிக்கொண்டு போக வேணும். என்ன புரியுதே?''

முருகேசு தலையை ஆட்டிக்கொண்டிருந்தான்.

“நான் பிள்ளையளையும் விட்டுட்டு இஞ்சை ஓடி வந்தது ஊர் பாக்கிறதுக்கில்லை. கெதியா அலுவலுகள் முடியவேணும் கண்டியோ.''

குத்தகைக்காசு ஏதும் மிச்சமிருந்தால் அதையும் கணக்குப்பார் “ஓம் அம்மா” “நானோ என்ர குடுப்பமோ இனி இந்தக் காட் டுக்கை இருக்கிறதுக்கு வரப்போறதில்லை. உனக்கும் காணிதேவை எண்டால் ஒரு விலையைப் போட்டு எடு''

முருகேசு தலையைச் சொறிந்து கொண்டான்.

“அம்மா அந்தவாய்க்கால் காணித் துண்டில் மேட்டுப் பக்கத்திலை இடம்பெயர்ந்த குடும்பம் ஒண்டு இருக்குது. பாவம் பிள்ளை குட்டிகாரர்.''

மகேஸ்வரி அக்காவின் மூக்கு நுனி துடித்தது.

“என்ன சொல்லுறாய்.? ஏன் இருக்கவிட்டனி. இப்பவே போய் எழுப்பிவிட்டிடு.''

“சொந்த வீட்டை இழந்து இடத்துக்கிடம் அலைஞ்சு திரியுதுகள் ஆ... அது தான் நாங்களும் சொந்த இடத்தை விட்டுத்தானே போனனாங்கள். அதுக்காக ஆற்றையாலும் காணியுக்கை இருக்க ஏலுமே?''

முருகேசு எதுவும் பேசவில்லை. மௌனமாக இருந்தான். அவன் விரல்கள் மட்டும் நிலத்தில் படம் வரைந்து கொண்டிருந்தது.

“உவளவு காணியையும் வைச்சுக் கொண்டு கணக்குப் பார்க்கிறா. அதுகள் இந்த மண்ணுக்காக இரண்டு பிள்ளையளையும் இரை குடுத்திட்டு அழுது அழுது அலையுதுகள் உதை உவவுக்குச்சொன்னால் பிடிக்குமோ? ஏன் உவளவு காணியையும் பாதுகாத்த எனக்கு?''

“என்ன முருகேசு கனதியாய் யோசிக்கிறாய். அதுகளட்டைப்போய்ச்சொல்லு காணி விலைப்படப்போகுதாம். வீட்டைப் பிடுங்கிக் கொண்டு வெளியிலை போகட்டாமெண்டு. இல்லாட்டில் பிசகுதான். போ...''

மகேஸ்வரி அக்கா எழுந்து வெளியே போனாள்.

முருகேசு நீண்ட பெருமூச்சொன்றை உதிர விட்டு சால்வையை உதறித்தோளில் போட்டுக் கொண்டு வெளியேபோனான்.

அவனுக்கு இப்போதுதான் ஆத்திரம் வந்தது.

மிதிபடுறவன் மிதிபட்டுத்தான் வாழ வேணுமோ?

மிதிப்பவன் மிதித்துக்கொண்டுதான் வாழ்வதோ? வினாக்களுக்கு விடைகாணும் வேகத்துடன் கால்போன திசையில் நடந்து கொண்டிருந்தான்.

முருகுபாரிமகன்

## காசிஆனந்தன் கதை



# நிமிர்வு

நகைக்கடைக் கண்ணாடிப்பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக் கல்லைப்பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது.

‘எனக்கு ஏன் மதிப்பில்லை? நானும் ஒரு கல்தானே...' என்று ஓலமிட்டது.

தெருவோரத்தில் கிடந்த கடப்பாறை கூறியது:-

‘ஏ குறுணி! காலம் முழுதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக் கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய். ஆனால் இரத்தினக்கல் அப்படியா? நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும் வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது.'

அப்படியென்றால்...? என்று இழுத்தது குறுணிக்கல்.

கடப்பாறை சொன்னது:- ‘நிறைவாகும் வரை மறைவாக இரு.'



# இளையநாதம்



## குட்டிக்கதை

# சிறு துரும்பும்...

அது ஒரு சிறியகாடு. அந்தக் காட்டில் ஒரு மான் வசித்து வந்தது. அது அதிக கர்வம் கொண்டது. ஒரு நாள் மான் காட்டில் இரை தேடிச்சென்ற போது துளசிச்செடி ஒன்று அதன் கண்ணில்பட்டது. நன்கு வளர்ச்சியடைந்து, அடர்த்தியாக இருந்த அந்தத்துளசிச் செடியைச்சாப் பிட எண்ணி அதனருகில் வந்தது மான்.

தன்னைத்தின்பதற் குத் தான் மான் வருகின்றது என்பதைக்கண்டதுளசிச்செடி, "மான் நண்பரே! என்னை நீங்கள் சாப்பிட்டுவிடாதீர்கள். நான் இப்போது தான் நன்கு வளர்ச்சியடைந்துள்ளேன். இனி நான் பூவாகப் பூத்து காயாகக்காய்த்து மனிதர்களுக்கு மருந்தாக உதவவேண்டும். ஏதோ ஒருவகையில் உங்களுக்கும் நான் உதவுவேன். அதனால் தயவுசெய்து என்னை விட்டுவிடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டது. அதைக்கேட்டு மான் ஏளனமாகச் சிரித்துவிட்டு,

"உன்னைப்பார்க்கப்பாவமாய் இருக்கிறது. இருந்த இடத்தை விட்டு ஓரடி கூட உன்னால் நகர முடியாது. எனக்கு எப்படி உதவுவாய்? நன்றாகச் செழித்து வளர்ந்திருக்கும் நீ என் பசியைப் போக்க மட்டும் தான் எனக்கு உதவ முடியும்." என்று சிரித்தபடி அலட்சியமாகச் சொன்னதுமான்.

அதைக்கேட்ட துளசி மிகவும் பணிவுடன் "என்னைச்சாப்பிடாமல் விட்டுவிட்டால் உங்களை நான் ஒரு போதும்மறவேன். என்ன விதத்திலும் உங்களுக்கு உதவுவேன்!" என்று சொன்னது. அதைக் கேட்ட மான் மீண்டும் கேலிச்சிரிப்புச் சிரித்தது.

அப்போது யாரோ நடந்து வருவது போல் சத்தம் கேட்டது. சத்தம் வந்ததிக்கில் வேடன் ஒருவன் அம்பு - வில்லுடன் வந்து கொண்டிருந்தான். வேடனைக் கண்டு விட்டு ஓடினால் நிச்சயம் அவன் அம்பெய்து தன்னைக் கொன்றுவிடுவான் என்று பயந்து நடுங்கியது மான்.

உடனே துளசிச்செடி மானிடம் "நண்பரே! அடர்ந்து வளர்ந்திருக்கும் என் இலைகளுக்குள் பதுங்கிக் கொள்ளும். அச்சம் வேண்டாம்!" என்றது. துளசி சொல்வது சரியெனப்படவே அதன் அடர்ந்த கிளைகளுக்குள் ஒளிந்து கொண்டது மான். துளசிச் செடிகளால் மூடியிருந்த மான் வேடனின் கண்



களுக்குத் தெரியவில்லை. அதை அறியாமல் அவன் தன் வளியே சென்றான். வேடன் சென்ற சிறிது நேரத்தின் பின் வெளியே வந்த மான் துளசிச் செடியை நன்றியுடன் பார்த்தது.

நாம் எதையும் அலட்சியப் படுத்தக் கூடாது. 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பார்கள். அதுபோல் எமக்கு எந்தவொரு பொருளும் ஏதாவது விதத்தில் பயனளிக்கும்.

**த.தவராணி.**



## வாரம் ஒரு குறள்

மனிதர்களாக பிறந்த நாம் நற்குணங்களையுடையவர்களாக நற் செயல்களைச் செய்பவர்களாகத்தான் எமது வாழ்க்கை எனும் பாதையில் நடந்து செல்ல வேண்டும்.

மாறாக பிறருக்குஉதவுதல் என்பதை மறந்தவர்களாக, சுயநலம் உள்ளவர்களாக வாழும்வாழ்க்கை என்பது பயனற்றது.

அது மட்டுமன்றி நாம் உயர் குலத்தில் பிறந்தவர்கள், என்பதனால் மட்டும் அடுத்தவர்கள் விரும்பாத அருவருக்கத்தக்க செயல்களை செய்யலாகாது. இது "ஒருகுடம் பாலுக்கு துளி விஷம்" என்பதுபோல உயர் குலம் எனும் மலை போன்ற உயரத்திலுள்ள பெருமையை சிறிய விரும்பத்தகாத செயலினால் மடு போல் தலைகுப்புற வீழ்த்தி விடும். இதனைத் தான் மானம் என்று வள்ளுவப் பெருந்தகையாளர் கூறுகின்றார்.

**"குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின்"**

## குறுக்கெழுத்துப் போட்டி 35

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | | | 07 |
| 08 | | | 11 | | | |
| | | | 18 | | 20 | |
| | | | | | | |
| | | | | | | |
| | 37 | | | | | |
| | 44 | | | 47 | | |

**இடமிருந்து வலம்**

01. குறும்பு.
08. மங்கலப்பொருட்களில் ஒன்று குழம்பி உள்ளது.
18. காற்றில் பறக்கவிடப்படுவது குழம்பி உள்ளது.
37. விருட்சம் குழம்பி உள்ளது.
44. இல்லைஎன்பதற்கு எதிரானவை தலைகீழாகஉள்ளது.
47. பிரணவமந்திரம்

**மேலிருந்து கீழ்**

01. அரண்மனையில் பெண்கள் இருக்கும் இடம்.
02. மாலைகட்டப் பயன்படும் பூ
03. தண்டனை குழம்பிஉள்ளது.
07. முனிவர்கள் கையில்வைத்திருப்பது தலைகீழாகஉள்ளது.
11. உடன்பாடு.
20. தாமரை

### குறுக்கெழுத்துப்போட்டி இல.33 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. திருக்குறள்.
09. ஆலயம்.
15. திங்கள்.
22. அல்லி.
29. மதி.
31. பகல்.

**மேலிருந்து கீழ்**

01. தினக்குரல்.
02. வருடம்.
04. அங்குலம்.
09. ஆதி.
27. பசு.
29. மனை.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.33 இன் பரிசுக்குரியவர்**

**ந. சுதர்சன்,**
**51,கடல்முக வீதி**
**திருகோணமலை**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.33இன், பாராட்டுக்குரியவர்கள்.**

தே.சத்ஜப்பிரியா,
மு/வட்டுவாகல்,
அ.த.க.பாடசாலை.

செ.சுதா,
இல.40,ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

ந.சுகிர்தா,
மு/கேப்பாப்புலவு
அ.த.க.பாடசாலை,


பா. பபி,
கல்மடுநகர்.
கிளிநொச்சி.

சி.சிவகுமார்,
பசார் வீதி,
வவுனியா.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி,இல.35
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## நகைச்சுவை



**கந்தன்:-** ஒரு மாதமாய் ஒரு நாளைக்கு ஒரு கிளாஸ் பாலும் ஒரு பழமும் தான் சாப்பிட்ட தாய்ச்சொல்லுறீங்கள்...பின்ன எப்படி இவ்வளவு குண்டாய் இருக்கிறீங்கள்?
**சோமு:-** நான் சாப்பிட்டது ஒரு முழுப் பலாப்பழம் தம்பி.

**பூ.நிறஞ்சன்**

## சிந்திக்க சில வரிகள்

01) உலகத்தில் எதை வேண்டுமானாலும் இழந்திடலாம் ஆனால் - எக்காரணம் கொண்டும் தாய் அன்பை மட்டும் ஒரு போதும் இழந்திடக்கூடாது.

02) உன்னை நீயே புகழ்வதை விட ஊர் உலகம் உன்னைப் புகழ வேண்டும்.

03) தங்கத் தட்டில் நீ சாப்பிட்டாலும் பணக்கட்டின் மேல் நீ படுத்து உறங்கினாலும் ஒரு நேரப் பசியைப் போக்கியவனை ஒரு போதும் நீ மறந்து விடக்கூடாது.

**எஸ்.பி. லக்குணா**

## தைவண்ணம்



**சு. கௌரீஷன்,**



# மரம் நாட்டுவோம்

உலக வாழ்விற்கு உறுதுணையானவை மரங்கள். இவை மனிதரின் உற்ற நண்பர்கள். வாழ்வின் உயிர்மூச்சே மரங்கள் அல்லவா?


வாழ வழி தேடிக் காடுகள் அழித்துக் களனிகள் ஆக்குவோரே கேளுங்கள்! அழிக்கும் மரங்களுக்கு இணையாக மரம் நாட்டி வளர்க்க வேண்டாமா? ஆணிவேர் தொடக்கம் நுனித் துளிர் வரை பயன் கருதாது உதவுவன மரங்கள் என்பதனை மறக்கலாமா? விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் வாழிடமாகவும், மாந்தர்க்குப் பசுமை நிறைந்த நிழற்கூரையாகவும் உதவிடும் மரங்களை அழிக்காதீர்கள்.

மரமொன்றின் பயன்பாடு சொல்லுதற்கு அரியது. தச்சனின் கையிலே கலையுருவாகும். சமையலறையிலே விறகாக உதவும். வைத்தியருக்கு மருந்துக்குப் பயன்படும், விவசாயிக்கு மண்ணரிப்புக் காவலனாகும், மீனவனுக்குப் படகாகும். என்ன! இதன் அருமை. சகோதர சகோதரிகளே!

பிறந்தநாள் நிகழ்வுகள், தீபாவளி, தைப்பொங்கல், வருடப் பிறப்பு, நத்தார்ப் பண்டிகை முதலான நல்ல நாள்களிலே பயன் தரும் மரங்களை நாட்டுவோம். நாமும் எமது சந்ததியும் வளம் பெறுவோம். நாடு செழித்து நலம் பெறட்டும். நற்பணியாக மரங்களை நாட்டி வளர்ப்போம்.

**கு.மணிமேகலை**

## இதயத் துடிப்பு



**ஒருசாதாரண மனிதனுக்கு இதயம் 72 அல்லது 73 தடவைகள் துடிக்கும். ஆனால் விண்வெளிக்கு பயணம் செய்த நீல் ஆம்ஸ்ரோங்குக்கு ஒரு நிமிடத்திற்கு (156) தடவைகள் துடித்ததாம்.**

யே.அமலதாஸ்
தரம் -7A,
C.C.T.M.S. வவுனியா.

# பெற்றெடுத்த தாய்



*பத்து மாதம் உன் வயிற்றில்*
*பத்திரமாய் எனைச் சுமந்து - நீ*
*பட்ட பாடு அத்தனைக்கும்*
*பலன் கிட்டும் வரையில் நான்...*
*ஒளி மிளிரும் தீபம் போல்*
*பார்போற்ற வாழ்ந்திடுவேன்.*
*பாராட்டிச் சீராட்டி...*
*பார்போற்ற வளர்ந்து வரும்*
*பாசமுள்ள அன்னையே - உன்*
*பாதங்களைத் தொழுகிறேன்.*

யோ.நிஷாந்தகுமார்,
கண்ணகிநகர்அ.த.க. பாடசாலை

காதலைப்போலவே இலக்கியத்திலும் பிறர் தேர்ந்தெடுப்பதைப்பார்த்து நாம் வியப்படைகின்றோம். -ஆன்ட்றிமாவ்தாஸ்

## ஒரு விமர்சனக் கலந்துரையாடல் —— தொடர்ச்சி

# பனி மலையின் கீழ்

# உப்பில் உறைந்த உதிரங்கள்

திரு. சண்முகராசா அவர்கள் கூறுகையில்; நான் இதை ஒரு ஆவணப்படமாகத் தான் பார்க்கிறேன். நடந்த நிகழ்வுகளை, நடக்கின்ற நிகழ்வுகளை அப்படியே படம் பிடித்த ஓர் ஆவணப்படம.

சேதி கொண்டு போனதென்றல் திரும்பிவரக்காணோம். கொஞ்சம் கொஞ்சமாய் வெப்பம் பரவஆரம்பித்தது. எல்லோர்முகங்களிலும் ஆங்காங்கே சில வியர்வைத்துளிகள். தென்றலைத் தேடியது என்கண்கள்.

ஒலிவாங்கி திரு.ஏ.ஜி. யோகராஜா கைகளில் ஏறியது.

இங்கு நான் முதலில் நடிப்பைப் பற்றிக்கூறவேண்டும். இப்படத்தின் இயக்குநர் குயிலினி. ஒரு போராளிக்கலைஞர் வகையிலும் சரி நடிப்பென்று பார்க்கையிலும் சரி, நல்ல போராளிக் கலைஞராக இருக்கலாம், ஆனால் படைப்பென்று வரும்போது. கலைத்துவப் போராளியாக மாறவேண்டும். இது ஒரு முக்கியமான விசயம். குயிலினி படம்எடுக்கும் இடத்தில் ஒரு கலைஞராக இருக்கவேண்டும். போராட்டக் களத்திலிருந்து உணர்வுகளை பெறுவது ஒரு விசயம். அதேபோல் கலைஞராக மாறி கலைத்துவத்தைப் பெறுவது இன்னொருவிசயம். அப்போதுதான் இரண்டு உணர்வுகளும் ஒன்று



சேர்வதற்குரிய வாய்ப்பு இருக்கும்.இப்படத்தில் நடிகர்கள்போராளிக்கலைஞர்கள்என்பதைவிட போராளியாகத்தான்இங்கு இருக்கின்றார்கள். அவர்கள் கலைத்துவப் போராளியாக மாறவில்லை. அல்லது கலைஞர்களாகக் கூட தென்படவில்லை என்பது குறையாகத்தெரிகிறது.

இரண்டாவது திரைப்படம் என்பது ஒரு பதிவாக மட்டும் இருக்கக்கூடாது. அது அடுத்த பரிமாணத்திற்கு பார்வையாளனை இட்டுச்செல்ல வேண்டும். தனித்து பதிவுகளாக இருக்கும் போதுதான் அது ஓர் ஆவணப் படமாக மாறுகிறது. மற்றும் இந்தப்படத்தின் ஒருகுறை அரசபடையின் பலம் சரியாகக் காட்டப்படவில்லை. இப்படி இவர்கள் தாக்கப் போகும் அளவிற்கு அங்கு அரசு படைபலமாக இருப்பதுபோல் தெரியவில்லை. அது காட்டப்



பட வேண்டும். அப்போது தான் அதற்குரிய முரணை எமக்குள் சுவீகரித்துக் கொண்டு போராளிகள் அடிக்கவேண்டும் என்ற உணர்வை எங்களுக்குள் கொண்டுவரலாம் என முடித்தார்.

இப்படத்தின் மொழிப்பிரச்சினை பற்றிய கேள்வியை எழுப்பினார் திரு. கிருஸ்ணா அம்பலவாணர் அவர்கள். போராளிகள் பேசுகின்ற குறியீட்டு மொழிகளுக்கு அடிக்குறிப்பு போட வேண்டும் என்ற கருத்தைத்தெரிவித்தார்.

ஒலிவாங்கி மீண்டும் திரு.புண்ணியமூர்த்தியின் கைகளுக்குத்தாவியது.

இப் படத்தைப்பொறுத்தவரை ஒரு பெரியகுறைபாடு அழகியல் அம்சம் இன்றிய அதன் வறண்டுபோனபக்கம் தான். அது இதை ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆவணமாகக்காட்டுகிறது. ஆனால் நிறைய உழைப்பு செலுத்தப் பட்டிருக்கிறது. தமிழீழவரலாற்றில் தேவையான ஒன்றாக இருக்கலாம். ஆனால் கலையென்று வரும்போது அது அதன் கலை அம்சத்தை இழந்துவிட்டால் நீண்டகாலம் வாழாமல் ஒரு பெட்டியில் முடங்கும் ஆவணமாகப் போய்விடும். எனவேதான் அழகியல் அம்சம் குறைவாக காணப்படுவது பெரியகுறை என நான் நினைக்கிறேன். அடுத்து பிரமாண்டம் தமிழீழத்தில் இருந்து வந்த முந்தையபடங்களில் இருந்தஎளிமையும், உயிரோட்டமும் இங்கு இந்த பிரமாண்டத்தில் இல்லாமல் போய்விடுகிறது. ஆங்கிலப்படங்களுக்கு நிகராக எடுக்கப்பட்ட பிரமாண்டம் தெரிகிறதுதான். ஆனால் முந்தயபடங்களின் எளிமையும், அழகியலும் ஏற்படுத்தும் தாக்கம் இப்படத்தில் ஏற்படவில்லை.

மற்றும் மக்கள் பேசும் வட்டார மொழி எமக்கு புரியவில்லை என்றால் அந்த மொழியை நோக்கி நாம் முன்னேறவேண்டும். அதற்காக இயக்குநரை கேட்கமுடியாது. எனக்குப் புரியவில்லை அடிக்குறிப்புப்போடு என்று. எப்படி இயக்குநர் முன்னேறிக் கொண்டு போகிறாரோ, அதேபோல் பார்வையாளனும் அதை நோக்கி முன்னேறவேண்டும். தமிழீழப்படங்களின் பெரிய வெற்றி பக்கம் பக்கமாக வசனம் எழுதாமல் காட்சிப்படுத்த முயற்சிப்பது. அது இந்தியச் சினிமாக்களிலிருந்து முறித்துக்காட்டுகின்ற விசயம் அது இன்னும் தொடர்கிறது. இப்படத்திலும் தொடர்கிறது - முடித்தார்.

காட்சிகளுக்குள் இறுக்கம் தெரிகிறது. பன்முகப்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு போராளிகளினதும் சின்னச்சின்ன உணர்வுகள் காட்டப்படவில்லை. இப்படம் ஒரு முழுநீளப் படம் என்பதைவிட, ஒரு திரைப்படத்தில் 10-15 நிமிடக்காட்சியாக வரலாம். இது கலைச்செல்வன்.

திரு.அல்பேட் அவர்கள் கூறும்போது தமிழீழத் திரைப்படங்களை முழுமையாகப் பார்த்தவன் என்ற முறையில் இத்திரைப் படத்தைப் பார்க்கும்போது இதில் நிறையகுறைபாடுகள் இருக்கின்றன. அதை எப்படிச் சொல்லலாமெனில் உணர்வுத்தன்மை இல்லாமல் உள்ளது. பழையபடங்களிலுள்ள அழுத்தமான உணர்வுகள் இதில் இல்லாமல் உள்ளது. நடிப்புத்தன்மையும் குறைவாகவுள்ளது.

திரைப்படம் என்பது மக்களைச் சென்றடையும் ஒருசாதனம். அதுவும் உண்மைச்சம பவங்களைமையமாக வைத்து எடுக்கும்போது அவை மக்களைச்சென்றடைய வேண்டும். அப்போதுதான் மக்களை தட்டியெழுப்பமுடியும். மக்களுக்கு எம்மண்ணின் துன்பங்களையும் துயரங்களையும் சொல்லக்கூடியதாக இருக்கும்.இதில் குயிலினி அவர்கள் கவனம் செலுத்துவார் எனநினைக்கிறேன். அப்போதுதான் நாம் வளர்ச்சிப்போக்கில் செல்லலாம். முடித்தார்.

திரு.குலம் அவர்கள் கருத்துத்தெரிவிக்கையில்;

ஏற்கனவே மற்றவர்கள் கூறியது போல் இப்படத்தில் பல குறைபாடுகள் தெரிகின்றன.இனிவரும்காலங்களில் இக்குறைபாடுகள் நீங்கி நல்ல படங்களை குயிலினி தரவேண்டும் என வாழ்த்தி முடிக்கிறேன் என்றார்.

தமிழீழக்கவிஞர் நாவண்ணன் அவர்கள் பேசும்போது போராளிகள்,கலைத்துவப் போராளிகளாக மாறவேண்டும் என ஒருவர் குறிப்பிட்டார். அதில் எனக்கு உடன்பாடில்லை. அது எல்லாக்காலமும் சரிவராது. குயிலினி இதைப் பின்பற்றக்கூடாது. எனக்கேட்டுக்கொண்டார்.

**சுவிஸிலிருந்து**
**சுமி சுரேஸ்**

அடுத்து மதி அவர்கள்

தமிழீழத்திலிருந்து இங்கு வாழும் எமது அடுத்த சந்ததிக்காக படைப்புக்கள் வரவேண்டும். தமிழீழம்பற்றி எமது குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டும் படைப்புக்கள் வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக குயிலினியிடம் இவ்விவாதம் பற்றிக்கருத்துக் கூறுமாறு கேட்கப்பட்டது. அவரது திரைப்படம் பற்றி நடந்த காரசாரக் கருத்துக்கள் பற்றி என்ன சொல்லப் போகிறார் ஒவ்வொருவரது கண்களும் கேள்விக்குறியோடு அவரை நோக்கின.நெற்றியில் அரும்பியவியர்வைத் துளிகளை துடைத்தவாறு தொடர்ந்தார்.

இப்படத்தை நான் தமிழீழ மக்களுக்காக எடுக்கவில்லை. அல்லது புலம் பெயர் மக்களுக்காகவும் எடுக்கவில்லை .ஒரு பெண் போராளியின் அனுபவம் கிளாலியில் நடந்த சம்பவம். இது இரண்டின் பின்னணிதான் இப் படம். இப்படத்தை எடுக்கும்போது தெரிந்தும் சிலதவறுகள் விட்டோம். ஏனெனில் சர்ந்தர்ப்ப சூழ்நிலைகள் நாம் நினைத்தது போல் செய்ய ஒத்துவரவில்லை. அவசரமாக குறுகியகாலத்துக்குள் எடுக்கவேண்டும் என்பதால் தெரிந்தும் சில தவறுகள்விட்டோம்.

இப்படத்தின் விமர்சனத்தை நான் இங்கு பார்க்கும் போது, நான் எதிர்பார்க்காத விமர்சனமாக இருந்தது. நான் திருந்தக்கூடிய அளவிற்கு நிறைய விசயங்களை கூறியிருந்தீர்கள். எந்தெந்தப் பிழைகளை நான் எதிர்பார்த்தேனோ அவற்றை விடுத்து அப்பாற்பட்ட விசயங்களை விமர்சித்துள்ளீர்கள். யார் சொன்னது. பற்றியும் நான் குறைநினைக்கவில்லை. விமர்சனம் தான் எனது வளர்ச்சி. தென்னிந்திய திரைப்படங்களோடு ஒப்பிடும் அளவிற்கு நாம் வளரவில்லை. ஆனால் வளருவோம். உங்கள் ஒத்துழைப்பையும், விமர்சனங்களையும் நீங்கள் தொடர்ந்து தருவீர்களானால். நீங்கள் எதிர் பார்த்த படத்தை நாம் தருவோம். முடித்துக் கொண்டார்.

இவரிடமிருந்து நீண்ட ஒரு சொல்லாடலை எதிர்பார்த்த எங்களுக்கு ஓரிரு நிமிடத்தில் முடிந்தது கஸ்ரமாகவிருந்தது.

சேரலாதன் அவர்களுடைய பேச்சில்.

எங்களிடம் நல்ல கதைகள் இருக்கின்றன, நடிகர்கள் இருக்கிறார்கள். ஆனால் எங்களுக்கு இயக்குநர்கள் தேவை. இப்போது தமிழீழத்தில் கேசவராஜனும், பெண் இயக்குநர்களில் குயிலினியும் தான் இருக்கிறார்கள். நீங்கள் திறமையானவர்கள் வந்தால் நாம் உங்களுக்கு சகல உதவிகளையும் செய்துதருவோம். கருத்து வேறுபாடுகள் உள்ளவர்கள் எனினும் வாருங்கள். செயல்படுவோம். உங்கள் பெயர்விடயங்கள் ரகசிமாக வைக்க வேண்டுமெனில் புனைப்பெயரில் எடுங்கள். சகல விசயங்களும் ரகசியமாக வைத்திருப்போம். என இருந்தது.



கலந்துரையாடல் முடிந்தது. கலைந்தோம். ஒவ்வொருவராக கூடிநின்று கதைத்தோம். நான் குயிலினியிடம் கேட்டேன். இந்தப் படத்தின் இயக்குநர் குயிலினியாக இல்லாமல், சாதாரண குயிலினியாக இந்த கலந்துரையாடல் எப்படி இருந்தது.

சிறிது யோசித்துவிட்டு தொடர்ந்தார் உண்மையைச் சொன்னால் கொஞ்சம் கடுமையாக இருந்தது. இதை நான் எதிர்பாக்கவில்லை. ஆனாலும் எனக்குத் தேவையானதை மட்டும் எடுத்துக்கொண்டேன். தமிழீழப் பெண்கள் பற்றிய ஒருவரது கூற்று மட்டும் எனக்கு பிடிக்கவில்லை. கூறியபடியே அடுத்தவருடன் கதைப்பதற்கு சென்றார். அந்த மெல்லிய சிறிய உருவத்திற்குள் புதைந்து கிடந்த அந்தக் கண்களுக்குள் இன்னும் சாதிக்க வேண்டும் என்ற தாகம் தெரிந்தது.

வெளியேவந்தோம். மீண்டும் தென்றல் முகத்தைத்தீண்டியது. என்னோடு வந்த நண்பர் ஒருவர் தனது கண்ணாடியைக் கழற்றி விட்டு மலையின் உச்சியைப்பார்த்துக கேட்டார் உனக்கு அந்தமலையின் உச்சியில் எரிகின்ற வெளிச்சம் தெரிகிறதா? உச்சியைப் பார்த்தேன் அந்த அழகான கறுப்புமலையில் எரிகின்ற வெளிச்சம் எனக்கும் தெரிந்தது.




### முன்னுரை மொழிகள்

"கல்யாணி நான்தான்...
ரங்காவும் நான்தான் ஏன் எனது
இந்தக் கதைகளில் வரும் எல்லாப்
பாத்திரங்களுமே நான் தான்...
என்கதைகளில் வரும் எல்லாப்
பாத்திரங்களும் வாழ்க்கையில் நான்
சந்தித்த பிறர் மாதிரியான

**ஜெயகாந்தன்**

யாழ்ப்பாணத்துக் கிராமமான
கரவெட்டிச் சூழலில், அந்தப்
புழுதிமண்ணில் ஓடி விளையாடி,
சுகதுக்கங்களில் திளைத்து, மானிடக்
கெடுபிடிகளில் நசிந்து, நலிந்து,
தலையெடுத்து, இன்று பேனாபிடிக்கும்
கைங்கரியத்திலும் சம்பந்தப்பட்டு
விட்ட ஒருவனால் கிராமியக்
கதாபாத்திரங்களைச் சித்திரிக்காது
விடுவது அவனையே
போலிப்படுத்துவது ஆகாதா,
"ஒரு கிராமத்துப் பையன்
கல்லூரிக்குச் செல்கிறான்" என்ற
கதையில் வரும் சின்னையா
வேறுயாருமல்ல.. என்பிரதிபலிப்பே...

**செ. கதிர்காமநாதன்.**

### சமர்ப்பண மொழிகள்

'1956ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட
தனிச் சிங்களச் சட்டத்திற்கு இந்நூல்
சமர்ப்பணம். அதுவே என்னைத்
தமிழில் எழுதவும் சிந்திக்கவும்

**'மத்து' என்ற நூலுக்கு**
**ஏ.ஜே.கனகரத்னா....**

பிறந்த நாடில்லை
வீடில்லை
பிரதேச வாழ்வில்
முகமில்லை
தமிழ்ச்சாரம் உண்டு,
கவியுண்டு
பாவாரம் ஓதித் தமிழ்
சேவிப்பில் முகம் பெற்றே
வாழ்ந்திடத் துடிப்போர்க்கே....
இது படைப்பு.

**'நீலாவணன்'என்ற நூலுக்கு**
**எஸ்.பொன்னுத்துரை....**

### பதில் மொழிகள்...

**கறையானுக்கும் காடையனுக்கும் உள்ள வேறுபாடு?**

கறையான் நூல்களை
அரித்து மகிழும் , காடையன்
நூல்நிலையத்தை எரித்து மகிழ்வான்....

**தமிழன் ஏன் திரைகடல் ஓடியும் திரவியம் சேர்த்துக் கொண்டேயிருக்கிறான்.**

திருடனுக்கு கொடுக்க....
அல்லது மருமகனுக்கு கொடுக்க....

### சிரிப்பு மொழிகள்

செஸ்டர் பீல்ட் என்ற அறிஞரிடம் ஒருவர் கூறினார் 'மனிதனுக்கு மட்டுமே சிரிக்கக் கூடிய சக்தியிருக்கிறது' உடனே அந்த அறிஞர்.

'ஆம்...அத்தோடு சிரிப்புக் கிடமாகவும் நடந்து கொள்ளும் சக்தியும் அவனிடம் தான் உள்ளது என்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றார்.

ஒரு நகைச்சுவை நடிகரைப் பேட்டி கண்ட ஒருவர் கேட்டார்-

'நீங்கள் ஏன் அரசியலில் குதித்து பாராளுமன்றஉறுப்பினர் ஆகக் கூடாது?'

அதற்கு அவர் -

'பாராளுமன்றத்தில் நிரந்தர கோமாளியாக இருப்பதை விட மேடையில் தற்காலிக கோமாளியாக நடிக்கலாம்' என்றார்.

### பழமொழிகள்

யானை படுகுழியில் விழும்போது தவளை கூட பின்னால் இருந்து ஒரு உதை கொடுக்கும்.

தந்தை தனவந்தர் - மைந்தர் தர்மவான் - பேரனோ பிச்சைக்காரன்.

பூனையைப் பார்த்து எலி சிரிக்கிறது என்றால் அது ஓடி ஒளிந்து கொள்ள ஒதுக்கிடம் இருக்கிறது என்றுதான் அர்த்தம்...

—— **பொறுக்கி**

நட்பு காதலை விட சோகமானது. ஏனெனில் அது, காதலை விட அதிகநாட்களுக்கு நீடிக்கிறது. -ஆங்ஸ்கார் வைல்ட்




# பாடசாலை போகவேணும்

ஜப்பானிய் ஆக்கிரமிப்பிலிருந்து சீனா விடுவிக்கப்படுவதற்கு முன்பதாக சியாங்சுண் நதிக்கரையோரமாக அமைந் திருந்த லுங்ஹு", கிராமத்திலே இரும்பன் என்று அழைக்கப்பட்ட சிறுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அப்போது எட்டு வயது. அந்த வயதிலேயே, வசதியான குடும்பங்களின் பிள்ளைகள் பாடசாலைக்கு போகத்தொடங்கிவிடுவார்கள்.

அவனுடைய தந்தையான கூ பெய் சியுங், கிராமத்து பண்ணையார்களிடமும் செல்வந்த விவசாயிகளிடமும் கடுமையாக உழைத்துவந்தார். அவனுடைய பேரனான கூ ரா பெங், மலைகளில் வேட்டை யாடுவதை தொழிலாக கொண்டிருந்தார். இதன் காரணமாக, பல சந்தர்ப்பங்களிலே கடும்குளிரான காலநிலைக்கு எதிராக பல நாட்களுக்கு போராடவேண்டியிருந்தது. அப்படி இருந்தும் அவர்களது குடும்பம் பல நாட்கள் பட்டினியால்வாட நேர்ந்தது. இரும்பன் பாடசாலைபோவதற்கான பணத்துக்கு எங்கே போவது?

நிலைமை இப்படியாக இருந்தும் அந்தப்பையனின் மனதில் பாடசாலைக்குப்போகும் ஆசை தீயாக எரிந்து கொண்டிருந் தது. தன்னைப்பாடசாலைக்கு அனுப்பும் படி தனது பெற்றோரை நச்சரித்துக்கொண்டே இருந்தான். ஒரு நாள் இவனது நச்சரிப்பை தாங்க முடியாமல் அவனது தகப்பனார் ஓங்கி ஒரு அறை கொடுத்தார். அதன் பின்பு தாயாரோடு விறகு சேகரிக்கச் செல்லுதல் வயல்களில் காட்டுக். கீரைகளை பிடுங்குதல் போன்ற தனது வழமையான வேலைகளில் ஈடுபட்டு வந்தான்.

ஒரு நாள் அவனது கிராமத்துப்பாடசாலையை தாண்டிச் செல்லுகின்றவேளை, உள்ளிருந்து பிள்ளைகள் உரத்த குரலில் வாசிக்கும் ஒலியால் ஈர்க்கப்பட்டு அப்படியே நின்று விட்டான். தன்னுடைய சிறிய மெல்லிய கைகளால் தாயின் கைகளை பிடித்து இழுத்து நிறுத்தியவன், ஒட்டுப்போட்ட சட்டை போட்டிருந்த அவளது கையோடு தன் முகத்தை வைத்து அழுத்திக்கொண்டே ஏக்கத்தோடு அந்த ஒலிகளை கேட்டுக் கொண்டிருந்தான். கண்களின் கண்ணீர் நிரம்புவதை தடுக்க அவன் கடுமையாகப்போராடினான். நீண்ட நேரத்துக்கு அவன் எதுவுமே பேசவில்லை.


தன்னுடைய மகனுக்கு பாடசாலை செல்வதற்கு எவ்வளவு ஆசை இருக்கிறது என்று அறிந்திருந்த அவனது தாய், ஆதரவாக அவனை அணைத்துக் கொண்டே துன்பமான பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டாள்.

"பாடசாலைக்கு போகின்ற பிள்ளைகளைப்பார்த்து நீ ஏங்குகிறாய் என்று எனக்குத் தெரியும்" என்று அவனது தலையை வாஞ்சையாகத்தடவிக் கொண்டே அவள் சொன்னாள். "நீ கவலைப்படாதே, எங்கட புள்ளிக்கோழி முட்டைபோடத் தொடங்கிவிட்டதுதானே. நான் முட்டைகளை சேர்த்து வைக்கிறேன். நூறு முட்டைகள் சேர்ந்ததும் நான் அவற்றைவிற்று உன்னை பள்ளிக்கு அனுப்புவேன்" என்று தொடர்ந்து சொன்னாள்.

அதற்குப் பின் தன் புள்ளிக்கோழியைப்பற்றியும் அது போடப்போகும் முட்டைகளையும் தவிர வேறு எதையும் பற்றி அவனால் யோசிக்கவே முடியவில்லை.

பலகணி தட்டில் வைக்கப்பட்டிருந்த ஒரு பெட்டிக்குள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த முட்டைகளை

-ஆங்கிலத்தில் குவான்ஹு"வா-



ஒவ்வொரு நாளும் பலமுறை ஏறி எண்ணிப்பார்த்தான். பகல் வேளைகளிலே தன் அருமைக் கோழிக்கு வெட்டுக்கிளிகளைப் பிடித்துக்கொடுப்பான். மாலையாகியதும் அதனை பத்திரமாக அதன் கூட்டில் விட்டு கதவைப் பூட்டி, கீரி ஏதும் அதைப் பிடிக்காதபடி கதவுக்குப்பாரமாக செங்கற்களை அடுக்கி ஒரு பெரிய கல்லையும் வைத்து விடுவான்.

அது முட்டையிடும் நாட்கள் அவனுக்கு மகிழ்ச்சியான நாட்களாய் இருந்தன. அது முட்டை இடாவிட்டால். முகத்தைச் சுளித்துக்கொண்டு முணுமுணுத்தபடி முழுநாளும் திரிவான். அதனுடைய சிறகுகளைக்கூட தடவிக் கொடுக்கமாட்டான்.

ஒரு நாள் இரவு, இரும்பன் தன் தூக்கத்தில் பலமாகச்சிரித்தான். அவனது தாயார் அவன் ஏன் சிரித்தான் என்று கேட்டாள். அவன் ஏதோ இரகசியம் சொல்லுவதுபோல் அவளது காதருகே வந்து, "நான் இப்பொழுது தான் முட்டைகளை எண்ணினேன். நூறு முட்டைகள் இருக்கின்றன. நாளைக்கு நான் பள்ளிக்குப் போகலாம்" என்று கிசுகிசுத்தான்.

"என்ன உளறுகிறாய் மடப்பையனே?" என்றவள், தொடர்ந்து, "நேற்று இரவு எண்ணியபோது நாற்பத்தியொன்பது தானே இருந்தது" என்றாள்.

அவன் விம்மத் தொடங்கியதைக்கண்ட அவள் அன்பாக அவனை அணைத்துக் கொண்டே "கவலைப்படாதே மகன். நாங்கள் முட்டைகளை விற்கக்கூடிய நாள் விரைவில் வரும். அப்போது நீ பள்ளிக்குப் போகலாம்" என்றாள்.

தமிழில்
வி.பி.யோசப்

(தொடரும்...)

# பொருண்மிய வாசல்

## உயிரியல் கட்டுப்பாட்டுக்கு "ரைக்கோ கிராமா"

பொருளாதாரத் தடை காரணமாக இரசாயனப்பீடை நாசினி மற்றும் உரவகைகள் தடைசெய்யப் பட்டிருந்தது யாவரும் அறிந்த உண்மை. அந்தக்காலத்தில் இரசா யன உரங்களுக்கு மாற்றீடாக பயிர முது பசளையும் பீடைக்கட்டுப்பாட் டுக்கு மாற்றீடாக இந்தியாவில் இரு ந்துகொண்டு வரப்பட்ட "ரைக்கோ கிராமா" என்ற பீடைக் கட்டுப்பாட்டு ஒட்டுண்ணிகள் ஆகியவற்றை பொருண்மிய மதியுரையகம் அறி முகம்செய்தது. அனேகமான விவ சாயிகள் இதன் மூலம் நன்மை அடைந்தனர்.

1999ஆம்ஆண்டு ஐயன் குளம், வினாயகபுரம் துணுக் காய்ப்பகுதிபோன்ற இடங்களில் 20ஏக்கர் காணியில் சுழற்சிமுறை யில் பரீட்சாத்தமாக முன்னணி விவசாயிகள் மூலம் வெற்றிகண் டனர். அப்போது தொடக்கம் இன்று வரை இத்திட்டத்தை நடைமுறைப் படுத்திவருகின்றது.

பயிரைத்தாக்கும் பீடைகளை உயிர் வாழ்வின் மூலம் கட்டுப்படுத் தும் முறை உயிரியில் கட்டுப்பாடு எனப்படும். விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பூச்சிகளான, ஒட்டுண்ணிகள், இரைகௌவிகள், இயற்கை எதிரி கள் நோய்எதிரிகள் பயன்படு கின்றன. இவற்றின் மூலம் மலிவாகவும இலகுவாகவும் திறமையாகவும் கட்டுப்படுத்த முடியும். இந்த அடிப் படையில் முதற்கட்டமாக "ரைக்கோ கிராமா"என்றஒட்டுண்ணிகள் வளர்க் கப்படுகின்றன.

இந்த ஒட்டுண்ணிகள் எமது பிரதேசத்தில் முன்பு காணப் பட்டபோதிலும் தற்போது இரசாய னப் பீடை நாசினி பாவிப்பதால் அழிந்துவிட்டன. இரசாயனப்பீடை தடைபபட்ட காரணத்தினால் விவ சாயிகளின் நன்மைகருதி "ரைக்கோ கிராமா" கிராம ஒட்டுண்ணிகள் அறி முகம்செய்யப்பட்டது.

பயிரைத்தாக்கும் பீடை களின் தாய்ப்பூச்சி காணப்படுமாயின் இந்த ஒட்டுண்ணிகளை வாங்கி வயல்களில் விடுவதன் மூலம் பூச்சித் தாக்கத்தைக்கட்டுப்படுத்த முடியும். "ரைக்கோ கிராமா" ஒரு முட்டை ஒட்டுண்ணியாகும் ஏனைய பூச்சிகளின முட்டைகளை உணவாகக்கொண்டு அதில் தமது கருக்களைப்பதித்து அதன் மூலம் பெருக்கமடைகின் றன. இவற்றை நாம் வயலில் விடும் போது இவை பயிரைத்தாக்கும் பீடை இடும் முட்டைகளை தேடி உண்டு அவற்றில் கருவைக்கும். இதனால் பீடைகளின் எண்ணிக்கை அடிப்படையில் குறைந்தும் ரைக்கோ கிராமா ஒட்டுண்ணி பெருக்கமடைந்து பீடையைக்கட்டுப் படுத்தும்.

எமது வயல்களில் நன்மை செய்யும் பூச்சிகளும் இருக்கின்றன. தீமை செய்கின்ற பூச்சிகளும் இருக் கின்றன. நாம் இரசாயன மருந்து பாவிக்கும் போது இருவகைப் பூச்சி களும் அழிந்துவிடுகின்றன. ஆகவே நன்மை செய்யும் பூச்சிகள் அழியாமல் இருப்பதற்கு ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் மூலம் இதைக் கட்டுப்படுத்தலாம். தற்போது உலக நாடுகளிலும் கூட இரசாயனப்பீடை நாசினி பாவிப்பதைக்குறைத்து இந்த பீடை முகாமைத்துவத்தை கைக் கொள்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

பீடைகளின் எண்ணிக்கை பொருளாதார சேதாரமட்டத்தின் கீழ் இருக்குமானால் பயிர் பாதிப்பு அடை யாது. விளைச்சல் குறைவடையாது. பயிர் பாதுகாக்கப்படும். அதாவது "ரைக்கோ கிராமா" ஒட்டுண்ணியால் நெற்பயிரில் சந்துகுத்தி, இலை மடிச்சுக்கட்டி, இலைச்சுருட்டி, அறக் கொட்டியான் போன்ற பீடைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

மரக்கறிப்பயிர்களை எடுத் துக் கொண்டால் காய்துளைப்பான் புழு, தண்டுதுளைப்பான் புழுக்களால் பூரணமாக கட்டுப்படுத்தக் கூடியது. இதைத்தவிர பருப்புப்பயிர்களில் ஏற்படுகின்ற காய்துளைப் புழுவை கட்டுப்படுத் தக்கூடியது.

இந்த ரைக்கோ கிராமா ஒட்டுண்ணி 1/2 CC அட்டையில் இருந்து 8000இற்கும் மேற்பட்ட ஒட்டு ண்ணிகள் வெளிவரும். வெளிவரு கின்ற ஒவ்வொரு ஒட்டுண்ணியும் ஆக க்குறைந்தது 4 பீடைகளின் முட்டை களை உட்கொள்ளும். இதனூடாகவே தனது இனத்தைப்பெருக்குகின்றது. ஒருவாரத்தில் 4 மடங்கு ஒட்டுண்ணி கள் பயிரைப்பாதுகாக்கும். இந்த ஒட்டுண்ணிகள் உள்ள இடங்களுக்கு பீடை நாசினி விசிறக்கூடாது.

கமஇரசாயனங்கள் இருக் குமபோது உயிரியல் கட்டுப்பாட்டு முறை தேவையா? என பலர் கேட்க லாம். கம இரசாயனங்கள் யாவும் நஞ்சானது. இவற்றின் பாவனையால் எமது மண், நீர், காற்று சூழல் நஞ்சாகின்றது. நாம் உட்கொள்ளும் விவசாய உற்பத்திப்பொருட்கள் நஞ் சடைகிறது. இந்த இரசாயனப் பீடை நாசினி நஞ்சானது உடலில் தாக்க த்தை ஏற்படுத்துகிறது. கொஞ்சம் கொஞ்சமாக உடலைத்தாக்குகிறது சக்தியை இழக்கச்செய்து தொற்று நோய்கள், புற்று நோய்களை ஏற்படுத் துகின்றது. நாசினிகள் விசிறினாலும் பீடைகள் கட்டுப் படுவதில்லை. இந்த நஞ்சுநாசினியால் இயற்கைச்சம நிலை உணவுச்சங்கிலி பாதிக்கப்பட்டு எமது பிரதேசத்துக்குரிய நன்மைதரும் பல உயிரினங்கள் அழிந்து வருகின்றன. அப்படியானால் உயிரியல்கட்டுப்பாட்டு முறையின் நோக்கம்தான் என்ன?

1) கம இரசாயனப்பீடைநாசினியைக் கட்டம் கட்டாக இல்லாமல் செய் தல்.
2) சூழல்,நிலம்,நீர் காற்று நஞ்சாவது தடுத்தல்.
3) நுகர்வோருக்கு நஞ்சற்ற பொருட் களை கிடைக்கச்செய்தல்.
4) சூழலில் நன்மைதரும் பூச்சி களின் அழிவைத்தடுத்தல்.
5) எதிர்காலச் சூழலை நிலைத்து நிற்கச்செய்தல்.போன்ற இன்னும் பல சிறப்பு வாய்ந்த தன்மைகளைக் கொண்டுள்ளது.

எனவே விவசாயத்தில் ரைக்கோ கிராமாஎன்ற ஒட்டுண்ணி யைப்பயன்படுத்தி பீடைகளைக் கட் டுப்படுத்துவதன் மூலம் நஞ்சற்ற உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வது மட்டுமன்றி ஆரோக்கிய மான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும்.

(சி2833)

எஸ்.கே

# எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு



சமீபத்தில் சூழல் பாதுகாப்புத் தொடர் பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கருத் தரங்கு ஒன்று நடைபெற்றது. அதில் எடுக்கப் பட்ட தீர்மானங்களில் நீர் தொடர்பான விடயங் களில் சில பகுதிகளை இங்கு தருவது அவசிய மானது எனக்கருதுகின்றேன்.

சமீபகாலமாக நிலத்தடி நீர் தொடர்பான பல்வேறு அச்சுறுத் தல்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்துக் கிணற்று நீரின் தூய்மை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டுவருகின்றமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

01) கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் கிணறுகள் மாசடையா திருப்பதற்கான திட்டங்கள் திரட்டப்படவேண்டும்
02) குடாநாட்டில் காணப்படுகின்ற 400க்கு மேற்பட்ட நீர் நிலைகளில் நீர்ச்சுகாதாரம், அயற் சுகாதாரம் ஆகியவற்றை பேணுவதற்கு திட் டம் முன்மொழியப்பட்டன.

அவை வருமாறு:-

* மழை நீரை நேரடியாக பயன் பாட்டிற்கு உட்படுத்தல். மேலதிக மழை நீரை தரை கீழ் செலுத்த நடவடிக்கை எடுத்தல்.
* சிறிய, நடுத்தர, பாரிய மட்டத்திலான சிறந்த வடிகால்களை அமைத்து நீர்ப்பாவனையை முகாமை செய்தல்.
* கிணற்றுக்கும் மலசல கூடத்திற்கும் இடையே சொல்லப்பட்ட இடைத்தூரத்தை கவனத்திலெடுத்து அவற்றை அமைத்தால் தண் ணீரின் தரத்தை பராமரிக்க முடியும்.
* கழிவு நீர் வாய்க்கால்களை அமைத்து நீரைப்பயன்படுத்துவதுடன் அவ்வாய்க்கால்களைப் பேணல்.

பட்டினியால் வாடும் மக்கள் கூட்டத்தை, அரசியல் சுதந்திரம் திருப்திப்படுத்த முடியாது. -நிகோலாய் லெனின்.

## ஒரு நிகழ்வும், சில பதிவுகளும்....

# மெய்ப்பொருள் காண்பது அறிவு

01.08.2003 யாழ்ப்பாணம் கல்விச்சமூகத்தின் உயர்பீடம். கைலாசபதி அரங்கு, அரங்கம் நிறைந்தது, மேலதிக ஆசனங்களைக் கோருகிறது. உள்ளரங்கு வலது பக்க அரங்க முகப்பில் பேரறிஞர் கைலாசபதி அவர்கள் உயிரோடல்ல உயிரோட்டமுள்ள ஓவியமாய். ஓவியமே எனினும் உள்ளொளி பீறிட்டு உள்ளத்தைத்தொடுகின்றதாய். அருகில் உயர்பீட இலட்சினை 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' வாசகம் தாங்கியபடி.

அரங்கமையம் சிவப்பு 'பனர்' வியாசனின் உலைக்களம் என்ற வாசகம் தாங்கியபடி.

மாவீரர்களின் இரத்தத்தால் சிவந்த தேசத்தின் கொடிபோலவே உலைக்களமும் இரத்தக்குழம்பின் கொதிப்பாய் குமிழியிடுவதாய் அனைவரது பார்வையினையும் ஒருங்கே குவிக்கிறது.

குவிவுவில்லை போல குவிவு மையத்தை குறிவைத்திருப்பதாய் உலைக்களம். கொடியேற்றம், ஈகைச்சுடர் ஏற்றல், அமைதிவணக்கம்.... என நிகழ்வு விரிகிறது.

சிறப்புரை சித்தத்தில் பதிகிறது. மெய்ப்பொருள் அரங்கில் உலைக்கள வரிகள் தொட்டும் வேறும் சில வரிகள் தொட்டும் முடிச்சவிழ்க்கிறார் உரையாளர்.

"பாறை பிளந்து பயிர் விளைந்த பரம்பரை நாங்கள்"

யாழ்ப்பாணத்தான் துயரில் கனிந்தவன்; தோல்வியில் விளைந்தவன்; காயங்களால் உருவானவன்."

"எங்கள் போராளிகள்; மக்கள் இங்கேயே விழுவர், இங்கேயே வேர்விடுவர், இங்கேயே முளைப்பர். நிமிர்வர் காடாய் விரிவர்"

"ஆரியகுளத்தில் வெண் தாமரை பூக்குமா......"

"பூவரசம் வேலி பொறுக்காது"

"செம்பாட்டு மண்ணுக்குச் செருக்குப்பிடிக்காது"

"பனை வடலி பணியாது"

"விருந்தோம் பல்வேறு இணக்கப்பாடு வேறு..."

"பெருந்தன்மையை மதிக்கவும் 'மனமற்றவர்களுக்கு' பலம் வேண்டியிருந்தது"

"யாழ்ப்பாணம் தனது வரலாற்றை எழுதும்"

பூடகங்கள் இன்றி ஊடகங்களாய் புட்டு வைக்கையில் உணரும் உள்ளங்களில் ஊசலாட்டம்.

சர்வதேச அரங்க விரிப்பில் சர்வ நாடியும் ஒடுங்குகிறது. ஈராக், லைபீரியா.... பட்டியல் நீள்கையில் விபரம் நெருடுகிறது.

"ஆபிரிக்கா எங்களுக்கு அத்தை வீடு

அமெரிக்கா அக்கா வீடு

ஆம்ஸ்றோங்கோ அத்தை பையன்

டயானா எம் சொந்தமருமகள்"

அத்தை வீடு என்றாலும் அக்கா வீடு என்றாலும் அனுமதியில்லாமல் நுழையமுடியுமா? ஆனாலும் அவர்கள் வந்தால் எத்தனை பேர் ஆலவட்டம் போடத்தயார்.

"விரிந்த காலுள்ள கும்பிடு பூச்சி"

"அரியாலைக்கு மேலேவரும் நிலவு"

ஆபிரிக்காவிலும் தெரிகிறது"

"அதற்காக ஆபிரிக்காவில் இருந்துகொண்டு இது தான் அரியாலையில் வாறநிலவென்றா சொல்லமுடியும்? அரியாலை நிலவை அரியாலையில் தான் பார்க்க வேண்டும்."

"விட்டுக்கொடுப்பு என்பது வேறு. பண்போடு நடப்பது என்பது வேறு."

"எட்டு வருடங்களாய் எங்கெங்கோ தீனி பொறுக்கிவிட்டு முற்றத்தில் இறங்கும் கண்கொத்திப் பறவைகள்"

"மிதிக்கும் போது ஊமையான வாய்கள் கலைக்கும் போது கண்டிப்பதேன்"

மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தை முன்மொழிந்தோம். வழிமொழியவேண்டியவர்களெல்லாம் வாயடைத்துப்போனார்கள்."

"போராடும்போது சர்வதேசம் தலையிடவில்லை. சர்வதேச அங்கீகாரம் இல்லை என்றார்கள். தலையிட வைத்தபோது அமெரிக்கா வந்து இந்தியா இல்லாவிட்டால் முடிந்தது என்கிறார்கள்"

"அடிமடியில் கைபோய் பிரேசில் போல இலங்கை"

"கடன் கொடுத்தவர் கலங்குகிறார். குடுத்த காசு வரவேண்டும் என்றால் இன்னும் காசு போடவேண்டும். மிகுதியேனும் காப்பாற்றி விட"

"பேச வருவோரோ வாருங்கள் நல்ல உள்ளங்களை நாமும் தேடுகின்றோம்"

"உலக வங்கித்துணை நெறியாளர் நிசிமிசு அம்மையார் ஆனைவிழுந்தான் வருவதற்கு எத்தனை ஆட்களை ஆனையிறவில் விழுத்த - குடுக்க வேண்டியிருந்தது"

கேள்வி செவிப்பறைகளில் ஈயத்தைக்காச்சி ஊற்றுவதாய் உணர்தல். சர்வதேச சதுரங்க ஆட்டத்தை முன்னுணர்வுத்திறனோடு முன்கூட்டியே அறிந்து செயற்படும் செயலாற்றலில் நம்பிக்கை கனிந்து இனிக்கிறது.

தூரத்து உறவாய் இந்தியாவும் வருகிறது. உறவை உறவாய் வேண்டும் உள்ளம் விண் முட்ட விளையும் விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள், ஆள்வோர்கள் இதயங்களில் எட்டவேண்டிக்கொள்கிறது. வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ விரும்பும் மனது. உள்நாட்டு அரசியல் என்று உரையாளர் உள்நுழைக்கையில் இதயத்துடிப்பு இரட்டிப்பாகிறது.

"பசியால் நிறைந்த வயிறு"

"நிறைவாகும் வரை மறைவாக இரு"

"சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது"

"எங்களைப்புதைத்தவர் களைப் புதையுங்கள்"

"உங்களைப்புதைக்க முன்னர் புறப்படுங்கள்"

"நண்பர்களாயின் பேசுவோம்"

"அரசியல் ரீதியாக இனிய பழி வாங்கல்"

"பேசுங்கோ, பேசுங்கோ, ஏன் பேசினீர்கள்"

"கேடு கெட்ட அரசாங்கத்தை காப்பற்றவோ போனீர்கள்"

"திருவோடு ஏந்தவா நாம் போராடினோம்"

"அற்புதங்கள் மனிதர்களால் நடாத்தப்பட்டது"

வழிமொழிந்தவர்கள் வாயடைத்து நிற்கிறார்கள்"

"அரசியல்தீர்வு வைக்கேலாது, வைக்கேலாதது "

"நீ சீராக, உனக்கு இயலுமையாற்றல் எப்ப வருகிறதோ! வரும் வரையில் எங்களுடைய மக்கள் உன்னுடைய நுகத்தடியில் சிக்காது எங்களுடைய வாழ்வை நாங்களே வாழும் வகையில் நாங்களே பார்த்துக் கொள்ள ஒரு ஏற்பாட்டைச்செய்துதா"

"சட்டம் திட்டத்திற்காக அல்ல, திட்டத்திற்காகவே சட்டம் வகுக்கப்பட வேண்டும்"

"யாப்பெடுத்தவன் யாப்பாலேயே அழிவான்"

"தமிழ் மக்களுடைய பிரச்சினை 2 வரிகளில் இருக்கு. பார்த்து சீராய் பதிலை எழுது"

வன்னியில் அடைவைத்துப்பொரித்த குஞ்சு குருக்களோட தாய்கோழி நிமிர்ந்து வருகிறது."

"ஏமாற்ற அரங்கை அரங்கேற்றம் செய்யும் வாய்ப்பு"

"இப்படித்தான் இப்படித்தான் எங்களுக்கும் கோபம் கொப்பளிக்கும் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள் என்று உணரவைத்தது உண்மை"

"கொலையை கொலையால்தான் நிறுத்த வேண்டும். கொலையின் வலியை உணர கொலைசெய்ய வேண்டும்"

"புத்தரைப்பேச விடுங்கள்"

"சித்தாத்தருக்கு எல்லாம் தெரியும்"

"ஐயா உண்மையில் செய்ய விரும்பவில்லையா? செய்யமுடியாமல் இருக்கிறதா?'

"சாவது வாழ்வதற்காக"

"நிறைவான சாவு" டாம்போ சொன்னான்.

"திணிப்பதற்கு தீர்வு என்றால் தீர்விற்கு சிங்களத்தில் என்னபெயர்"

"புதையுங்கள் புதையுங்கள் ஆழக்கிடங்கெடுத்துப்புதையுங்கள். வானம் பொழிகின்ற பூமி விளைகிற வளமான - ஒரு நன்நாளில் புதைகுழிகள் எங்கள் வரலாற்றை எழுதும் நாயகர்கள் நீங்கள்"நிறுத்தம் கனக்கிறது. நிறுக்கிறது.

மெய்ப்பொருள்காண்பது அறிவுஇலட்சினை வாசகமும் இலட்சிய வீரத்தின் மெய்ப்பொருள் உரைப்பும் உயர் சமூகத்தின் உற்றுக் கேட்டலும் உருண்டு திரண்டு ஒரு கொடி பிடித்து வல்லரசையும் மெல்லும் வியட்னாம் போல்என்று தோன்றுகிறது.வெளிச்சம் போக முதல் போய்விடவேண்டிப்போகிறது இருப்பிடம் நோக்கி. இயல்பை வேண்டும் மனது.



**ஆதித்தநிலா**

# இலக்கியப்பகிர்வு

## கவிதையின் சொற்கள்

**கவிதைக்குச்சொற்கள் முக்கியமானவை.** அதேநேரம் அவை பலம் பொருந்தியதாக பளீர் என்று மின்னும் படியாக பன்முக ஆற்றல் கொண்டதாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுவது வழக்கம்.


எனவே தேவையில்லாமல் தலைகாட்டும் சொற்கள் சோற்றுக்குள் கடிபடும் கற்கள் போல. சொற்களின் மகிமை பற்றி தமிழக எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமி தரும் பின்வரும் உதாரணத்துடன் கூடிய ஒருகவிதையைப்பார்ப்போம்.

தமிழ்நாட்டில் "அக்கினிக்குஞ்சு" என்னும் சஞ்சிகையில் வெளியான ஒரு கவிதையை அவர் முதலில் சுட்டிக்காட்டுகின்றார்.

**"வேலியின் மீது**
**பூச்சியை கண்வைத்து**
**ஓணான்**
**ஓணானைக்கண் வைத்து**
**என் கவட்டை வில்"**

இதில் எதற்கு இத்தனை வார்த்தைகள்? "வேலியின் மீது" "என்" என்ற வார்த்தைகள் இங்கே என்ன பணிசெய்கின்றன? ஓணான் ஏன் இரண்டாவது தடவை வரவேண்டும்?.

இந்தக்கவிதையில் உள்ள அர்த்தத்தையே இதை விடச்சிக்கனமான வார்த்தைகளில் கூறமுடியாதா? கவிதை என்பதே வார்த்தைச்சிக்கனம் தான்.



**"பூச்சியில்**
**கண்வைக்கும்**
**ஓணானை**
**கண் வைக்கும்**
**கவட்டைவில"**

இதிலேயே அதன் அர்த்தம் வெளிப்பட்டுவிடவில்லையா? என்று கேட்கிறார் அவர்.

### நீலாவணன்

சின்னத்துரை என்ற இயற்பெயரைக்கொண்ட கவிஞர் நீலாவணன் 31.06.1931ல் மட்டக்களப்பில் பெரியதுறை நீலாவணையில் பிறந்து தனது 45 வயதில் 1975ம் ஆண்டில் காலமானார்.

28வருடகாலம் எழுத்துப் பணிபுரிந்த அவர் சிறுகதை, கட்டுரை, பாநாடகம், உருவகக்கதை, உரைநடைச்சித்திரம், விமர்சனம் என்று இலக்கியத்தில் பல்வேறு துறைகளில் தன் ஆளுமையை வெளிப்படுத்தினாலும் கவிதைத்துறையினிலேயே தன் முத்திரையை ஆழமாகப்பதித்தவர்.

அவர் காலமான பின்னரே "வழி" என்ற நூல் 1976ல் அவரது மனைவியால் வெளியிடப்பட்டது. எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் அவர்களால் நீலாவணன் அவர்களின் "வேளாண்மை" என்னும் குறுங்காவியமும் அதன் பின்னர் வெளியிடப்பட்டது.

மானாபரணன், கொழுவு துறட்டி, கே.சி.நீலாவணன், நீலவண்ணன், எறிகுண்டுக்கவிராயர், சின்னான்கவிராயர், இராமபாணம், எழில்சாந்தன் என்பன அவரது புனைபெயர்கள். இவைபெரும்பாலும் அவரது கவிதைகளுக்கு குறிப்பாக அரசியல்கவிதைகளுக்கேபயன்பட்டன.

"சிங்களக்கூலிகள்" என்னும் கவிதையில்

"சிங்கள மொழியெனும் சிறுநரி உன்னைத்தின்னவருவதோ நீயுரி" என்று அவர் கூறுகின்றார்.

**"சென்றே உலகைக் கருவாக்கி**
**நல்ல செந்தமிழில்**
**இன்பக்கவிதை பல செய்து**
**வாழ்தல் இலட்சியமே"** என்பது அவரது அடிப்படையாகும்.

"நீலாவணனின் படைப்புக்களை ஒருமித்து நோக்குமிடத்து மானிட மேம்பாட்டு விருப்பும் அநீதிகளையும் துயரங்களையும் துடைக்கும் வேட்கையும், ஊக்கமும் உள்வலியும் உண்மையிற்பற்றும் அவரிடம் என்றும் காணப்பட்டதை அவதானிக்கலாம். பிரதேசசூழல் உறவு தமிழ்பற்று முதலானவை அவரிடம் சிறந்து விளங்கின என்கிறார் பேராசிரியர் சி.தில்லைநாதன்.

கல்முனையில் ஒரு எழுத்தாளர் பரம்பரையை வளர்த்தெடுத்தவர் நீலாவணன். எம்.ஏ. நுஃமான், வி.ஆனந்தன், மு.சடாச்சரன், சத்தியன், கல்முனைப்பால், பாலமுனை பாருக் என்பவர்கள் அவர்களில் முக்கியமானவர்கள்.


**சிதம்பரன்**

சொல்வன்மை கொழுந்து விட்டு எரியும் நியாயம் . —லைமோன் பீச்சர்

# இனவொழிப்பு

பொன்

இனம், மதம், மொழி, கலாச்சாரம் ஆகியவை மக்களின் உணர்வுகளை இலகுவாகத் தூண்டிவிடக்கூடியவை. முற்காலத்தில் பூர்வ குடிமக்கள் வெவ்வேறு இனங்களாக ஒரு நாட்டில் வாழ்க்கை நடத்தினர். ஆப்கானிஸ்தானும், ஈராக்கும் , இந்தியாவும் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. தமது பலத்துக்கும் தம் இன மக்களின் எண்ணிக்கைக்கும் போட்டியாக இன்னொரு இனம் வளரத் தொடங்கும் போது அவ்வினங்களிடையே பகைமையும் சேர்ந்து உருவாகிறது. இரு இனங்களுக்கு இடையேயான பகைமைக்கு, சரித்திர வரலாற்றுத்தொடர்பு இருப்பின் அந்த வடுவானது இலகுவில் அவ்வினமக்களின் மனதை விட்டு அகலாது. இந்தபகைமை உணர்வை அரசியல்வாதிகள் தமக்குச்சாதகமாக தூண்டிவிட்டு அரச பதவியை கைப்பற்றுவதை நாம் பல நாடுகளில் கண்டுள்ளோம். இனத்துடைப்பு ( Ethnic Cleansing) என்பது ஒரு நாட்டில் வேண்டப்படாத இனத்தவர்களைச் சமூகத்தில் இருந்து இனப்படுகொலைகள் மூலமோ அல்லது பயங்கரவாதச்செயல்மூலமோ,



அல்லது அவர்களின் உரிமைகளைப்பறிப்பதன் மூலமோ இல்லாமல் செய்வது அல்லது வேறு இடத்திற்கு விரட்டி அடிப்பதாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹிட்லர் நடத்திய நாஸி ஆட்சியில் யூத இனத்தையும் ஒரு பால் சேர்க்கையில் ஈடுபட்டோரையும், ஊனமுற்றோரையும் சமூகத்தில் இருந்து அழிப்பதற்கு இரகசிய திட்டங்கள் தீட்டப்பட்டு அமுல் படுத்தப்பட்டது. அதில் மறைந்தவர்கள் பல்லாயிரம் மக்கள். “ஐரோப்பா ஆரிய இன மக்களுக்கே” என்ற பயங்கர தத்துவத்தின் அடிப்படையில் இனத்துடைப்பு நடந்தது. வடஅமெரிக்காவின் பூமி புத்திரர்களான வடஇந்தியரின் நிலங்கள், சொத்துக்கள் பறிக்கப்பட்டு சிறிது சிறிதாக் அவர்கள் இனத்தை துடைத்த பெருமை ஐரோப்பிய நாடுகளில் இருந்து வட அமெரிக்காவை ஆக்கிரமித்த வெள்ளையினத்தவர்களைச் சேரும். இது போன்று இனத்துடைப்பு பல நாடுகளில் பல ஆண்டுகளாக நடந்துவந்துள்ளது. இதில் 1915ல் துருக்கியர்கள் ஆமெனிய இனத்தவர்கள் மேல் நடத்திய இனவொழிப்பு, 1970ல் கெய்மர் ரூஜ்களால் பொல் பொட் என்பவன் தலைமையின் கீழ் கம்போடியாவில் நடத்திய இனத்துடைப்பு, 1994ல் பொஸ்னிய முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த படுகொலைகளும் , கடந்த சில தசாப்தங்களாக சிறிலங்காவில் பயங்கரவாதத்தை ஒழிக்கப்போகிறோம் என்ற காரணத்தைக்காட்டித் தமிழ் இனத்திற்கெதிராக நடந்த படுகொலைகளும். 1994ல் ருவாண்டா நாட்டில் டூட்சி இனத்தவர்களுக்கு எதிராகப் பெருபான்மை இனத்தவரான ஹூட்டு இனத்தவர்கள் நடத்திய படுகொலைகளும், ஈராக் நாட்டின் சர்வாதிகாரி சதாம் ஹூசையின் குர்திய மக்கள் மீது நச்சாயுதம் பாவித்து நடத்திய இன ஒழிப்பும் குறிப்பிடப்படவேண்டியவை. இதுபோல் இன்னும் ருஷ்யா , பங்களாதேஷ் , சீனா, ஆபிரிக்காபோன்ற பல நாடுகளில் நடந்த இனப்படுகொலைகளின் பட்டியல் நீண்டது

**இனவொழிப்பிற்கு சில காரணங்கள்..**

இனவொழிப்பு நடப்பதற்கு பல காரணங்களுண்டு. முதலாவது பல்லாண்டு காலமாக வளர்ந்து வந்த இனங்களுக்கிடையேயான பகைமை. இது முக்கியமாக, ஒரு நாட்டை ஆக்கிரமித்தல். அதன் பின்னர் அடக்குமுறை மூலம் ஆக்கிரமித்த இன மக்களை அடிமையாக நடத்தல், அவர்கள் பின்பற்றிய மொழி , கலாச்சாரத்தைச்சிதைத்தல் போன்ற செயலால் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக இனவொழிப்பு இடம்பெறுகிறது. இதனால் ஏற்பட்ட வடு மாறுவது கடினம். சிறுபான்மையினராகத் திகழும் இனமானது பல எதிர்ப்புகளுக்கிடையே முன்னேற வேண்டிய நிலை ஏற்படுகிறது. கடும் உழைப்பாலும் திறமையாலும்,

**இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹிட்லர் நடத்திய நாஸி ஆட்சியில் யூத இனத்தையும் ஒருபால் சேர்க்கையில் ஈடுபட்டோரையும், ஊனமுற்றோரையும் சமூகத்தில் இருந்து அழிப்பதற்கு இரகசிய திட்டங்கள் தீட்டப்பட்டு அமுல் படுத்தப்பட்டது. அதில் மறைந்தவர்கள் பல்லாயிரம் மக்கள்.**

கல்வியிலும் பொருளாதாரத்திலும் வணிகத்திலும் முன்னேறிய சிறுபான்மையினத்தவர் மேல் ஏற்படும் போட்டியும் பொறாமையும் இனஒழிப்புக்கு வித்திடுகிறது. இதற்கு அந்நியரின் பிரித்து வாழும் ஆட்சி முறையும் துணை போகிறது. ஒரு இனம் பின்பற்றும் மதத்தின் வளர்ச்சியும் மொழியின் வளர்ச்சியும் இன ஒழிப்புக்கு வித்திடுகிறது. இதனை ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியில் காணக்கூடியதாகயிருந்தது. அங்கு பௌத்த மதத்தினரும் இந்துக்களும் ஒரு காலத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்தார்கள். தலிபான் ஆட்சியில் பிற மத்தினருக்கு இடமிருக்கவில்லை. அதுவே கலாச்சாரசிதைவும் இன ஒழிப்பும் இடம்பெறக்காரணமாக இருந்தது. முஸ்லிம் இனத்தவரும் போர்த்துகேயரும் இந்தியாவை ஆக்கிரமித்தபோது மதமாற்றம் மூலமும் வழிப்பாட்டு ஸ்தலங்களை அழித்ததன் மூலமும் இனத்தவர்களுக்கிடையே ஒரு பீதியைக்கிளப்பி தம் இனத்தின் மதத்தை தழுவச்செய்தனர். இதுவும் ஒருவகை இனதுடைப்பேயாகும். அந்நியர்கள் ஒரு நாட்டை கைப்பற்றி ஆட்சி செய்யும் போது அந்நாட்டு இனங்களைப் பிரித்து வாழும் யுக்தியை ஒரு ஆயுதமாகப்பாவித்தனர். அவர்கள் ஆட்சி முடிந்தவுடன் இனங்களுக்கிடையிலான அவர்கள் உருவாக்கிய பகைமை முற்றி இனக்கலவரங்கள் தோன்றின

**ஆரியர் ஆக்கிரமிப்பும் சூத்திர - திராவிட இனவொழிப்பும்**

சிந்து நதி பள்ளத்தாக்கு நாகரீகம் கி.மு 1500 ஆண்டுகளுக்கு முன்னர் அமைதியான வாழ்க்கை வாழ்ந்த சூத்திர இன மக்களால் உருவாக்கப்பட்டது. கி.மு 1500ம் ஆண்டளவில் மத்திய ஆசியாவில் இருந்து வந்த ஆரிய இனத்தவர் சிந்து நதிப்பள்ளத்தாக்கில் வாழ்ந்த இன மக்களின் மேல் போர்தொடுத்து பல அழிவுகளை உண்டாக்கினர். முதல் ஆரிய ஆக்கிரமிப்பு இந்தி ரன் என்பவானால் நடாத்தப்பட்டது. ஆரியர்கள் என்றாலே இனத்துவேசம் கலந்த சொல்லாகவே கருதப்படுகிறது. தங்களை மிஞ்சிய வேறு இனமில்லை என்பதே அவ்வினத்தின் போக்கு. ஆரிய இனத்தின் தலைவனான இந்திரனை குடிகாரனாகவும், அவன் தன் தந்தையைத் தனது போதை தரும் பானத்தை திருடியதற்காக கொன்றதாகவும் சில வரலாற்றாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஹரப்பா மொகன்ஜதாரோ நகரங்கள் ஆரியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட போது சுமார் 50000 க்கு மேற்பட்ட ஆண்கள் பெண்கள் குழந்தைகள் ஈவிரக்கமற்று படுகொலை செய்யப்பட்டனர். இது வட ஐரோப்பிய நாட்டில் ஒரு காலத்தில் வாழ்ந்த வைக்கிங் இனத்தின் செயலைப் போன்றது. உயிர் தப்பிய சிந்து நதி மக்களின் ஒரு பகுதி கிழக்கு ஆசியாவிற்கும் இன்னொரு பகுதி தென்னிந்தியாவுக்கும் ஓடித்தப்பினர். தென் இந்தியாவில் குடிபுகுந்தவர்களே திராவிடர் என அழைக்கப்பட்டனர். இன்றும் வட இந்தியாவில் வாழும் மக்களின் ஒரு பகுதி தம்மை ஆரியரர்களாக கருதிக் கொண்டு மற்றைய இனத்தவர்கள் தம்மிலும் பார்க்க தாழ்ந்தவர்கள் என்ற போக்குடன் வாழ்கிறார்கள். இதற்கு வேதகால நூல்களும் துணைபோகிறது.

**ஐரோப்பாவில் இனவொழிப்பு**

பொஸ்னிய மக்களில் ஒரு பகுதி முஸ்லிம் மன்னர்களின் ஆக்கிரமிப்பால் மதம்மாறினர். அம் முஸ்லிம் பொஸ்னியர்களே காலப்போக்கில் பலிக்கடாவானார்கள். யூக்கோஸ்லோவியா என ஒருகாலத்தில் அழைக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதியே பொஸ்னியா. ஒரு இனம் வாழும் நிலப்பரப்பு, கனியவளமும் , செழிமையும் நிறைந்ததாக இருப்பின் அவ்வினம் வரண்ட பின் தங்கிய பகுதிகளில் வாழும் பெரும்பான்மையினத்தவரின் இலக்கிற்கு ஆளாகவேண்டிய நிலை ஏற்பட ஏதுவாகிறது. அவ்விடத்தில் பல காலமாக வாழ்ந்த இனத்தினரை துரத்திவிட்டு தாம் அவ்விடத்தை ஆக்கிரமித்து வாழ்வதற்கு வன்முறை மூலமும் படுகொலைகள் மூலமும் வழிவகைகளைக்கடைப் பிடிக்கிறார்கள். இனத்துடைப்பு என்ற பதம் 1990ம் ஆண்டு யூக்கோஸ்லோவிய நாட்டில் வாழ்ந்த பல இனமக்களுக்கிடையே நடந்த உள்நாட்டுப் போரின் போது இடம் பெற்ற இனப்படுகொலைகளில் இருந்து ஊடகவியலாளர்களால்





தோற்றுவிக்கப்பட்டது. யூக்கோஸ்லோவியாவில் தேசிய இராணுவம் குரொட்ஸ் இனத்தவர்களையும் முஸ்லிம் மக்களையும் தமது நாட்டிலிருந்து அகற்றப்பாவித்த பதம் இது. ஒருநாடு சமாதானமாக இயங்கினாலும் இனத்துடைப்பு அரசின் இனத்துவேச கொள்கைகளினால் இடம்பெறுகிறது. பல்கேரியாவிலிருந்து 1980ல் முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து துருக்கி நாட்டுக்குச்சென்றது இதற்கு ஒரு உதாரணமாகும். 1984ல் பல்கேரியாவில் ஆட்சிபுரிந்த பொதுவுடமைக்கட்சி முஸ்லிம்களுக்கு எதிராக இனத்துடைப்பை, கல்வி ,வணிகம் , வழிபாடு ஆகிய துறைகளில் கட்டுப்பாடுகளை விதித்ததன் மூலம் செயல்படுத்தியது. அத்ன் காரணத்தால் சுமார் 300,00 துருக்கியர்கள் பல்கேரியாவைவிட்டு துருக்கிக்கு புலம்பெயர்ந்தனர்.

பல இனமக்கள் வாழ்ந்த யூகோஸ்லோவிய நாடு சிதைந்த போது இனப்படுகொலைகள் தொடர்ந்தன. ஒரு நாட்டில் ஒரு இனத்தை மட்டுமே ஆட்சி செய்ய வேண்டும் என்ற கொள்கைகளை செயல் படுத்தி அந்நாட்டிலிருந்து பிற இனத்தவர்களை இல்லாமல் செய்யபலவழிகளை அரசு நாடியது. அதன் விளைவே இனப்படுகொலைகள். யூகோஸ்லோவிய் நாடு சிதைந்து சேர்பியா, குரொசியா போன்ற சிறு நாடுகளாக பிரிந்தபோது அந்நாடுகளில் ஒரு இனம் மட்டுமே வாழலாம் என்ற கொள்கையில் இனத்துடைப்புகள் நடைபெற்றன. சேர்பிய நாட்டில் குரொசியருக்கு இடமில்லை. அதே போன்று குரொசியாவில் சேர்பியருக்கு இடமில்லை. 1992ம் ஆண்டு சேர்பியாவில் 158,000 மக்கள் அகதிகளானார்கள். பொஸ்னியா தனிநாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டவுடன் 420,000 மக்கள் நாட்டை விட்டு பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர். வருட மத்தியில் இந்த எண்ணிக்கை 2.5 மில்லியனாக உயர்ந்தது.

**ஆபிரிக்காவில் கட்டுக்கடங்காத இனவொழிப்பு**

ஆபிரிக்க நாடுகளில் பல பூர்வீக மக்கள் வாழ்கிறார்கள். இவர்களிடையே வளர்ந்த பகைமை பல இனவொழிப்புகளுக்கு மூலகாரணமாக இருந்தது. தென்ஆபிரிக்கா, சிம்பாப்பே ஆகிய நாடுகளில் இனவொழிப்புக்கு முக்கியகாரணம் காலனித்துவ ஆட்சியே. பெரும்பான்மையினத்தவர்கள், மேற்கத்தியவர்களின் ஆட்சியின்போது அடிமைகளாக நடத்தப்பட்டனர். உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்படாமல் பலகட்டுப்பாடுகள் இருந்தன. அவர்கள் பிறந்த பூமி அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டது. நீண்ட காலப்புரட்சிக்குப்பின் பெரும்பான்மையினத்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் பழி தீர்க்கும் படலம் இனவொழிப்பு ரூபத்தில் உருவெடுத்தது. தாம் இழந்த விவசாய நிலங்களுக்கு சொந்தக்காரர்களான வெள்ளையர்களை வேட்டையாடினர். இது இப்போது சிம்பாபேயில் தொடர்ந்து நடந்து வருகிறது. ருவாண்டாவில் நடந்த கதை வேறு. ஆட்சியினத்தவர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் படித்தவர்களாகவும் பொருளாதாரத்தில் முன்னேறியவர்களாகவும் ருவாண்டாவில் வாழ்ந்து ஆட்சியைத்தம்கைக்குள் வைத்திருந்தனர். ஆனால் பெரும்பான்மையினத்தவர்களான ஹூட்சி இனத்தவர் விழித்தெழுந்த போது இனக் கலவரம் வெடித்து, ஆயிரக் கணக்கானோர் பலியானார்கள். இதுபோன்றே நைஜீரிய நாட்டிலும் இனத்துடைப்புகள் நடந்தது. ●

## நேர்நோக்கு

# அந்நியத்தலையீட்டுக்கு வழிவகுப்போர் யார்?

சிறிலங்காவில் வெளிநாடுகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாகவும் வெளிநாடுகளுக்கு சிறிலங்காவிலுள்ள அரசகாணிகளை மலிவு விலையில் விற்பனை செய்ய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி சிகலஉறுமய போன்ற கட்சிகளும் சிங்களஇனவாத அமைப்புகளும் கூறிவருகின்றன.

குறிப்பாக ஜப்பான், நோர்வே போன்ற நாடுகளின் ஆதிக்கம் சிறிலங்காவில் அதிகதித்து வருவதாக இவை கூறுகின்றன. பொதுசனஐக்கிய முன்னணி ஒருபடி மேலேபோய் இவ்விடயம் தொடர்பாக இந்தியாவை எச்சரிக்க முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரையும் அனுப்பி வைத்தது.

''கோழி கூவித்தான் பொழுது விடிகிறது.'' என எண்ணுவதுபோல தனது எச்சரிக்கை மூலம்தான் இந்தியா ஆபத்தை உணர்ந்து கொள்ளும் என அவரும் தனது அபார்யச்சங்கை புலிகளையும் சம்பந்தப்படுத்தி ஊதினார். பலன் எதுவும் கிடைத்ததா என்பது பற்றி பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் இப்பொழுது கிடைக்கும் தகவல்கள் கதிர்காமரின் விஜயத்தால் பெரிய பயனெதுவும் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவிற்கு .விளையவில்லை என்றே கூற வேண்டும்.

ஆனால் வெளிநாடுகளின் ஆதிக்கம் அதிகரித்துவிட்டதாக கூக்குரலிடுபவர்கள் இன்னுமொரு வெளிநாடான இந்தியாவிடம் சென்று நயமாகக்கூறியும் எச்சரிக்கை செய்தும் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்யுமாறு கோருவது கேலிக்குரிய விடயமாகும்.

1987 இல் ராஜீவ் காந்திக்கும்,ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்தியப் படை இலங்கையில் தரையிறங்கிய போது இதே நபர்கள் அதற்கெதிராகவும் கூச்சலிட்டனர். ஜே.வி.பியின் இரண்டாவது ஆயுதக்கிளர்ச்சி வடக்கு - கிழக்கில் இந்திய இராணுவத்தின் பிரசன்னத்திற்கு எதிர்நடவடிக்கையாகவே நடைபெற்றது. அதேவேளை இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்திற்கு எதிராக ஒப்பந்தம் கைச்சாத்தாகியவுடன் அதற்கெதிராக கொழும்பில் வீதிகளில் இறங்கிப்போராடியவர். இப்பொழுது இந்தியாவின் நலனுக்காக இந்திய இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் தலையிடவேண்டும் எனகோரி வருகின்றனர்.

உண்மையில் இதுகூட இந்திய நலனுக்கானதோ அல்லது சிறிலங்காவின் நலனுக்கானதோ அல்ல. இதனைப் பயன்படுத்தி தற்போதைய சமாதான முயற்சிகளை முறியடித்து அந்தக் குழப்பநிலையில் தாம் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் நோக்கிலானதே.

சமாதான நடவடிக்கைகளில் நோர்வேயை ஈடுபடுத்தியவர்கள் சனாதிபதி சந்திரிகாவும் அவரது கட்சியினருமே. அந்தச்சமாதான முயற்சிகளே இன்னும் தொடர்வதாக அவர் சில வேளைகளில் - குறிப்பாக உலக நாடுகளின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்புகளின் போது பெருமையடித்து வருகின்றனர். மறுபுறத்தில் நோர்வே தலையீடு செய்வதாகவும் அதற்கான அதிகாரங்களை நோர்வேக்கு வழங்கியுள்ளதாகவும் ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மீது குற்றம்சாட்டியும் வருகின்றனர்.

1994 இல் சமாதான கோசத்துடன் ஆட்சிப்பீடமேறிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பின்னர் தனது சமாதானத்திற்கான யுத்தத்திற்கு சர்வதேச ஆதரவு கோரி னார். விடுதலைப் புலிகளை சர்வதேச ரீதியாகத்தடை செய்யவேண்டும் என்று முழுமூச்சாக களமிறங்கினார். சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சரினதும் வெளிநாட்டுத்தூதரகங்ளினதும் முழுநேரவேலையாக புலிகள் எதிர்ப்புப்பிரச்சாரமே இருந்தது.

தனது சமாதானத்துக்கான யுத்தம் புலிகளை பலவீனப்படுத்தி அவர்களைத் தமிழ்மக்களிடமிருந்து பிரித்து விடும்போது தான் யுத்தத்தில் முழுவெற்றி பெறுவேன் என சர்வதேசத்தையும் நம்பவைக்கப்படாதபாடுபட்டார்.

ஆனால் யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவுகளைச்சரிக்கட்டவும் சிறிலங்காவின் நிறுவனங்களையும் சொத்துக்களையும் அந்நிய முதலீட்டாளர்களுக்கு விற்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

ஒரு கட்டத்தில் அந்நிய முதலீட்டாளர் சிறிலங்காவில் முதலீடு செய்யத் தயங்கும் நிலையும் உதவி வழங்கும் நாடுகள் கைவிரிக்கும் நிலையும் ஏற்பட்ட பின்தான் சனாதிபதி சந்திரிகா சர்வதேச அனுசரணையுடனான பேச்சுக்களுக்கு முன்வந்தார்.

ஆகமொத்தத்தில் சிறிலங்காவில் அந்நிய ஆதிக்கத்திற்கு காரணமாயிருந்தவர்கள் இவர்களே.

இன்றும் கூட இனப்பிரச்சினையை சமாதான நடவடிக்கைகள் மூலம் தீர்த்து வைக்கமுட்டுக்கட்டைபோடும் இவர்களின்செயற்பாடானது மேலும் மேலும் பல நாடுகள் இவ்விவகாரத்தில் தலையீடு செய்யவே வழி வகுக்கும்.

**வேலவன்**

---

## ஊக்கமாத்திரை



# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்

வாழ்க்கை என்பது மேடும் பள்ளமும் நிறைந்தது. தோல்விகள் தான் வெற்றிப் பாதையின் படிக்கற்கள் என்ற வார்த்தைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.ஆம் நாம் தோல்விகளைக் கண்டுதுவண்டுவிடாமல் அடுத்த அடியைச் சரியான பாதையில் வைத்து முன்னேறத்தொடங்க வேண்டும். இதுவே வெற்றிக்கு எம்மை இட்டுச் செல்லும்.

எந்தத்தொழிலையும் மனம் வைத்துச்செய்தால் நம்மால் விரும்பமுடியும். ஆம்! நாம் விரும்புகிறபடி அதை அமைத்துக்கொள்ளமுடியும். முடியாது என்ற வார்த்தை என் அகராதியில் கிடையாது என்று உலக மாவீரன் கூறினான். இன்று எமது வீரத்தலைவரும் இதையே கூறுகிறார்.

ஏதோ ஒரு தொழிலைச் செய்யவேண்டும் என்று குறிப்பிட்ட ஆசைகள் ஒவ்வெருவர் மனதிலும் இருப்பது இயல்பே. எமது இனம் டாக்டர், இஞ்சினியர், அக்கவுண்டன், இப்போது சில காலமாக கணனிவல்லுநர் என்று ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளே சுற்றிக்கொண்டிருக்கிறது. உயர்வான வேளாண்மை, விவசாயப்பக்கம் முதலில் சிந்திப்பதேயில்லை.

எல்லோரும் டாக்டர்களானால் அப்புறம் யாருக்கு வைத்தியம் செய்வது? இப்படியான பல காரணங்களால் நாம் விரும்பும் தொழில் நம் பிடிக்குள் அக்ப்படாமல் போய்விடவே, நாம் பிறிதொரு தொழிலை செய்யவேண்டி ஏற்படுகின்றது. அதற்காக மனம் சலித்து சோர்வடைந்துவிட்டால் வாழ்க்கையே தோல்வியில் முடிந்துவிடும். ஏன் பெரும்பாலான காதலிலும் கூட இந்தநிலை ஏற்படுகின்றது. இதற்காக நாம்தேவதாஸ் கோலம் பூண்டு அலைவதில் என்ன அர்த்தம்.

கிடைத்த தொழிலை, கிடைத்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு ஆர்வத்துடன் அத் தொழிலில் ஈடுபட்டவர்கள் வெற்றி பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். காதலித் தவளைவிட கட்டியவளுடன் சொர்க்க வாழ்வு வாழ்கின்றார்கள்.

ஆகவே எத்தொழிலைச் செய்தாலும் அதை மனநிறைவுடன் செய்யக்கற்றுக்கொள்ளுங்கள். செய்யும் தொழிலை மகிழ்ச்சியாக செய்திடவும், வெற்றிகாணவும் இதுஒரு வழி.

எனவே நீங்கள் நினைக்கிறபடியே வாழ்க்கையில் எல்லாம் அமையும் என்று கனவு கண்டு கொண்டிருப்பதைவிட, அமைந்ததை ஏற்றுக்கொண்டு மனப்பூர்வமான ஈடுபாட்டுடன் செயற்படுங்கள்.

வாழ்க்கையில் எல்லோருக்கும்பிடித்தமான தொழில் கிடைத்து விடுவதில்லை. எதிர்பார்த்தது கைநழுவி, எதிர்பாராதது கிடைத்தாலும் அதை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளத்தெரிந்தவனே புத்திசாலி. கிடைத்ததையும் பயன்படுத்தாமல், கிடைக்காததை எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தால் வாழ்வே நரகமாகிவிடும்.

நீங்கள் விரும்புகின்ற தொழில் உடனடியாக உங்களுக்குக்கிடைக்காவிட்டாலும் அதற்காக மனச்சோர்வடையாமல், கிடைத்ததொழிலில் இருந்து கொண்டே விரும்பிய தொழிலை அடைய நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால் கிடைத்த தொழிலை அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் செய்து வரவேண்டும். ஒரு கடைச்சிப்பந்தியாக இருத்தால் பாவனையாளர்களை கவரும் வண்ணம் அவர்களது தேவைகளை அறிந்து செயற்படுங்கள். எதிர்காலத்தில் நீங்கள் ஒரு கடைஉரிமையாளராகவே வரலாம்.

எனது அப்பா பத்து வயதில் கடைச்சிப்பந்தியாக தொழில் செய்யஆரம்பித்தார். 20 வயதில் ஒருகடையின் முதலாளியாகிவிட்டார். நானும் சிறு வயது முதல் டாக்டராக வரவேண்டும் என்று படித்தேன். முதல் மாணவனாக இருந்தும் தரப்படுத்தலால் தரைப்படுத்தப்பட்டு டாக்டராகும் வாய்ப்பை இழந்தேன். மருந்தாளர் வேலை கிடைத்தது. கிடைத்ததை ஏற்றுக் கொண்டு மனப்பூர்வமாக தொழில் புரிந்ததுடன், எனது முயற்சிகளையும் தொடர்ந்தேன். ஐந்தே வருடத்தில் பல்கலைக்கழக மருத்துவபீட கதவுகள் எனக்குத் திறந்தன. இன்று இருபதுவருடங்களுக்கு மேலாக வன்னியில் நிலைத்து நின்று நெருக்கடியான காலத்தில் நிறைவோடு சேவையாற்றுகின்றேன் - ஒரு டாக்டராக!

**Dr.ச. முருகானந்தன்.**

---

## இத்தால் சகலரும் அறிவது

# நீன்றுரைப்போம்...

"வன்னியில் சகலமக்களும் வளமுடன் வாழ்கிறார்கள். இங்கு அனைவரும் மோட்டார் சைக்கிள் வைத்திருக்கிறார்கள்.''

இவ்வாறு வன்னியில் பொதுநிகழ்வுகள் மற்றும் மரண அறிவித்தலை அறிவிக்கும் வாகனக்காரர்கள் கருதுகிறார்கள் போலும்.

"கந்தையா சுப்பிரமணியம் காலமாகிவிட்டார்" என்று கிளிநொச்சி சந்தையடியில் அறிவிக்கத்தொடங்கினால் சர்வதேச உறவுகளின் பட்டியல் வாசித்து கரடிபோக்குச் சந்தியில் தான் "திருநகர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்" என்று முடியும். முழுஅறிவித்தலையும் கேட்பதானால் மோட்டார் சைக்கிளில் துரத்திக்கொண்டு போனால் தான் சாத்தியம்.

இதனைவிட்டு குறிப்பிட்ட சந்திகளிலோ, பொதுஇடங்களிலோ நின்று ஒரு அறிவித்தலைச் செய்யலாமே? அப்படித்தான் முன்னர் செய்தார்கள். கூடிய இடத்திற்கு அறிவிப்புச் செய்தோம் என்று சொல்வதைவிட கூடியபேர் இந்த அறிவித்தலைக் கேட்டார்கள் என்பதுதான் முக்கியம்.


மரண அறிவித்தலுக்கு மட்டுமல்ல பொது நிகழ்வுகள் குறித்தும் இந்த நடைமுறையைக் கையாண்டால் என்ன? ஒரு அறிவித்தல் வாகனத்தை சைக்கிளில் துரத்திச் சென்று கேட்டபின் களைப்புடன் எழுப்பும் வினாஇது.

**சங்கர்**

---

துக்கம் சிறந்தது. மரணம் துக்கத்தை விடச்சிறந்தது. ஆனால் பிறக்காமல் இருப்பது எல்லாவற்றையும் விடச்சிறந்தது. -ஹெய்ன்





காசி ஆனந்தன்

# வளைவு

ஐந்தில்
வளையாதது
ஐம்பதில்
வளையுமா?

பழமொழி
சொல்லியே
வளைத்துவிட்டோம்
ஊரை.

எப்போதும் போல் -

நெஞ்சக்குழி
நின்று
வீட்டு வாசலில்
வளைந்தே
கிளம்புகிறது
பிச்சைக்காரனின்
கதறல்.

நிமிர்வதாய்
இல்லை
இன்னும்
எங்கள்
ஊரில்
தாலிக்கு
வளைந்து
கழுத்தை தந்த
பெண்மை.

கூனிக்குறுகி
வளைந்தே
கிடக்கிறது
நெடுங்காலமாய்
சேரியின்
குடிசை
முதுகு.

வளைவில்தான்
எத்தனை
வகை
ஆங்கிலத்தின்
காலை
வளைந்து
முத்தமிடுகிறது
நேற்று
ஆங்கிலேயனை
எதிர்த்து
நிமிர்ந்த
தலை.

தலைவர்கள்
முன்
மக்கள்
வளைய
வருமானவரி
அதிகாரி
முன்
வளைகிறார்கள்
தலைவர்கள்
பார்க்கிறேன்....

மிகவும்
பொருத்தமான
நினைவுச்
சின்னங்களாய்....

தலைவர்கள்
பெயரில்
வளைவுகள்
ஊரில்.

காலம்
தாழ்த்தாமல்
திருத்தி
எழுதத்
தோன்றுகிறது -

ஐந்தில்
நிமிராதது
ஐம்பதில்
நிமிருமா?



4ம் பக்கத் தொடர்ச்சி...

அச்சமுமாய்த்துளாவின. இராணுச்சப்பாத்துக்கள் தெரிந்தன. தோளில் இருந்த துவாய்த்துண்டை விரித்து அப்பா படுப்பதும் தெரிந்தது. அப்பாவின் முகத்தில் அசாதாரண அமைதி. அப்பாவின் ஏக்க விழிகள் பிள்ளைகள் இருந்த திசையை ஒரு தடவை பார்த்தன. அதன் பிறகு அப்பாவின் தலையை ஒருவன் நிலத்தோடு சேர்த்து அழுத்திப் பிடிப்பது மட்டுந்தான் தெரிந்தது. சொற்ப நேரத்தில் அவர்கள் மட்டுமே திரும்பி வந்தார்கள். அப்பா திரும்பப் போவதில்லை என்பதை அவர்கள் கைகளிலிருந்த முரட்டுக்கத்திகளின் குருதிச்சொட்டுகள் சொல்லின.

அப்பாவைக்கொன்று விட்டார்கள். அப்பா பாவம் பிள்ளைகளுக்காக மாடாய் உழைத்த அப்பா, உயிர் பிரியும் இறுதிக் கணத்திலும் பிள்ளைகள் உயிர் தப்பிவிட வேண்டும் என்று தான் அப்பா நினைத்திருப்பார். இருந்த நிலையில் நிலத்தோடு சரிந்து பிள்ளைகள் இருவரும் அழுதார்கள். புவனேஸ்வரிக்கு அப்பாவைப்பார்க்க வேண்டும் போல் இருந்தது. அப்பாவை அவர்கள் குற்றுயிராய் விட்டு வந்திருந்ததால் - அப்பா "தண்ணி-தண்ணி"என்று கேட்பது போல் பிரமை தட்டியது. ஆனால் எழும்பிப்போக தைரியமில்லை அவளுக்கு. சுற்றிலும் கொடிய சர்ப்ப விஷம் பொருந்திய மனிதர்கள். - சற்று அசைந்தாலும் தன்னையும் கொன்று விடுவார்கள் என்று சாவுக்கஞ்சி அந்தப்பிஞ்சுப்பெண் கேவிக்கேவி அழுதபடி கிடந்தாள்.

ஒரு வெறியாட்டப் படலத்தை முடித்த பின்னும் அங்கிருந்து நகரும் எண்ணம் அந்த இராணுவக்கும்பலுக்கு இருக்க வில்லை. பொழுது இருண்டு மயானக்கிலி பரவத்தொடங்கியது. புவனேஸ்வரியின் அழுகையை கொச்சைத்தமிழில் அதட்டியவாறு கைக்கட்டுக்களை அவிழ்த்து விட்ட ஒரு இராணுவ வெறியன் மூவருக்கும் உணவுப்பொதி கொடுத்தான். அப்பாவைக்கொன்ற இரத்தக் கைகளால் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்கும் குரூரப்பரிகாசம். இது தான் சிங்களபௌத்தம்! உப்புப்புளி இல்லாத பண்டமும் சுவையாகத் தெரியும் பசி அவர்களுக்கு. ஆனாலும் எப்படிச்சாப்பிடுவார்கள்? வீட்டில்பிணம் கிடக்கும் போது அடுப்பில் உலையேற்றாத பாரம்பரியமல்லவா எங்களுடையது! அதுவும் இங்கே கண்ணுக்கு முன்னால் கொடூரச்சாவடைந்து கிடப்பது அவர்களின் குருதி மூலமல்லவா! தங்களை ஊட்டி வளர்த்த அப்பா பிணமாகக்கிடக்கும் போது பசி ஒரு குறையாகவா இருக்கும் பிள்ளைகளுக்கு.

அந்த மரணப்பொழுது மெதுமெதுவாய் கழிந்து கொண்டிருந்தது. புவனேஸ்வரிக்கு பக்கத்தில் வந்து சம்மணமிட்டு அமர்ந்தான் ஒரு படையினன். துப்பாக்கிக்கத்தியை எடுத்து விரல் தடவி அதன் கூர்மையை பரிசோதித்தவாறு அவளிடம் கொச்சைத்தமிழில் பேச்சுக் கொடுத்தான்.

அவளின் வலது கையைப்பிடித்து கட்டை விரலில் கத்தியால் மெதுவாக கீறிய படி கேட்டான் "பாப்பாவுக்கு புலி தெரியுமா?" சாவை மிக அருகில் உணர்ந்த அவளுக்கு ஒரு பதிலும் சொல்ல வரவில்லை. பெரு விரலில் வலிதெறிக்க அவளின் அழுகை வலுத்தது. "பாப்பா அழவேணாம். பயம் வேணாம். நாளைக்கு பாப்பா வீட்ட போகலாம்" சொல்லியவன் இப்போது அவளின் வலது கைமணிக்கட்டில் இரத்த வரிகளைக்கீறினான். அழுதால் தன்னைக்கொன்று விடுவான் என்ற பயத்தில் அழுகையை மென்று விழுங்கி வலியை முனகினாள் புவனேஸ்வரி.

மூன்று உயிர்களையும் மெதுமெதுவாய் உயிர் வதைசெய்தே இரவைக்கழித்துக்கொண்டிருந்தது இராணுவக்கும்பல். இரையாக்கிக் கொள்ளுமுன் பூனையின் முன் விளையாட்டுக்களால் வதையுறும் சுண்டெலியின் நிலையிலிருந்தார்கள் மூவரும்.

அதிகாலை மூன்று மணியளவில் அந்த இராணுவக் கும்பல் புறப்பட ஆயத்தமானது. தங்களை உயிர் பிழைக்க விட்டு போகப்போகிறார்கள் என்று இவர்கள் நினைக்க - கத்திகள் முளைத்த கைகளுடன் அவர்கள் சூழ்ந்தனர்.

சாவு தங்களை அண் மிப்பதைத்தெரிந்து கொண்ட மூன்று சீவன்களும் கையெடுத்துக்கும்பிட்டு கண்ணீர் பெருக்கி கால் பிடித்துக்கெஞ்சிக்கதறக்கதற வெட்டினார்கள் வெறியர்கள். ஒரு கத்தி சசிக்குமாரின் கழுத்தில் மிக ஆழமாக இறங்கியது. பீறிப்பாய்ந்த குருதி வெட்டியவனின் முகத்திலும் வழிந்தது. இன்னொருவனின் கத்தி கணேசண்ணனின் கழுத்தைப் பிளந்தது. புவனேஸ்வரியின் கழுத்தில் கத்தி இறங்கும் போதே எதேச்சையாக கத்தியின் விசையை எதிர்க்காது அதன் விசையோடு சேர்ந்து அவளும் விழுந்தாள். கழுத்திலிருந்து குருதி வழிந்தது. ஆனால் உயிர் வழிந்து விடவில்லை. அசைவெதையும் காட்டாது விறைத்துக்கிடந்தாள்.

தங்களின் தேர்ந்த வெட்டுக்களில் நம்பிக்கை மிகக்கொண்டு இரண்டாவது வெறியாட்டுப்படலத்தையும் முடித்துக்கொண்டு வெறிக்கூச்சல் எழுப்பிய படி அங்கிருந்து அகன்றது இராணுவக்கும்பல்.

சிங்களக்கூச்சல் தூர விலகும் வரை பொறுத்திருந்து தலையைத்தூக்கி அருகில்கிடந்த உடல்கள் இரண்டையும் தடவி அண்ணணைக்கண்டு பிடித்து அசைத்துப்பார்த்தாள். அவனில் ஒரு சலனமுமில்லை. புவனேஸ்வரிக்கு கழுத்திலிருந்து குருதி வழிந்து சட்டை தொப்பலாகியிருந்தது. தலையைச்சுற்றியது. தொண்டை வரண்டு தண்ணி விடாய்த்தது. எழுந்து உட்கார்ந்து கணேஸ்அண்ணனை அசைத்துப்பார்த்தாள். உயிரசைவு தெரிந்தது. தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்து கணேசண்ணனின் தலையைப்பிடித்து நிமிர்த்தினாள். வலுவின்றி தலை கெளித்து விழுந்தது. அண்ணனுக்கு அருகில் அமர்ந்து தோளைப்பிடித்து நிமிர்த்த முயன்றாள். முகம் அவனது முதுகு பார்க்கத்திரும்பியது. அவனது கழுத்து ஏறக்குறைய துண்டித்த நிலையில் இருந்தது. எந்தச்சந்தேகமும் இல்லாமல் அண்ணன் இறந்து விட்டிருந்தான். புவனேஸ்வரி தன் ஆசை அண்ணனை தடவித்தடவி அழுதாள் திக்குகள் தெரியாமல் மூடியிருந்த இருளுக்குள் அடுத்து என்ன செய்வது என்று அந்தக்குழந்தைப் பெண்ணுக்குப்புலப்படவேயில்லை.

அப்பா கிடந்த பற்றையையும் அண்ணனையும் மாறிமாறிப்பார்த்தாள். மீண்டும் அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அப்பாவையும் அண்ணனையும் அநாதைப்பிணங்களாக விட்டுப்போக அவளால் முடியவில்லை. ஆனால் அந்த இராணுவக்கும்பல் திரும்பவும் வந்து விடுமோ என்ற சாவச்சம் அவளை அங்கிருந்து துரத்தியது.

நம்பிக்கையை வர வழைத்துக்கொண்டு தன் பலம் முழுவதையும் பிரயோகித்து கணேசண்ணனைத்தூக்கி நிறுத்தினாள். தன் அண்ணனின் சாறத்தைக்கிழித்து அவரது கழுத்துக்கும் தனது கழுத்துக்கும் கட்டுப்போட்டாள். கணேசண்ணனின் தலை கெளித்துக்கெளித்து விழுந்தது. அவரால் அசையக்கூட முடியவில்லை. ஆனால் புவனேஸ்வரி விடாப்பிடியாக நின்று அவரைத்தூக்கி நிறுத்தி - ஆதரவாக அணைத்துப்பிடித்து நடத்தி - புலிகளின் காவலரண் ஒன்றிற்கு கொண்டு வந்து சேர்த்தாள்.

இரத்தமும் கண்ணீருமாய் பத்து வயதுப்பிள்ளை மனதில் துயர வடு விழுத்திய அந்த கொடிய இரவு புவனேஸ்வரியைப்பொறுத்தவரை விடியவே இல்லை. அதன் இருள் இன்னமும் அவள் மனதைக்கப்பியிருக்கிறது.

நன்றி- விடுதலைப்புலிகள்
குரல்- 88



# அனுமார் பதில்கள்

● **அனுமாரே! நிறைகுடம் தளம்பாது குறைகுடம் தளம்பும் என்கிறார்களே? வெறும்குடம் என்ன செய்யும்?**

சி.ராஜ்மோகன்,
திருகோணமலை.

பலே கில்லாடி ஆளய்யா நீர். ஆனால் ஒன்று நல்ல காரியங்களுக்கு உபயோகப் படுத்தமாட்டார்கள். அவ்வளவுதான்.

● **அனுமாரே! நீங்கள் ஜோக் அடிப்பதில் வல்லவராமே எனக்காக ஒரு ஜோக் தாருங்கள் ப்ளீஸ்!**

வசந்தி,
வட்டக்கச்சி.

திடீரென நோய்வாய்ப்பட்டு கிராமத்தில் ஒருவன் படுக்கையில் விழுந்து விடவே நகரத்திற்குச் சென்று ஒரு டொக்டரை அழைத்து வந்தார் ஊர்ப் பெரியவர். நிலமை மோசமாகியதால் அவர் இறந்து விட்டதாக கூறிச்சென்றார் டொக்டர்.

மறுநாள் கிரிகைகள் முடிந்து சுடலைக்கு நாலுபேர் பிணத்தைக் காவிச் சென்றனர். திடீரென பெட்டியைப்பிய்த்து எழும்பி தான் காவிச் செல்லப்படுவதை உணர்ந்த 'பிணம்'டேய் நான் சாகவில்லையடா! என்னை இறக்குங்கள் எனக் கத்தியது. அதற்குக் காவிச் சென்றவர்கள் இருவர் சொன்னார்களாம் ''பெரிய டொக்டரே சொல்லிட்டார் நீ செத்துப்போனாய் என்று. அவரை விட நீ பெரிய படிப்புப்படிச்சவனா? கிடவடா பட்டிக்காட்டுப்பயலே" என்று.

● **அனுமாருக்கு. காதலித்தால் கவிதை வரும் என்கிறார்களே. அப்போ காதலித்துவிட்டு விட்டால் என்னவரும் மழுப்பாமல் பதில் தாரும்?**

எம்.புயலரசன்,
உடையார்கட்டு.

காவல்துறை வருமய்யா காவல்துறை வரும்.

● **அனுமாரே வணக்கம். ஆசிரியர் கற்பிற்கும் போது மாணவர்கள் ஆசிரியர் கற்பிப்பதைப்பார்க்காமல் வேறு எங்கோ பார்க்கிறார்கள். இதன் காரணத்தைக்குறிப்பிடுங்கள்.**

இ.கேசவன்,
வட்டக்கச்சி.

இதுதான் சொல்வது எதிலும் கவர்ச்சி இருக்கவேண்டும்.

● **இப்போது கூட்டணிக்குள் இருசாரார் இருக்கிறார்களாமே?**

பிரபா,
சுவிஸ்.

ஓமோம். சறுக்கும் சாரார், சறுக்காதது போல் இருக்கும் சாரார். இரண்டு சரிதானே.

● **அனுமாரே! ஆனந்தசங்கரியாரை புலிகள் ஆலோசனைக்கு கூப்பிடவில்லையே ஏன்?**

வ.சுமன்,
கொக்குவில்.

அவர் சொந்த விடயமாக சொந்தக்காரர்களிடம சென்றமையால் அழைப்புக் கொடுக்க முடியாமல் போய்விட்டது போலும்!

● **சாடிக்கு ஏற்ற மூடி நல்ல உதாரணம் ஒன்று தாருங்கள் அனுமாரே?**

ச.மயூரன்,
திருகோணமலை.

ஒரு அறையில் கணவனும் மனைவியும் மட்டும். திடீரென மின்வெட்டு அறையில் ஒளி இல்லை. மெழுகுவர்த்தி ஒன்றை ஏற்றிவைத்தாள் மனைவி. கடும் புளுக்கம். மின்விசிறியை போட்டு விடுமாறு கூறினான் கணவன். மனைவி கூறினாள் மின்விசிறியைப் போட்டாள் மெழுகுவர்த்தி அணைந்து விடும் என்று. எப்படி இருக்கு மூடி.

● **நல்லூரிலே ஒரு நாள் திருவிழாவில் மட்டும் 50 பவுண் நகைகள் களவு போனதாமே. என்ன தோன்றுகிறது அனுமாரே?**

கார்த்திகேசு,
சாவகச்சேரி.

சரி கடைசி 50 பவுணாவது கறுத்தப்பவுண் என்ற பெயர் இல்லாமல் நாட்டுக்கு உதவப் போகுதாக்கும். அவர்கள் குத்தியாவது அரிசி ஆகின்றதா பார்ப்போம்.

● **டியர் அனுமார்! யாழில் தற்பொழுது ராணுவத்தினர் புதிதாக அழகானகாவலரண்களை அமைத்து வருகின்றனரே. பார்க்கும் பொழுது உமக்கு என்ன தோன்றியது?**

கலைவிழி,
நெடுங்கேணி.

குஞ்சியழகும் கொடுந்தாணை கோட்டழகும்... என்ற நாலடியாரின் வரிதான் நினைவில் வருகிறது. கடைசி வரியை மட்டும் துணிவு என்னும் அழகே அழகென்று மாற்றிக்கொள்ளும்.

● **ஆப்கானிஸ்தானில் பெண்கள் கால்பந்து ஆடும் படம் ஒன்றை அண்மையில் பார்த்தேன். வியப்பாய் இருந்தது.**

க.ரஜீவன்,
கரவெட்டி.

முன்னர் அவர்கள் தலிபான்களால் பந்தாடப்பட்டார்கள். இப்பொழுது அவர்கள் பந்தாடுகிறார்கள். இதில் வியப்பபென்ன.

● **அனுமாரே! வாழ்க்கையில் சோகம் என்பது ஏன் வருகிறது?**

கா.சுவேந்திரன்,
புதுக்குடியிருப்பு.

ஆங்கிலக்கவிஞன் தாம்ஸனின் ஒரு கவிதை.

இறைவன் உயர்த்திய
அபயக்கரத்தின்
நிழல்

சோகம் என்கிறார்.

● **அன்பின் அனுமாரே! தற்காலத்திற்கு பொருத்தமான சில வரிக்ள் சொல்லேன்?**

எம்.அபிராமி,
திருநெல்வேலி.


நாம் சமையலுக்காக அடுப்புகள் வைத்தோம். அவை நம்மையே விறகாக்கிக்கொண்டன.

மானத்தை மறைக்க ஆடைகள் அணிந்தோம். ஆடைகளே நம்மை நிர்வாணப்படுத்தின.

கலைமகள் காசு கொடுப்பவர்களுக்கு மட்டும் வீணைக் கச்சேரி நடத்துகிறாள். இவை அப்துல் ரகுமானின் வரிகள்.

---


# 14ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்
29-05-1969

வீரச்சாவு
29-08-1989

**வீரவேங்கை லிங்கம்**

(பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கன்)
பருத்தித்துறை

தாயக மீட்பில் உனையிழந்து
பதின்நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன.
ஆனாலும் உன் நினைவு
எம்மை விட்டு அகலவில்லை

உன்பிரிவால் வாடும்: பெற்றோர்,சகோதரிகள்,மருமக்கள், மற்றும் மைத்துனர்கள்
ராஜ்குமார்,கோகிலன்,ஜோன்சன்,
சிறிதரன்,கமலநாதன்,பராபரன்.

(3487)


---

# படத்திற்கு மெருகூட்டுங்கள் –33



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.


படத்திற்கு மெருகூட்டுங்கள் –33

.......................................................................................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................

பெயர் : ..............................................................
முகவரி : ..............................................................
..............................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# படத்திற்கு மெருகூட்டுங்கள் –32



இ.திலீபன்
கொற்றாவத்தை
வல்வெட்டித்துறை.

## பரிசுக்குரிய வரிகள்

விழிகளில் இன்னும் ஏன் ஏக்கம் - உங்கள்
நாவுகளில் ஏன் இந்தத்தாக்கம்
நங்கையரே வீறுகொண்டு எழுவீர் - மலரும்
விடுதலைக்கு வேதங்களாய் இருப்பீர்.

## பாராட்டுக்குரிய வரிகள்

*நாக்கில் சூலம் பாய்ச்சி*
*நாளும் அடிமையானாலும் சொல்*
*வாக்கில் தெளிவு இருப்பின்*
*ஏற்றம் பெற்றுய்யலாம் இனிது.*

க.இரத்தினசிங்கம்
கிளிநொச்சி.

*நாவினிலே வேலேந்தும் நங்கையரே - மேனியிலே*
*கந்தகத்தைக்கட்டியவள் வழிதனில்*
*நீர் கால் பதித்தால் விடிவு உமதாகும்*
*விரைந்திடுவீர் வேலோச்சும் மகளாக....*

கவிக்குயில்
தாளையடி

*மதத்தின் விளையாட்டு உம் முகத்தில் - கொடும்*
*இராணுவ வெறியாட்டம் எம் நிலத்தில் - மங்கையரே*
*நாவில் வேல் ஏறிய விதத்தில் - உமை*
*அடிமை கொள்வோனை கிழி இக்கணத்தில்.*

சி.சுபன்
கைவேலி

*இறைவன் வரம் தந்தாலும் - இங்கு*
*இனவாதி விடமாட்டான்*
*இதை உணர்ந்து போராடு - உமக்கு*
*இன்ப வாழ்வுண்டு ஈழத்தில்.*

சி.சி.செல்வராசா
முள்ளியவளை.

*நம் உறவுகள் சிறைக்குள்ளே*
*நாம் தட்டிக்கேட்டோம் வாயலே*
*ஆயினும் தள்ளப்பட்டோம் துயருள்ளே*
*அதனால் இதை தொடர்வோம்.*

த.சுமதி
விசுவமடு கிழக்கு

*நாவில் சூலாயுதம் ஏந்தி*
*நாம் நலமாய் வாழவல்ல*
*நாடே அமைதி பெற*
*நாடி நிற்கின்றோம் இறைவனை.*

கார்த்திக்
வட்டக்கச்சி

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு வழங்குகின்றது. கிளிநொச்சி.

---

செழிப்பு என்னை ஏழையாக்கி விட்டது. –ஓவிட்




தமிழீழத்தின் கடைசிமன்னன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவை வெற்றிகொண்ட 200வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வரலாற்றுக் கண்காட்சியை தொடக்கிவைத்துப்பார்வையிடும் தமிழீழ கல்விக்கழகப்பொறுப்பாளரும் கிளிநொச்சி அரச அதிபரும்.





மாவீரன் பண்டாரவன்னியனின் 200வது ஆண்டு வெற்றிவிழா கற்சிலைமடுவில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் உருவச் சிலையடியில் 26-06-2003 அன்று இடம் பெற்ற பொழுது கூடியிருந்த பொதுமக்களையும் சிலைக்கு மாலைஅணிவிப்பதையும் காணலாம்.



வெற்றிதின விழாவில் மாலை நிகழ்வுகள் முள்ளியவளை வித்தியானந்தக்கல்லூரியில் இடம்பெற்றபொழுது அருணாசெல்லத்துரையின் குருவிச்சிநாச்சியார் எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. முல்லைமணி வே.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதற்பிரதியை முல்லை மாவட்ட அரசஅதிபர் பெற்றுக்கொண்டார்.


**வன்னிப் பெருநிலப்பரப்பு வாழ் மக்களின் தங்கநகைத் தேவைகளை நீண்ட காலமாக நம்பிக்கை,நாணயத்துடன் நிறைவேற்றிவரும் ஒப்பற்ற ஸ்தாபனம்.**

# லாவண்யா
## JEWELLERY



இல.60, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

இல.45, பெரியகடை, மன்னார்.
தொலைபேசி:-023 2232043

Laavanya

தொலை பேசி - 024 22484
தொலை நகல்- 024 20236.

(சி-8333)



# ExpoAir
your friend in the skies

எக்ஸ்போ எயார்





கொழும்பு பயணத்தின்
றோல்றெய்ஸ் இயந்திரத்தின்
பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்- 021-2223891, 021-2226297, 074 512666, 01-360291, 0712-348888, 0712-349999, 01-360290,

e-mail- jaffna@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

c-7974



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.